விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 13 சனிக்கிழமை (26.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 098

## உதவி வழங்க ஐ.நா தயார்!

(கொழும்பு)

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மெய்யான ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கி உதவத் தயார் என ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

உண்மையை அறிந்து கொள்ளும் சர்வதேச தினத்தினை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கை

23ஆம் பக்கம் பார்க்க....

## விமல் வீரவன்ஸ வெளியில் இருப்பதா?

(கொழும்பு)

விமல் வீரவன்ஸ மற்றும் குமார குணரட்னம் ஆகியோருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஒரே விதமானவை என்றாலும் குணரட்னம் சிறையில் இருக்கும் நிலையில் விமல் வெளியில் இருப்பதாக கடுவலை மாநகர முன்னாள் மேயர்ஜீஎச். புத்ததாச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற

23ஆம் பக்கம் பார்க்க....

# பல்லின மக்களுக்கும் இலங்கை சொந்தமானது

## அரச கருமங்களில் தமிழ்மொழி அவசியம் என கம்பன் விழாவில் ஜே.வி.பியின் தலைவர் உரை



(கொழும்பு)

இலங்கை ஓர் இனத்தின் நாடல்ல. இது பல்லின மக்கள் வாழுகின்ற நாடு. இந்த நாடு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் சொந்தமானதாகும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவரும் எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (23-ம் பக்.)

## நாட்டில் நிலவும் கடும் வெப்பத்தால் உடல் உறுப்புக்கள் பாதிப்படையும்

### மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் கடுமையான வெப்பம் நிலவி வருகின்றது.

இவ்வெப்பம் காரணமாக சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெப்பமான பிரதேசங்கள் மட்டுமன்றி நுவரெலியா போன்ற குளிர் பிரதேசங்களிலும் கடுமையான வெப்பம் நிலவி வருவதுடன விவசாய நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

23ஆம் பக்கம் பார்க்க....

## யுத்தம் பற்றிய விபரங்களை கண்டறிய வேண்டியது முக்கியம்

### சந்திரிகா வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற இறுதி யுத்தம் பற்றிய உண்மைகளை கண்டறிந்து கொள்வது மிகவும் முக்கியமானது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



23ஆம் பக்கம் பார்க்க....

## 177 ஏக்கர் காணி சம்பூரில் விடுவிப்பு

(கிண்ணியா)

திருகோணமலை- சம்பூரில் கடற்படையினர் வசமிருந்த 177 ஏக்கர் காணிகள் நேற்று உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

சம்பூர் மகாவித்தியாலயத்தை உள்ளடக்கியதாக, 177 ஏக்கர் நிலப் பகுதியே நேற்று கடற்படையினரிடம் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு தொடக்கம்

23ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல்போன என் மகன் உயிருடனேயே இருக்கிறான்

### கண்டுபிடித்து தருமாறு தாய் உருக்கம்

(பனிக்கன்குளம்)

எனது பிள்ளை உயிருடனேயே உள்ளார். அவரைக் கண்டுபிடித்து தாருங்கள்.

கடந்த கால யுத்தத்தில் எனது இரண்டு பிள்ளைகளை பறிகொடுத்து விட்டேன். மற்றைய மகன் காணாமல் போய்விட்டார். காணாமல்போன என்னுடைய மகன் உயிருடன் தான இருக்கிறார். அவரை கண்டுபிடித்து தாருங்கள் என பரணகம ஆணைக குழுவிடம் தாய் ஒருவர் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காணாமல்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின முதலாம் நாள் விசாரணைகள் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது சாட்சியமளித்த

24ஆம் பக்கம் பார்க்க....

## 120 பேரிடம் நேற்று விசாரணை

(பனிக்கன்குளம்)

காணாமல்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின விசாரணைகள் நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

நேற்றைய தினம் மாலை வேளை வரை இந்த ஆணைக்குழு

23ஆம் பக்கம் பார்க்க....

## 8 கிலோ கஞ்சா யாழில் மீட்பு கடத்திய நபர் தப்பியோட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், இராசபாதை வீதியில நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு பொலிஸார் மேற கொண்ட திடீர் சோதனை நடவடிக்

24ஆம் பக்கம் பார்க்க....

af ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழி
• பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
• எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
• இலவசம் : படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
• யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்
ஆரம்பம் விரைவில் : உடன் அழைத்துப் பதியவும்
021 222 8093 61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(4000)

## மன்னார் - சிலாபத்துறை கடற்கரைப் பகுதியில் 52 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா பொதிகள் மீட்பு



(பனிக்கன்குளம்)

மன்னார் - சிலாபத்துறை கல்லாறு கடற்கரை பகுதியிலிருந்து 52 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் வியாழக்கி

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஊடகவியலாளர்கள் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

தேசிய ஒற்றுமைக்கான ஊடக பயன்பாடு எனும் தொனிப்பொருளில் வடக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை பத்திரிகை பேரவையின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இப் பயிற்சிப்பட்டறையில் பிரதமவிருந்தினர்களாக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன், இலங்கை பத்திரிகை பேரவையின் தலைவர் கோகல வெல்லபந்துல, பதில் பத்திரிகை ஆணையாளர் நிரோசனா மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-9)

## சீன விமானப்படை அதிகாரிகள் இலங்கைக்கு இரகசிய விஜயம்



(கொழும்பு)

சீன விமானப்படையின் உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டு, இலங்கை விமானப்படை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

கொழும்புக்குப் பயணம் மேற்கொண்ட ஆறு பேர் கொண்ட சீன விமானப்படை அதிகாரிகள் குழுவுக்கு, சீன விமானப்படையின் அரசியல் ஆணையாளர் லெப். ஜெனரல் யூ சோங்பூ தலைமை தாங்கினார்.

இவர் சீன விமானப் படைத் தளபதிக்கு அடுத்த நிலையில் உள்ளவராவார்.

இந்தக் குழுவில், சீன விமானப்படையைச் சேர்ந்த இரண்டு மேஜர் ஜெனரல் தர அதிகாரிகளும் இடம்பெற்றிருந்தனர்.

இவர்கள் கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கை விமானப்படைத் தலைமையகத்தில், விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ககன் புலத்சிங்கள தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். (செ-12)

## டிப்பர் வாகனம் தீக்கிரை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி முறிகண்டி ஊடாக அக்கராயன் செல்லும் வீதியின் ஓராம கட்டை பகுதியில் டிப்பர் வாகனம் ஒன்று தீக்கிரையாகியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் இருந்து மணல ஏற்றிச்சென்ற வாகனத்திலிருந்து திடீரென அதிக புகை எழுந்துள்ளது. அதை அவதானித்த சாரதி வாகனத்தை நிறுத்தியுள்ளார்.

எனினும் வாகனத்தில் எழுந்த புகை திடீரென தீயாக மாறியது. குறித்த வாகனம் தீப்பற்றியமையை அவதானித்தவர்கள் தயினை கட்டுப்படுத்த எடுத்த முயறசி வெற்றியளிக்காத நிலையில் டிப்பர் வானத்தின் முன்பகுதி முற்றிலும் தீக்கிரையானது.

குறித்த தீ விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படாத நிலையில் டிப்பர்வாகனம் கடும் சேதத்திற்குள்ளாகியுள்ளது. (செ-12)


## வசந்த மண்டப அடிக்கல் நாட்டு விழா அழைப்பு

**அருள்மிகு வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தான வசந்தமண்டப அடிக்கல் நாட்டு விழா 26/03/2016 இன்று 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்விற்கு இந்திய துணைத்தூதுவர் ஆறுமுகம் நடராஜன் அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு வசந்த மண்டபத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைக்கவுள்ளார்.**

அருள்மிகு வெள்ளிப்பள்ளத்து
வீரகத்திப் பிள்ளையார் சேவா சங்கம்
வேரவில், பூநகரி

(C-4132)



## தேவை

முல்லைத்தீவுபகுதியில்தோட்ட வேலைக்கு உடனடியாக ஆள்தேவை. (C-4114)

**0771681697/ 0771133667**


## 20 துப்பாக்கிகள் மீட்பு

(புத்தளம்)

புத்தளம் - பாலாவி - கற்பிட்டி வீதி, பாலத்திற்கு அருகாமையில் இருந்து ரி - 56 ரக 20 துப்பாக்கிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைவாக குறித்த துப்பாக்கிகளை மீட்டதாக தெரிவிக்கப்பட்டுள்து.

குறித்த துப்பாக்கிகள் யாரோ ஒரு நபரினால் ஊந்துருளியில் கொண்டு வரப்பட்டு குறித்த பகுதியில் வீசப்பட்டிருப்பதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (செ-12)







**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532



## காணவில்லை

வற்றாப்பளை முள்ளியவளையைச் சேர்ந்த கதிரவேலு சண்முகம் என்பவர் 24.03.2016 அன்று வவுனியா மதியாமடுவில் இருந்து நடையாக வந்தவர் வீடு வந்து சேரவில்லை (வற்றாப்பளை). இவரது வயது 61, ஒல்லியானவர். சாரம் மட்டும் அணிந்திருந்தார். மனநிலை பாதிக்கப்பட்டவர். இவரைக் கண்டவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கோ அறியத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**T.P No : 077-0789614**
**077-1440463**

(C-4140)


## மரண அறிவித்தல்

### கதிரிப்பிள்ளை நடராசா



புன்னாலைக்கட்டுவன் தெற்கை பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி கொட்டகேனா கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை நடராசா 23.03.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தேவியின் பாசமிகு கணவரும் சந்திராதேவி (நோர்வே), சந்திரபவானி (புன்னாலைக்கட்டுவன்), அருள்நேசன் (நோர்வே), காலஞ்சென்ற சந்திரலோசினி மற்றும் ஆனந்தராஜன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, இரத்தினம், சின்னம்மா, செல்லத்துரை ஆகியோரின் சகோதரனும் கேசவன் (நோர்வே), மகேந்திரன், புஸ்பலட்சுமி (நோர்வே), நேசரஜனி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஜதுசிகா, ஜான்சிகா, கேதாரணி-சயந்தன் காலஞ்சென்ற லக்ஷன் மற்றும் பிருதுசன், அருஷன், ராகவி, கவின்லேஸ், சஜீவன் ஆகியோரின் பேரனும் வேணுஜன், சிவானி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 27.03.2016 ஞாயிற்றுக்கிழமை புன்னாலைக்கட்டுவனில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**தவபாலன் அனோஜன்**
**தவபாலன் சஜீபன்**
**(பேறாமக்கள்)**

**ஆயக்கடவை பிள்ளையார் கோயிலடி,**
**புன்னாலைக்கட்டுவன் தெற்கு**

(4016)


## முகவர்கள் தேவை

**செந்தமிழன்**
**டிஜிற்றல் ஸ்ரூடியோ.(Pvt) Ltd.**

போட்டோ & Full HD வீடியோ

எமது கல்லயத்திற்கு அனைத்து மாவட்டங்களிலும் முகவர்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு- 077-640 5572**

(4010)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

# ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தும் ஜே.வி.பி


உள்ளூராட்சி மன்றத் தேரதல் தொடர்பில் ஜே.வி.பி . ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் என்ன காரணத்திற்காக ஒத்தி வைக்கப்பட்டது என்பது குறித்து அறிந்து கொள்ளும் நோக்கில் ஜே.வி.பி. ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்திக்கவுள்ளது.

இதன்படி, எதிர்வரும் வாரங்களில் ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்திப்பதற்கான திகதி ஒன்றை ஒதுக்கிக் கொள்ள அண்மையில் கூடிய ஜே.வி.பியின் அரசியல் சபை தீர்மானித்துள்ளது.

இந்த சந்திப்பிற்கு முன்னதாக சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி அந்த தரப்பு கருத்துக்களை ஜே.வி.பி உள்வாங்கிக்கொள்ள உள்ளதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தலை ஒத்தி வைக்க அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை எனவும், அவ்வாறு தேர்தலை ஒத்தி வைத்தால் மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கி போராட்டம் நடத்த நேரிடும் எனவும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் நடத்திய ஊடக சந்திப்பு ஒன்றில் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# இந்திய - இலங்கை
# மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகான இந்தியாவுக்கு விரைகிறார் மகிந்த

(கொழும்பு)

***இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர இந்தியாவுககு பயணம் மேற்கொள்ள உள்ளார். மே மாதம் நடுப்பகுதியில் இந்தியா நோக்கி விஜயம் செய்ய எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இலங்கை-இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்திய அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் அமைச்சரின் இந்த விஜயம் அமையவுள்ளது. (இ-5)***



## மாணவி துஷ்பிரயோகம் ஆசிரியர் கைதானார்

கம்பளை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் பயிலும் மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி 10 வயதான பாடசாலை மாணவியை இந்த ஆசிரியர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளதாக சிறுமியின் தந்தை கம்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்தே சந்தேக நபரான ஆசிரியர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆசிரியர் 52 வயதானவர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-5)

## பொலிஸாரை அச்சுறுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் சதுரவுக்கு எதிராக வழக்கு

பொலிஸாரை அச்சுறுத்திய குற்றச்சாட்டின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்னவுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன கடந்த வருடம் ராகமையில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் கைது செய்யப்பட்டிருந்த தனது ஆதரவாளர்களை பார்வையிடுவதற்காக ராகம பொலிஸ் நிலையம் சென்றிருந்தார்.

அதன்போது கடமையில் இருந்த உப பொலிஸ் பரிசோதகர் நாடாளுமன்ற உறுப்பினரை அவமதிக்கும் விதத்தில் நடந்து கொண்டிருந்ததுடன், தகாத வார்த்தைகளையும் பிரயோகித்திருந்தார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதனையடுத்து ராகம பொலிஸாரும் தங்கள் பங்கிற்கு சதுர சேனாரத்ன தங்களை அச்சுறுத்தியதாக முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தனர்.

அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சதுரவின் முறைப்பாடு கிடப்பில் போடப்பட்டு, ராகம பொலிஸாரின் முறைப்பாட்டின் பேரில் விசாரணைகள் நடைபெற்றன.

தற்போது ராகம பொலிஸார் அடுத்த கட்டமாக நீர்கொழும்பு நீதிமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சதுரவுக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன ஏற்கனவே பிணை பெற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஏழுபேர் கைது

(கொழும்பு)

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெசல்கமுவ ஓயா ஆற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ஏழு பேரை ஹற்றன் பொலிஸார் கைது செய்து ள்ளனர்.

இதன்போது, மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களை கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தேக நபர்கள் பலாங்கொடைப் பிரதே சத்தை சேர்ந்தவர்கள் என வும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## புகையிரதங்களுக்கான புதிய கால அட்டவணை

எதிர்வரும் 30ஆம் திகதி முதல் புகையிரதங்கள் பயணிக்கும கால அட்டவணையில் மாற்றங்கள கொண்டுவரப்படவுளள தாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும் பயணிகளின் தேவை கருதியே இந்த நடவடிக்கை மேற்கொளளப்பட்டதாகவும் திணைக்களம்தெரிவித்துள்ளது.

அத்துடன் புதிய கால அடடவணைகளானது பிரதான ரயில் மார்க்கங்கள், வடக்கு ரயில் மார்க்கம், கடற்கரை ரயில் மார்க்கம் மற்றும் மாத்தளை ரயில் மார்க்கம் ஆகிய மார்க்கங்களினூடாக பயணிக்கும் ரயில்களுக்கே புதிய கால அட்டவணைகள் வெளியிடப்பட்டுள்ளதாக புகையிரத போக்குவரத்து அதிகாரி விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்கான சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், தேவை ஏற்படின் இதில் மாறற்றங்கள் கொணடுவரப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

## சுமித் மரணம் தொடர்பில் ஆணைக்குழு தீர்மானம்

எம்பிலிப்பிட்டிய இளைஞன் சுமித் ஜயவர்த்தனவின் சந்தேக மரணம் தொடர்பாக 10 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு தேசிய பொலிஸ்ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் நேற்று முன்தின கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தேசிய பொலிஸ்ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழு விசாரணை அறிக்கையை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் குற்றப்பத்திரிகை தயாரிகப்படவுள்ளதாகவும் ஆரியதாச குரே சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களில், தற்போது விளக்கமறியலில் வைகக்கப்பட்டுள்ள எம்பிலிப்பிட்டிய முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.சீ. தர்மதாசவும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதற்கான ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்துள்ளார்.

குறித்த இளைஞன் கடந்த ஜனவரி மாதம் 5ஆம் திகதி எம்பிலிப்பிட்டிய நகரில் நடைபெற்ற விருந்து வைபவம் ஒன்றில் பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்திருந்ததாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஜால தேசிய வனத்தை மக்கள் பார்வையிடலாம்

யால தேசிய வனத்தின் கல்கே பகுதியை இன்று முதல் மக்கள் பார்வையிடலாம் என வன ஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்காலிகமாக கலகே பகுதி மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் குறித்த கலகே பகுதியில் மிருகங்களின் எண்ணிக்கை அதிகம் காணப்படுவதால் பொதுமக்களுக்கு இதனை கண்டுகளிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளதாக வன விலங்கு பாதுகாப்பு பணிப்பாளர் சந்திரசிறி பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய வரட்சியினால் யால தேசியவனத்திற்கு எவ்வித பாதிப்புக்களும் இல்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## இன்னும் இரண்டு நாட்களுக்குள் உடுவே விசாரிக்கப்படவுள்ளார்!

உடுவே தம்மாலோக்க தேரரிடம் இன்னும் இரண்டு நாட்களில் வாக்குமூலம் பெறப்படவுள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பணிப்பின் கீழ் சட்டம் ஒழுங்குத்துறை அமைச்சர் சாகல ரட்நாயக்க இதற்கான உத்தரவை பொலிஸ்மா அதிபருக்கு விடுத்துள்ளார்.

நீதிக்கான அமைப்பின தலைவர்மாதுளுவாவே சோபித தேரர் இயற்கையாக மரணமாகவில்லை. அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கருத்தை உடுவே தம்மாலோக்க தேரர் முன்வைத்துள்ளார்.

இது குறித்து அவரிடம் வாக்குமூலம் பெறப்படவுள்ளது. (இ-5)

## மனைவியைக் கொன்றவருக்கு மரணதண்டனை விதித்த மன்று

(கொழும்பு)

தன்னுடைய மனைவிய்ய 2011.01.24ஆம் திகதியன்று கூரிய ஆயுதத்தினால் தாக்கி கொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த அவருடைய கணவனை, குற்றவாளியாக இனங்கண்ட பலப்பிட்டிய மேல் நீதிமன்றம், அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. அஹுன்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிராக்மணவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதானவருக்கே இவ்வாறு நேற்று முன்தினம் மரண தண்டனை விதிக்கபபட்டுள்ளது. (இ-5)

# தீர்க்கமான போட்டியில் ஆஸியிடம் வீழ்ந்து தொடரிலிருந்து வெளியேறியது பாகிஸ்தான்

## பெரும் எதிர்பார்ப்புக்கு உள்ளாகியிருக்கும் இந்திய - அவுஸ்திரேலிய போட்டி

ரி20 உலகக் கிண்ணத் தொடரில் மொஹாலியில் நேற்று நடைபெற்ற தீர்மானமிக்க போட்டியில் அவுஸ்திரேலிய அணி, பாகிஸ்தான் அணியை 21 ஓட்டங்களால் வீழ்த்தியது

இத்தோல்வியையடுத்து பாகிஸ்தான் அரையிறுதி வாய்ப்பை இழந்து தொடரிலிருந்து வெளியேறிய அதேசமயம் அவுஸ்திரேலியா தொடரில் தனது நிலையை தக்க வைத்துக் கொண்டது.

இதனால் இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றி பெறும் அணியே குழு 2இலிருந்து அரையிறுதிக்கு நுழையும் என்பதால் இப்போட்டியின் மவுசு அதிகரித்துள்ளது.

6ஆவது உலக ரி20 தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இத்தொடரில் நேற்று நடைபெற்ற 26ஆவது லீக் போட்டியில் முன்னாள் சம்பியன் பாகிஸ்தான் அணி, தனது கடைசி லீக்கில் அவுஸ திரேலியாவுடன் நேற்று மொஹாலியில் பலப்பரீட்சை நடத்தியது.

அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்துக்கொள்ள இரு அணிகளும் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கின.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் முதலில் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

தொடக்க வீரர்களாக ஆரோன் பின்சும் உஸ்மான் கவாஜாவும் களமிறங்கினர். கவாஜா 16 பந்துகளில் 21 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஆரோன் பின்ச் 15 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது இமாத் வாசிம் பந்து வீச்சில் ஆட்ட மிழந்தார். அடுத்து களமிறங்கிய டேவிட் வோர்னர் 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்து மீண்டும் ஏமாற்றம் அளித்தார்.

இதனை அடுத்து மக்ஸ்வெலும் அணித் தலைவர் ஸ்மித்தும் அணியை சரிவில் இருந்து மீட்டனர். மக்ஸ்வெல் 18 பந்துகளில் 30 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இத்தொடருடன் சர்வதேச கிரிக்




கெட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்த வோட்சன் களமிறங்கினார். வோட்சனும் ஸ்மித்தும் பாகிஸ்தான் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்து ஓட்டமழை பொழிந்தனர். இதனால் அவுஸ்திரேலியாவின் ஓட்டஎண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

20 ஓவர்கள் முடிவில் அவுஸ்திரேலியா 4 விக்கெட்களை இழந்து 193 ஓட்டங்களை குவித்தது. அதிகபட்சமாக ஸ்மித் 61, வோட்சன் 44 ஓட்டங்களும் எடுத்தனர். பாகிஸ்தான் தரப்பில் வகாப் ரியாஸ், இமாத் வாசிம் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

194 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான். தொடக்க ஆட்டக்காரர் அகமட் ஷெசாட் 1 ஓட்டத்தில் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார். மற் றொரு ஆட்டக்காரர் ஷார்ஜில் கான் அதிரடியாக ஆடி 19 பந்துகளில் 30 ஓட்டங்கள் எடுத்தார். தொடர்ந்து களமிறங்கிய லத்தீப்பும் (46), உமர் அக்மலும் (32) சிறப்பாக விளையாடி ஓட்டங்கள் குவித்தனர்.

இந்த கூட்டணியை லெக் ஸ்பின்னர் ஷம்பா பிரித்தார். அவர் அக்மலை 32 ஓட்டங்களில் போல்டாக்கினார்.

அடுத்து களமிறங்கிய அப்ரிடி இரண்டு சிக்ஸர்களை விளாசி விட்டு ஆட்டமிழந்தார். அதன்பிறகு களமிறங்கிய வீரர்கள் வேகமாக ஓட்டங்களைக் குவிக்க தவறியதால் பாகிஸ்தான் 20 ஓவர் கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 172 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதனால் அவுஸ்திரேலியா 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த தோல்வியால் பாகிஸ்தான் ரி20 உலகக் கிண்ணத் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

நான்கு ஓவர் வீசி 20 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்திய அவுஸ்திரேலியாவின் ஜேம்ஸ் போல்க்னர் ஆட்டநாயகனாக தேர்வு செய்யபபட்டார்.

குழு 2இன் நிலைவரப்படி நியூசிலாந்து அணி ஏற்கெனவே அரையிறு திக்கு தகுதி பெற்றுள்ளது.

பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகள் தொடரிலிருந்து வெளியேறியுள்ளன.

இந்நிலையில் இக்குழுவிலிருந்து 2ஆவது அணியாக அரையிறுதிக்கு யார் செல்வது என்ற தீர்மான மிக்க போட்டியில் அவுஸ்திரேலியா அணி, இந்திய அணியை நாளை இதே மைதானத்தில் சந்திக்கிறது. (க)

# இளைஞனை மோதித் தள்ளியபடி கடலுக்குள் பாய்ந்தது மோ.சைக்கிள்

## மூவர் படுகாயம்


(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியால் சென்ற இளைஞனை மோதி பின்னர் கடலுக்குள் பாய்ந்ததில் மூவர் படுகாயமுற்றதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் திக்கம் சந்தியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அல்வாய் வடமேற்கைச் சேந்தவர்களான குஞ்சன் உதயகுமரன் (வயது-50), தேவராசா தேவதர்சன் (வயது-26), சோமு தேவகுமார் (வயது-27) ஆகிய மூவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அல்வாய் பக்கமிருந்து சென்ற மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்ததாகவும் அவர்கள் திக்கம் சந்தியில் கடற்கரை வீதிவழியாக திரும்ப முற்பட்டபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து சோமு தேவகுமார் மீது மோதியதுடன் மோட்டார் சைக்கிளும் கடலுக்குள் பாய்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

இதில் படுகாயமடைந்த குஞ்சன் உதயகுமார் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (செ-60)









# சனசமூக நிலைய கட்டிடத் திறப்பு விழா

(புலோலி)

புலோலி வட கிழக்கு உத்திராவத்தை மத்திய சனசமூக நிலைய புதிய கட்டிடத் திறப்பு விழாவும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று 26ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு சி.கலைச் செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் க.ஜெயக்குமார் சிறப்பு விருந்தினராக புலோலி வட கிழக்கு கிராம சேவை அலுவலர் திருமதி விஜிதா சுதர்சன்,

கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற கிராம சேவை அலுவலர் திருமதி சா.தியாகராசா, புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ச.ஜெயச்சந்திரன் உட்பட பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (செ)

# குழு 1இலிருந்து அரையிறுதிக்கு நுழைந்தது மே.தீவுகள் தொடரிலிருந்து வெளியேறும் பரிதாப நிலையில் தெ.ஆ

தொடர்ச்சியான மூன்று வெற்றிகளுடன் ரி20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு ஜோராக முன்னேறியது மேற்கிந்தியத் தீவுகள்.

மறுபுறம் தென்னாபிரிக்காவின் நிலையே அந்தோ பரிதாபம். தொடரில் தென்னாபிரிக்கா நிலைபெற வேண்டுமானால், இலங்கையின் வெற்றி, தோல்வி தங்கியுள்ளது.

அதாவது இன்று இங்கிலாந்துடனான போட்டியில் இலங்கை வெற்றி வேண்டும். இதே இலங்கை அணி தென்னாபிரிக்க அணியுடன் 28ஆம் நடக்கும் போட்டியில் தோல்வியைச் சந்திக்க வேண்டும். இதனால் தென்னாபிரிக்க அணி மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளது.

ரி20 உலகக் கிண்ணத் தொடரின் 27ஆவது போட்டி நேற்று நாக்பூரின் விதர்பா மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் தென்னாபிரிக்க - மேற்கிந்திய தீவு அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் பந்துவீச்சை தெரிவு செய்தது. இதையடுத்து



தென்னாபிரிக்காவின் தொடக்க வீரர்களாக அம்லா மற்றும் டி ஹொக் களமிறங்கினர்.

மேற்கிந்திய தீவுகளின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் தென்னாபிரிக்கா முன்னணி வீரர்கள் விரைவாக வெளியேறினர்.

அம்லா ஒரு ஓட்டத்திலும், டு பிளசிஸ் 9 ஓட்டங்களிலும் ருசோ ஓட்டங்கள் எதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் அதிரடி ஆட்டக்காரர் டி வில்லியர்ஸ் களமிறங்கினார். சிறிது நேரம் தாக்குபிடித்த அவர் 10 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அப்போது தென்னாபிரிக்கா 4 விக்கெட் இழப்புக்கு 46 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஒரு பக்கம் விக்கெட்டுகள் சரிந்தாலும் டி ஹொக் நிலைத்து நின்று ஆடி ஓட்டங்களை உயர்த்த முயன்றார்.

எனினும் அவருக்கு ஏற்ற துணை அமையாததால் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸர் உட்பட 47 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டி ஹொக் ஆட்டமிழந்தார்.

இறுதியில் டேவிட் வீஸ் மற்றும் கிறிஸ் மோரிஸ் ஆகியோரின் பொறுப்பான ஆட்டம் காரணமாக 20 ஓவர்கள் முடிவில் தென்னாபிரிக்கா 122 ஓட்டங்களை எடுத்தது.

மேற்கிந்திய தீவுகள் தரப்பில் ரசெல், ஹெய்ல் மற்றும் பிராவோ தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பின்னர் 123 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்திய தீவுகள் அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக ஜோன்ஸன் சார்ள்ஸ் மற்றும் கிறிஸ் கெய்ல் களம் புகுந்தனர்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஹெய்ல் 4 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்ததால் ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர்.

பின்னர் வந்த ஃபிளட்செர் ஒரு சிக்சர் உட்பட 11 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்து சார்ள்சுடன் சாமுவேல்ஸ் கைகோர்த்தார். இருவரும் பொறுப்புடன் விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தனர்.

இந்நிலையில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 32 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சார்ள்ஸ் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த பிராவோ 8 ஓட்டங்களிலும், ரசெல் 4 ஓட்டங்களிலும் சாமி ஓட்டங்கள் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர்.

இதனால் தென்னாபிரிக்காவின் பக்கம் வெற்றி வாய்ப்பு திரும்பியது. எனினும் சாமுவேல்ஸ் இறுதிவரை போராடினர்.

19 வது ஓவரில் சாமுவேல்ஸ் 6 பவுண்டரி உட்பட 43 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

கடைசி 6 பந்துகளுக்கு 9 ஓட்டங்கள் எடுத்தால் மேற்கிந்திய தீவுகள் வெற்றி என்ற நிலை ஏற்பட்டது.

அதன்போது கடைசி ஓவரின் 2வது பந்தில் கர்லொஸ் சிக்சர் அடித்து பதற்றத்தை தணித்தார்.

இறுதியில் 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றது.

இதன் மூலம் அந்த அரையிறுதி வாய்ப்பையும் பெற்றது.

போட்டியின்ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் சாமுவேல்ஸ் தெரிவானார். (க)

# தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்- இல. 04

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

பகுதி-I விடைகள்

(25.03.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

| | | | |
|---|---|---|---|
| (01) 2 | (11) 1 | (21) 2 | (31) 1 |
| (02) 3 | (12) 2 | (22) 1 | (32) 2 |
| (03) 3 | (13) 3 | (23) 3 | (33) 2 |
| (04) 2 | (14) 3 | (24) 1 | (34) 3 |
| (05) 1 | (15) 3 | (25) 2 | (35) 2 |
| (06) 3 | (16) 2 | (26) 2 | (36) 2 |
| (07) 2 | (17) 3 | (27) 3 | (37) 3 |
| (08) 1 | (18) 2 | (28) 3 | (38) 2 |
| (09) 3 | (19) 3 | (29) 2 | (39) 2 |
| (10) 2 | (20) 1 | (30) 3 | (40) 3 |

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் பௌத்த மதத்தை இழிவுபடுத்தியுள்ளது

## ஓமல்பே சோபித தேரர் குற்றச்சாட்டு

வடமேல் மாகாண கல்வித திணைக்களம் பௌத்த மதத்தையும், வரலாற்றையும் இழிவுபடுத்தியுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் குற்றம்சுமத்தியுள்ளார். கொழும்பு ஊடகமொன் றுக்கு நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவிததார்.

வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் பரீட்சை வினாத்தாள் ஒன்று தொடர்பில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

தரம் 10க்கான பௌத்த சமய பரீட்சை வினாத்தாளில் பல்தேர்வு வினா ஒன்றில் உயிரிழந்தவர்களின் பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெயரும் உள்ளடக்கப்பட்டு விடைகள் வழங்கப்பட் டிருந்தன.

மாகாண கல்வித்திணைக களத்தினால் வழங்கப்பட்ட இந்த பரீட்சை வினாத்தாள் பிழை தொடர்பான பொறுப்பினை ஏற்று மாகாண கல்வி அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்.

மாகாணக்கல்வித் திணைக்களம் எவ்வித பொறுப்பும் இன்றி இவ்வாறு செயற்பட்டுள்ளது. தற்போது உயிருடன் இருக்கும் தலைவர் ஒருவரின் பெயரை இறந்தவர்களின் பட்டியலில் இணைத்தமை மகிந்த ராஜபக்ஷ விற்கு செய்த அவமரியாதையாகும்.

இந்த பரீட்சை வினாத்தாளை தயாரித்த, பிழை திருத்திய, அச்சிட்ட அனைத்து அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென சோபித தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பொன்சேகாவுக்கு கோத்தபாய பதிலடி

(கொழும்பு)

தனது இராணுவத் தலை மையகத்தை பாதுகாக்க முடியா மல் போன இராணுவத் தளபதி பொன்சேகா நான்தான் யுத்தத்தை முடிவுக்குக்கொணடு வந்தேன் என கூறுவதை என்னவென்று கூறுவது என முன்னாள் பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இராணுவத் தலைமைய கத்துக்குள் நுழைந்து இரா ணுவத் தளபதி மீது தாக்குதல் நடத்தும் அளவுக்கு பலவீனமடைந்திருந்த பாது காப்பை சரி செய்ய முடியா மல் போன ஒருவர் தான் இந்த சரத் பொன்சேகா என வும் அவர் தெரிவித்தார்.

பாரிய நிதி மோசடி தொடர் பான விசாரணைப் பிரிவுக்கு முகம்கொடுத்துவிட்டு நேற்று முன்தினம்ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையி லேயே அவர் இதனைத் தெரிவித்தார். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு விமா னப்படை, கடற்படை மற்றும் புலனாய்வுத் துறை போன்ற அமைப்புக்கள் பாரிய பங் களிப்பை வழங்கினர்.

இவற்றை மறந்து எப்படி ஒருவர் மாத்திரம் இதனைச் செய்தார் என்று கூறுவது.

2 ஆயிரம் வாக்குகளைக் கூட பெற முடியாமல் போன ஒருவருக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியும், அமைச்சும் கிடைக்கப் பெற்றால், இவ்வாறு தான் தங்களுக்கு உதவியவர்களுக்கு விசுவாசத்துக்காக எதையும் கூறுவார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தேசிய போசாக்கு அறிவூட்டல் நிகழ்வு

## தெல்லிப்பழையில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் தெல்லிப்பழை கலாசார மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கான தேசிய போசாக்கு அறிவூட்டல் நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி மு.ப 10 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற வுள்ளது. இதில் வளவாளராக டாக்டர் .பாமினி வசந்தராஜ் கலந்து கொண்டு கருத்துரை வழங்க உள்ளார். (இ

## செங்கை ஆழியான் நினைவு நிகழ்வு

செங்கை ஆழியான் பற்றிய நினைவு நிகழ்வானது எதிர்வரும் 2.4.2016 (சனிக்கிழமை) அன்று பிற்பகல் 3.30-6 மணிவரை கலட்டி எச்சாட்டி மகாமாரிஅம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆறுதல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலாலா தலைமையில்நடைபெறவுள்ளமேற்படிநிகழ்வில் "நினைவுகளில்செங்கை ஆழியான்" என்ற பொருளில் பல அறிஞர்கள் உரையாற்றவுள்ளனர். (இ


அன்பு வார்சகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
♦செய்திகள்
♦புகைப்படங்கள்
♦நிகழ்வுகள்
♦பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல

076 636 3378





# கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி
இராஜசிங்கம் தெய்வேந்திரன்



அன்பினால் அரவணைத்து
ஆறுதலாக நோட்டமிட்டு
மக்கள் தரம் அறிந்து மருந்து
அளித்திட்ட உத்தமனே
உம்மைப்போல் பாரினில் யார்
உளர், இனி சேவை செய்திட

அன்னாரின் ஆன்மா சாந்தி
பெறவும் அன்னாரின்
குடும்பத்தினர் மனசாந்தி
பெறவும் எம்பெருமானை
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி

கு. நித்தியானந்தன் குடும்பம்,
சாயிராம், 101, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(4009)


யாரிடம் பேசுவது?

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்

தினந்தோறும் காலை 9.00 முதல் பி.ப 1.00 மணிவரை
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored by Enlightenment Circle, UK
(C-3712)


# இராசி பலன்

26.03.2016
(பங்குனி 13, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு
திருதியை முன்னிரவு 11.40மணிவரை
சுவாதி பின்னிரவு 2.43மணிவரை
சுபநேரம் 3.14-4.44 மணிவரை
இராகுகாலம் 9.14-10.44 மணிவரை
காரைக்காலம்மையார் குருபூசை,
அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | | | |
| சுக், கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரேவதி | | |
| | | | குரு<br>ராகு |
| | சனி, செவ் | சந் | |

**மேடம்:** மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்களை வரவழைத்துக் கொள்ள வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், உடல்நலம் சீராகும், கடன்சுமை குறையும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெருமைகள் வந்து சேர கண்ணனை வழிபட வேண்டிய நாள், வாகன சுகமுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கடகம்:** வருமானத்தை அதிகரிக்கும் வழியைக் கண்டு கொள்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தூரதேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், மனை சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயமுண்டு, பகை விலகும், வெற்றிகள் குவிய கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி:** பணத்தேவைகள் பூர்த்தியாகும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு, மக்கள் போற்றும் வாழ்வமைய விக்னேஸ்வரனை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம், பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள்.

**விருச்சிகம்:** உறவினர்களின் வருகையுண்டு, காரிய அலைச்சல்கள் உருவாகும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** பொதுவாழ்வில் புகழ் கூடும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**மகரம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரும் நாள், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** சந்தோசங்கள் அதிகரிக்க கணபதியை வழிபட வேண்டிய நாள், ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.

**மீனம்:** குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை உருவாகும், தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

## பனங்கைப்பணிப் பயிற்சி நெறிக்கான ஆரம்ப விழா காரைநகர் பிரதேசத்தில்



பனை அபிவிருத்திச் சபையினால் காரைநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பனைசார் பல் தொழில் தொகுப்பு நிலையத்தில் பனங்கைப்பணிப் பயிற்சி நெறிக்கான ஆரம்ப விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

பனை அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ம.கியூபேர்ட் அன்ரனி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,

காரைநகர் பிரதேச செயலர் எல்லைக்குட்பட்ட வாழ்வாதாரம் தேடும் 25 பெண்கள் இப்பயிற்சிக்கு பயிற்சியாளர்களாக இணைந்துள்ளனர். இவர்களுக்கு பயிற்சியின் போது மூன்று மாதங்களுக்கு பயிற்சிக்கால கொடுப்பனவும், உற்பத்தியில் ஈடுபடுவோருக்கு உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளை, கௌரவ விருந்தினராக காரை நகர் பிரதேச செயலர் தே.பாபு, சிறப்பு விருந்தினராக பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க முகாமையாளர் கா. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

## ஆசிரியரின் வீட்டின் மீது தாக்குதல்; இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியரை தாக்கும் விதத்தில் ரவுடிக் கும்பலினால் ஆசிரியரின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட காடைத்தனமான தாக்குதலுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மாணவர்களின் நலன் சார்ந்து ஆசிரியர்கள் சில தண்டனைகளை வழங்கும்போது அதனை மாணவர் உரிமை மீறலாக நடைமுறைப் படுத்தும் நீதித்துறை மாணவர்களினால் ஆசிரியர்கள் தாக்கப்படக் கூடிய அளவுக்கு. அச்சுறுதல் விடுக்கும் தரப்பினருக்கும் உரிய தண்டனைகளை வழங்கி எதிர்காலத்தில் தமிழ் மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியம் சிதைவடையாத வகையில் முன்னுதாரணமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.


யாழ். இந்துக் கல்லூரியின் ஆசிரியரினை அச்சுறுத்தும் விதத்தில் வாள்களுடனும் பொல்லுகளுடனும் ரவுடிக்கும்பல் அவரது வீட்டில் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுத்து தாக்குதலில் ஈடுபட்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும்.

நீதித்துறையும் எதிர் காலத்தில் ஆசிரியர்கள் அச்சுறுத்தலின்றி பணியாற்றக்கூடிய சூழலை ஏற்படுத்தி கொடுக்க வேண் டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)




## விசமிகளால் வீடு தீக்கிரை





உயர்பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட காங்கேசன் துறைப்பகுதியில் உள்ள வீடு ஒன்று விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்தத்தின் பின்னர் நீண்டகாலமாக விடுவிக்கப்படாத நிலையில் இருந்த காங்கேசன் துறைப் பகுதியானது கடந்த 3 மாதகாலத்திற்கு முன்னர் பொது மக்கள் மீள் குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்டது.

இதனையடுத்து பொதுமக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று தமது வீடுகளை பார்வையிட்டு வருகின்றனர். இந்நிலையில் வீடு குறித்த வீட்டு உரிமையாளர் அண்மையில் வீட்டைப்பார்வையிட்டுச்சென்றுள்ளார்.

இதன்பின்னர் இரண்டு நாட்கள் கழித்து அந்நபர் தனது வீட்டினை பார்வையிடச் சென்றுள்ளார்.

ஆனால் அந்நபரது வீடு விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்ட நிலையில் இருந்துள்ளது. (இ-5)

## க.பொ.த. (சா/த) பெறுபேறுகள்-2015

**யா/விக்ரோறியா கல்லூரி சுழிபுரம்**

சூரியகுமரன் சேயோன்-9ஏ, ராசதுரை ஹரன்-9ஏ, திருவரங்கன் நகுல்ராஜ்-8ஏசி, விமலநாதன் கோபிதாஸ்-8ஏஎஸ், விஜயகுமார் ராகவன்-7ஏ2பி, சித்ரசேனன் கோபிகா-7ஏசிஎஸ், தனபாலசிங்கம் துஷ்யந்தி- 6ஏ3பி, பத்மநாதன் கௌரிசங்கர்- 6ஏ2பிஎஸ், கனகலிங்கம் கஜானி-6ஏ2பிஎஸ், துரைராசா ஹேமா-6ஏ2சிஎஸ், செல்வரத்தினம் யசோதரன்- 6ஏபிசிஎஸ், ரவிச்சந்திரன் பிரியங்கா-6ஏசிஎஸ்.

**யாழ்ப்பாணக் கல்லூரி ஆங்கிலமொழி மூலம்**

எம்.கிரிதரன்- 9ஏ, எஸ். நர்த்த்னா-9ஏ, எஸ்.அபிநயா-9ஏ, எல்.சிறிகர்சன்-8ஏபி, மோகன் கிரிசாந்தி பிடல் கஸ்ரோ-7ஏ2பி.

**தமிழ்மொழி மூலம்**

ஏ.கஜீபன்- 9ஏ, பி.சரவணன்-9ஏ, ஜி.மாதுங்கி-9ஏ, கே.சங்கீதா -9ஏ, கே.ரீகா-7ஏ2சி, எம்.விஜிஸ்ன ராஜ்-6ஏ3சி, எஸ்.சரணியா-5ஏ3 பிஎஸ்,

**யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**

எஸ்.கமிலன்- 4ஏ3பிசிஎஸ், எஸ்.சோபனா-4ஏ3பிசிஎஸ், பி.பவியா-ஏபி4சி3எஸ், எஸ்.சியாமளா-ஏ6சி2எஸ், எம்.லிவேஜினி-4ஏ2பிசிஎஸ், பி.விக்னேஸ்வரன்-2ஏபி4சிஎஸ், கே.கஸ்தூரி-2ஏபி3சி2எஸ், கே.ஜீவகரன்-ஏ2பி2சி3எஸ், என்.ரேணுஜன்-ஏ3பிசி 3எஸ், எல்.டிலாஜினி-ஏ4சி2எஸ், எம்.லவேகா-ஏ3சி4எஸ், எஸ். விதுசிகா-ஏபி4சி2எஸ், ரி.அபர்ணா-பி4சி3எஸ்.

**யா/யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்**

எஸ்.கஜந்தன்-7ஏ2சி, ரி.றொபின்சியா-6ஏ2பிசி, ஆர்.பத்மலோஜன்-5ஏ3பிசி, எஸ்.பிரதீபா-5ஏ2பி2சி, எஸ்.ரோகினி-4ஏ4 பிஎஸ், எம்.கிர்சிகா-3ஏ3பிசிஎஸ், எஸ்.செந்தூரன்- 3ஏ2பி3சி, எஸ்.சுகந்தன்-3ஏபி4சி, கே.டிசாந்தன்- 3ஏபி2சி2எஸ், எஸ்.நவநீதன்-2ஏ3பி3சிஎஸ், எஸ்.சிவரஞ்சன்-2ஏ2பிசி3எஸ், எஸ்.நிரோஜினி-2ஏ2பிசி 3எஸ், பி.துவாரகா-2ஏபி3சி2எஸ்.

**யா/புற்றளை மகா வித்தியாலயம்**

ஜே.கொன்சிகன்-8ஏபி, வி.மதியழகன்-7ஏபிசி, ஐ.ருசேனிகா-7ஏபிசி, ஐ.கிருத்திகா-4ஏ4பிசி, என்.கிருஸ்ணபவானி-3ஏ4பிசிஎஸ், எஸ்.தாரகா-3ஏபி3சிஎஸ், என்.நிமனன்-2ஏ4பிசிஎஸ், எஸ்.சிலக்ஸன்-2ஏ2பி4சிஎஸ், யே.சுகன்யா-2ஏ2பிசி4எஸ், வை.டிஜிந்தன்-ஏ4பிசி3எஸ், எஸ்.சஜீகரன்-ஏபி6சிஎஸ், வி.அரவிந்தன்-2ஏ3சி3எஸ், எஸ்.அஸ்வினி-ஏ2பி2சி2எஸ், என்.சாருஜா-ஏ3சி5எஸ், கே.சயந்தன்-3பி5சிஎஸ்.

**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

பூ.துவாரகன்-8ஏசி, யோ.யசிதா-6ஏ2பி, செ.லேஜனா-5ஏ3பிசி, ந.சாரங்கா-5ஏ2பிசிஎஸ், ச.வான்மதி-4ஏ3பிசிஎஸ், ம.கௌதமி-3ஏ4சி2எஸ், யோ.பிரியா-3ஏபிசி3எஸ், வி.சன்சியா-2ஏ3பி2சிஎஸ்., இ.விஸ்ணுஜா-2ஏ2பி4சிஎஸ், கு.தர்மினி-2ஏ2பி2சி3எஸ்., த.பிறேமினி-2ஏ2பி2சி3எஸ், சி.தர்மிகா-2ஏ3பி சி3எஸ், செ.தர்சிகா- 2ஏ2பி4எஸ். (இ

## ஊடகவியலாளர்களுக்கான உரிமைகள் குறித்து செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மனித உரிமை பாதுகாவலர்களான ஊடகவியலாளர்களுக்கு மனித உரிமைகள் தொடர் பான இரண்டு நாள் செயலமர்வு ஒன்றை எதிர்வரும் 4-5 ஏப்ரல் 2016 (உத்தேசிக்கப்பட்டுள்ளது) யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இச்செயலமர்வில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை சேர்ந்த ஊடகவியலாளர்கள் பங்குபற்ற முடியும் என்பதுடன் கிளிநொச்சியிலிருந்து பங்குபற்றும் ஊடகவியலாளர்களுக்கு தங்குமிட ஏற்பாடுகளும் (4 ஆம் திகதி) செய்து தரப்படும்.

பங்குபற்ற விரும்பும் ஊடகவியலாளர்கள் பெயர், விபரங்களை நாளை மறுதினம் 28.03.2016 இற்கு முன் தமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கும்படி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் அறிவித்துள்ளார். (இ

## அபாயத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க எதிர்காலத்தில் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் மேலும் பல குவிவு வில்லைகள் பொருத்தப்படும்


### யாழ்.மாநகர சபை ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபையால் சாரதிகளுக்கு அபாயம் மிகுந்த இடங்களில் போக்குவரத்தின் போது ஏற்படும் விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும், பொதுமக்களின் அசௌகரியங்களைப் போக்கும் முகமாகவும் கீழுள்ள யாழ். நகர பொது வீதிகளில் முதன் முதலாக பெரிய குவிவு வில்லைகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதன் உபயோகம் கவனத்திலெடுக்கப்பட்டு எதிர்காலத்தில் இதே போன்று இன்னும் சில பொருத்தமான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு வில்லைகள் பொருத்தப்படவுள்ளன.

காங்கேசன்துறை வீதியும் யாழ். இந்துக் கல்லூரி வீதியும் சந்திக்கும் இடம், கஸ்தூரியார் வீதியும் அரசடி வீதியும் சந்திக்கும் இடம், கஸ்தூரியார் வீதியும் கன்னாதிட்டி வீதியும் சந்திக்கும் இடம், கோவில் வீதியும் ஆஸ்பத்திரி வீதியும் சந்திக்கும் இடம், திருக்குடும்ப கன்னியர் மட வீதியும் மடம் வீதியும் சந்திக்கும் இடம், வேம்படி வீதியும் துரைச்சாமி வீதியும் சந்திக்கும் இடம், பருத்தித்துறை வீதியும் பலாலி வீதியும் சந்திக்கும் இடம், காங்கேசன்துறை வீதியும் நாவலர் வீதியும் சந்திக்கும் இடம் (மனோகரா சந்தி) ஆகிய இடங்களில் குவிவு வில்லைகள் பொருத்தப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். இதுவே இந்த குவிவு வில்லைகள் கொள்வனவுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எஸ். சுகிர்தன், இ.ஆனோல்ட் ஆகியோர் நிதியொதுக்கீடு செய்ததாகவும் ஒரு குவிவு வில் லையின் பெறுமதி 25 ஆயிரம் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ








போதைப்பொருள் தடுப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான அமையத்தினரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைதடியில் நடத்தப்பட்ட தலைமைத்துவ செயலமர்வின் போது அமைப்பின் தலைவர் அருந்தவபாலன் மற்றும் பேராசிரியர் கந்தசாமி ஆகியோர் கருத்துரைகளை வழங்குவதையும் கலந்துகொண்ட இளைஞர் யுவதிகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கிஷோர்)



நீர்வேலியைச் சேர்ந்த சைவப் புரவலர் சமூகஜோதி நடராசா சிவசுப்பிரமணியம் செட்டியார் திருமுருகன் பவளமலர் வெளியீட்டு விழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

# மாதுலுவாவே சோபிததேரரின் மரணம் தொடர்பில் தம்மாலோக தேரர், கம்மன்பிலவிடம் விசாரணை

(கொழும்பு)

மாதுலுவாவே சோபித தேரரை படுகொலை செய்ய வேண்டிய தேவை மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கே காணப்பட்டது. ஆகவே பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மற்றும் உடுவே தம்மாலோக தேரர் ஆகியோரிடம் விசாரணை நடத்தி உண்மைகளை கண்டறியுமாறு வலியுறுத்தி ஊழல் எதிர்ப்புக் குரல் அமைப்பின் தலைவர் உலபனே சுமங்கல தேரர் குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தார். ஊழல் எதிர்ப்பு குரல் மற்றும் சிவில் அமைப்புகளை பிரதிநிதித்துவம் செய்து பலர் நேற்று முன்தினம் குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு சென்று இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளுக்கு வலியுறுத்தினர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த உலபனே சுமங்கல தேரர் கூறுகையில், மாதுலுவாவே சோபித தேரரின் மரணம் இயற்கைக்கு முரணானது. அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மற்றும் உடுவே தம்மாலோக தேரர் ஆகியோர் கூறி வருகின்றனர். அவ்வாறு அவர்கள் கூறுவதற்கு அவர்களிடம் ஏதேனும் காரணங்கள் அல்லது ஆதாரங்கள் காணப்பட வேண்டும்.

எனவே குற்றவியல் விசாரணை திணைக்களம் இது குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி நாங்கள் முறைப்பாடு செய்துள்ளோம். உண்மையில் மாதுலுவாவே சோபித தேரரை படுகொலை செய்ய வேண்டிய தேவை கடந்த அரசாங்கத்திற்கே காணப்பட்டது. முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்ட போது அவரது விடுதலையை வலியுறுத்தி நாங்கள் கண்டிக்கு சென்றோம். இதன்போது வாகன விபத்தை ஏற்படுத்தி மாதுலுவாவே சோபித தேரரை படுகொலை செய்வதற்கு மகிந்த ராஜபக்ஷ முயற்சித்தார்.

எனவே தற்போது ஏன் திடீரென உதய கம்மன்பில மற்றும் உடுவே தம்மாலோக தேரர் ஆகியோர் மாதுளுவாவே சோபித தேரர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக கூறவேண்டும் என்ற சந்தேகம் நாட்டு மக்களுக்கு காணப்படுகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தின் ஊடாக நாட்டில் ஏற்படுத்தக்கூடிய சிறந்த விடயங்கள் குறித்து மாதுலுவாவே சோபித தேரர் வலியுறுத்தினார்.

அவர்களுடன் ஒன்றிணைந்து வெற்றிப் பயணத்தை முன்னெடுத்தார்.

எனவே மாதுளுவாவே சோபித தேரரை கொலை செய்ய வேண்டிய தேவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு காணப்படவில்லை. அந்த தேவை கடந்த அரசாங்கத்திற்கே காணப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் யானை வைத்திருந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலையான பின்னர் மாதுலுவாவே சோபித தேரரின் மரணம் தொடர்பில் சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை கூறுவதன் உண்மையான நோக்கங்கள் கண்டறியப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-5)

## பொதுக் கூட்டம்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு கோப்பாய் வடக்கு முதியோர் சங்க மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (இ

## நெல்லியடி நகரில் திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி நகரில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை நெல்லியடி நகரில் உள்ள நேரக் காப்பாளராக கடமையாற்றும், சிவலிங்கம் என்பவர் துவிச்சக்கர வண்டியினை அருகில் நிறுத்தி விட்டு தனது கடமையில் ஈடுபட்டிருந்தார்.

அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி துவிச்சக்கரவண்டியின் கூடைக்குள் இருந்த முக்கிய ஆவணங் கள், பேஸ் உள்ளிட்ட பொருட்கள் திரு டப்பட் டுள்ளன.

இது தொடர் பில் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

நெல்லியடி நகரில் அண்மைக் காலமாக அடிக்கடி திருட்டுச்சம்பவங்கள்நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். (இ-5)

## அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் கொழும்புக் கம்பன் விழா-2016



கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபம்
26.03.2016 சனிக்கிழமை

மூன்றாம் நாள் (இன்றைய நிகழ்வுகள்)

**காலை 9.30 மணி**
**மங்கல விளக்கேற்றல்**

திரு.சு.திருஞானசம்பந்தர் தம்பதியர்
(முன்னாள் வதிவிடப் பிரதிநிதி, ஐ.நா.சபை)

**கடவுள் வாழ்த்து**

திருமதி ஹம்சானந்தி தர்மபாலன்

**தலைமையுரை**

பேராசிரியர் மா.செ.மூக்கையா
(முன்னாள் துணைவேந்தர்)

**தொடக்கவுரை**

திரு.என்.கருணையானந்தன்
(தலைவர், நாவலர் நற்பணி மன்றம்)

**சிந்தனை அரங்கு**

தலைவர்
'கம்பவாரிதி' இ.ஜெயராஜ்
பொருள்
'கம்பமொழித் திறம்'

கம்பனில் சொல்– ரி.ரெங்கராஜா
கம்பனில் பொருள்– ஆறு.திருமுருகன்
கம்பனில் உணர்வு– ஸ்ரீ.பிரசாந்தன்
கம்பனில் அணி– பர்வீன் சுல்தானா
கம்பனில் சந்தம்– த.இராமலிங்கம்

**மாலை 5.30 மணி**
**மங்கல விளக்கேற்றல்**

'சமூகப்புரவலர்' ஏ.எம்.சுப்பிரமணியம்

கடவுள் வாழ்த்து
திரு.ரி.கருணாகரன்

தலைமையுரை
மாண்புமிகு வே. ராதாகிருஷ்ணன்
(கல்வி, இராஜாங்க அமைச்சர்)

தொடக்கவுரை
அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

படைத்தவனைச் சந்திக்கும் பாத்திரங்கள்
கம்பனாக–புலவர் கோ.சாரங்கபாணி
சீடர்களாக– ஏ.எச்.ஜலால், எஸ்.ரவி
கூனியாக–எம்.எஸ்.ஸ்ரீதயாளன்
இந்திரசித்தனாக– த.சிவகுமாரன்
குகனாக– ஐ.கதிர்காமசேகரம்
இராவணனாக– லோ.பிரசன்னவருண்
கும்பகர்ணனாக– கு.அசோக்பரன்
இராமனாக– செ.சொபிசன்
பரதனாக– செ.மதுரகன்

மேன்முறையீட்டுப் பட்டிமண்டபம்
நடுவராயம்:
டத்தோ எம்.சரவணன், 'கம்பவாரிதி' இ.ஜெயராஜ்,
டாக்டர் ஜின்னா ஷரிப்புத்தீன்

நோக்கர்களால் பாதிப்புற்ற அணி முறையீடு– பர்வீன் சுல்தானா
நடுவர் தீர்ப்பால் பாதிப்புற்ற அணி முறையீடு– த.இராமலிங்கம்
வென்ற அணி எதிர்வாதம்– ரி.ரெங்கராஜா

இ

## ஓவியக் காட்சிப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடத் தொகுதியின் (கலைக்கூடம்) நுண்கலைத் துறை மற்றும் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் சிவசுப்பிரமணியம் கஜேந்திரனின் தவிப்பு எனும் தலைப்பில் ஓவியக் காட்சிப் படுத்தல் இடம்பெறவுள்ளது.

ஓவிய ரசிகர்கள் மற்றும் சித்திர மாணவர்கள் பங்குபற்றுவதன்மூலம் காண்பிய கல்வி சூழலை வளப்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.(இ


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா:25<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்O/L/சொந்த தொழில்<br>எதிர் பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/5695 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 39<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:CIMA/தனியார் தொழில்<br>தொ.இ: G/4788 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 2<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/கனடாPR<br>தொ.இ: B/5696 | பிறப்பு: 1983RC<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 53<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: G/4793 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 62செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5697 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 24செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MBA, CIMA/ தனியார் தொழில்<br>தொ.இ: G/4799 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 34<br>தகைமை/தொழில்A/Lலண்டன் NOTPR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/5698 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 30<br>தகைமை/தொழில்:O/L/அரசதொழில்<br>எதிர் பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4807 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

கல்யாணமாலை 27.03.2016 ஞாயிற்றுக்கிழமையன்று மட்டும் இயங்கமாட்டாது.

# உண்மைக்கான உரிமைக்குரிய தினம் முல்லைத்தீவில் அனுஷ்டிக்கப்பட்டது




(மலலாவி)

நிலைமாறுகால நீதியினை வலியுறுத்தியும், நல்லிணக்கப்பொறிமுறைச்செயன்முறையினை உறுதிப்படுத்துமாறும கோரியும் உண்மைக்கான உரிமைக்குரிய சர்வதேச தினம்முல்லைத்தீவில் அனுஷ்டிக்கப்பட்டது.

நிலைமாறுகால நீதியினை வலியுறுத்தியும், நல்லிணக்கப் பொறிமுறைச் செயன். முறையினை உறுதிப்படுதது மாறு கோரியும் நேற்றைய தினம் "உண்மைக்கான உரிமைக்குரிய தினம்" புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் பொது நோக்கு மண்டபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வானது விழுது நிறுவன ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட அமரா பெண்தலைமை தாங்கும் குடும்பங்களின் ஒன்றியம், மாவட்ட பெண்கள் சமாசம் ஆகியன ஒன்றிணைந்து நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வு தொடர்பில் தெரியவருவதாவது,

ஐக்கிய நாடுகள் சபையினால் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டும், நிலைமாறு கால நீதியினை முக்கியமான தூண்களிலொன்றான உண்மைக்கான உரிமையினை வலியுறுத்தும் விதத்திலும் உண்மைக்கான உரிமைக்குரிய சர்வதேச தினம் சர்வதேச ரீதியாக மார்ச் 24 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை அரசானது 2015 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பேரவைக்கு நிலைமாறுகால நீதியினை உறுதிப்படுத்தும் வகையிலும் நல்லிணக்கத்திற்கான பொறிமுறையினை மேற்கொள்வதாகவும் உறுதியளித்திருந்தது. ஆனால் இன்று வரையிலும் ஆக்கபூர்வமான காத்திரமான எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. காணாமற் போனோர தொடர்பான எவ்வித உண்மைகளும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்படவிலலை. அவர்களது உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட வில்லை. இந்நிலையில் பாதிகப்பட்ட இலக்குக்குழுவினருடனும் அவர்களது உரிமைகளுககாகக் குரல் கொடுக்கும் வகையிலும் நிலைமாறு கால நீதியினை வலியுறுத்தியும், நல்லிணக்கப் பொறிமுறைச் செயன்முறையினை உறுதிப்படுத்துமாறு கோரியும் "உண்மைக்கான உரிமைக்குரிய தினம்" அனுஸ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-15)

## பாடசாலை அபிவிருத்தி கருத்தமர்வு இன்று

(சோலைநகர்)

கிளிநொச்சி கரைச்சிக் கோட்டத்துக்குட்பட்ட அனைத்துப் பாடசாலை அதிபர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கான முக்கிய அபிவிருத்தி தொடர்பானகருத்தமர்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளி/வலயக்கல்வி அலுவலகத்தில் நடை பெறவுள்ளது.

பாடசாலைகளுக்கு வலயக்கல்விப் பணிமனையால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் கரைச்சி கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் நிலவும் அபிவிருத்திகள் மற்றும் ஏற்படும் இடையூறுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்து கொள்ளவுள்ளார். (2-309)




## கண்ணகை அம்பாள் ஆலய வேள்விப் பொங்கல்

(சிவநகர்)

கிளிநொச்சி குஞ்சுப் பரந்தன் பொறிக்கடவை அருள் மிகு கண்ணகை அம்பாள் ஆலயத்தின் வேள்விப் பொங்கல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் இரவு முழுமையாக நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நேர்த்தியாளர்களின் காவடிகள்,பாற்செம்பு எடுத்தல் என்பன நடைபெறவுள்ளன. கடைகள் நடத்த விரும்பும் வணிகர்களுக்கான ஏலம் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை, மறுநாள் வெள்ளிக்கிழமை ஆகிய திகதிகளில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 6 மணிவரை நடைபெறும். அனைத்து இடங்களுக்குமான போக்குவரத்து ஒழுங்குகள மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகள செய்யப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவல் சபையினர் அறிவித்துள்ளனர். (2-254)

## வங்காலையில் பொலிஸ் நிலையம் திறப்பு




(பனிக்கன்குளம்)

2016 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்திற்கு அமைவாக நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கையை 600 வரையில் மேலதிகமாக உருவாக்கும் தீர்மானத்திற்கு அமைய மன்னார் வங்காலை கிராமத்தில் புதிய பொலிஸ் நிலையம நேற்று முன்தினம்வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோனின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன்யட்ட வரவினால் குறித்த பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்விற்கு சர்வ மதத்தலைவர்கள், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லிடிமேல், நானாட்டான் பிரதேசச் செயலாளர் என்.பரமதாசன், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜந்த றொற்றிகோ மற்றும் வைத்தியர்கள், உயர் அதிகாரிகள் எனப் பலர் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

## இராணுவ வாகனம் - மோ.சைக்கிள் விபத்து;இருவர் வைத்தியசாலையில்



(மல்லாவி)

இராணுவ சொகுசு வாகனம் ஒன்று முன்னால் பயணித்துக் கொண்டிருந்த மோடடார் சைக்கிளை மோதித் தள்ளியதில் அதில் பயணித்த இருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைததியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம்நேற்று காலை ஏ-9 வீதியிலுள்ள கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பரந்தன் பகுதியில் இருந்து பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், திருநகர் செல்வதற்காக திரும்ப முற்பட்டவேளை அதே வழியாக வவுனியா நோக்கி பயணித்து கொண்டிருந்த இராணுவ சொகுசு வாகனம் மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-15)






வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலக திறப்பு விழா கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றது.

மாகாண பணிப்பாளர் திருமதி. நளாயினி இன்பராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருநதினராக வடக்கு மாகாண சுகாதார சமூக சேவைகள் சுதேச வைத்தியத்துறை, சிறுவர் நன்னடத்தை மற்றும் மகளிர் விவகார அமைச்சர் மருத்துவ கலாநிதி ப.சத்தியலிங்கம் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தின் அனைத்து சமூக சேவைகள் அலுவலர்களும், ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

7 மில்லியன் ரூபா செலவில் இந்த கட்டடம் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: சிவநகர் செய்தியாளர்)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.பி. நடராஜ் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து பூம்புகார் கிராமத்திற்கு ஒலிபெருக்கி சாதனம் அண்மையில் வழங்கி வைத்த போது...(படம்:- கற்குழி செய்தியாளர்)

## வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடம் 98காசநோயாளர்கள் அடையாளம் காணல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு 98 காசநோயாளர்கள் இனம்காணப்பட்டதாக வவுனியா பொது வைத்தியசாலையின் காசநோய் தடுப்பு பிரிவு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் ஏற்பாடடில் உலக காசநோய் தினம் நேறறு முன்தினம் அனுஷடிக்கப்பட்டது இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

காசநோய் ஒரு பரம்பரை நோயல்ல. அது மாற்றக்கூடிய ஒரு நோயாகவே இருக்கிறது. வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடம் 98 பேர் காசநோய் காரணமாக இனங்காணப்பட்டுள்ளனர். இலங்கையில் பத்தாயிரம் காச நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார். (2)





நெடுங்கேணி பிரதேச சபையின் கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் இடம் பெற்ற போது... (படங்கள் :- வற்றாப்பளை செய்தியாளர்)

## கிளிநொச்சியில் முதலாம்நாள் அமர்வு



காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் நேற்று தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைபெறும். இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று ஆரம்பமாகி நாளை ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்கள் மாவட்ட செயலகத்தில் விசாரணைகள் இடம்பெறும். இதில் நேற்று நடைபெற்று முடிந்த முதலாம் நாள் அமர்வின் போது... (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வீதியை புனரமைத்துத் தருமாறு கோரி ஏ-9 வீதியை மறித்து மக்கள் போராட்டம்

- நோயாளர் காவுவண்டி செல்லமுடியாத அவலநிலையும் ஏற்பட்டது
- போக்குவரத்து பாதிப்பு



வவுனியா கலாபோகஸ் வேவ கிராமத்திற்கான பிரதான வீதியை புனரமைத்து தருமாறு கோரி ஏ-9 வீதியை மறித்து நேற்று வெள்ளிக் கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா சிங்கள பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இக் கிராமத்திற்கான பிரதான வீதி நீண்டகாலமாக திருததம் செய்யப்படாமலுள்ளது.

இதனால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவித்து அப்பகுதி மக்கள் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் ஊர்வலமாக சென்று வீதியை மறித்தும் போக்குவரத்து தடையையும் ஏற்படுத்தினர்.

மாமடு சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஹொரவப் பொத்தானை வீதி வழியாக ஊர்வலமாக சென்று, வவுனியா மணிக்கூட்டுக் கோபுரப் பகுதி மற்றும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்பாக வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 5 மணி நேரமாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் அசம்பாவிதங்கள் இடம்பெறாமல் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.


இதேவேளை அவ்விடத்திற்கு வருகை தந்த மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் கந்துன்நெந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





இதேவேளை, வீதி மறியல் போராட்டத்தில ஈடுபட்ட போது போக்குவரத்து தடைப்பட்டதுடன் நோயாளர் காவு வண்டிகூட அவசரநோயாளரை கொணடு செல்ல முடியாத அவல நிலை ஏறபட்டிருந்தது. (2-250)

# சொந்தக்காணியில் குடியமர்த்துமாறு கோரி கேப்பாபிலவு மக்கள் தொடர்ந்து உணவுத்தவிர்ப்பு

## 2 ஆவது நாளாக நேற்றும்





முல்லைத்தீவு கேப்பாபில்வு மக்கள் தம்மை தமது சொந்தக்காணியில் குடியமர்த்துமாறு கோரி ஆரம்பிக்கப்பட்ட உணவு தவிர்ப்பு போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும்நடைபெற்றது.

ஜனாதிபதியின் எழுத்து மொழி மூல உறுதிப்பாடு கிடைக்கும் வரை குறித்த போராட்டம் தொடருமென ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்று இரண்டாவது நாளாகவும்தமக்கு பதிலெதுவும்கிடைக்கவில்லையென போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று காலை இவர்களை சந்தித்து கலந்துரையாட அரசியல் பிரமுகர்கள் பலரும் வருகை தந்திருந்தனர். அந்த வகையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வைத்திய கலாநிதி சி.சிவமோகன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழு செயலாளர் க.விஜிந்தன் ஆகியோரிடம் மக்கள் எட்டு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை கையளித்தனர். இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது வாழ்விடத்துக்கு எம்மை மீள்குடியமர்த்த வேண்டும், பூர்வீக வாழ்விடம் எமக்கு வேண்டும் மாற்றுக் காணிகள் வேண்டாம், எமது காணியில் சுதந்திரமாக உலாவி உழைத்த எமக்கு 40 பேச்சஸ் காணி ஒரு சிறைச்சாலை என்ற நிலை மாற வேண்டும், கணவனை இழந்த பெண்கள் உட்பட அனைத்து மக்களும் பொருளாதார துன்பத்தால் அனுபவிக்கும் சொல்லொணா துன்ப நிலை மாற வேண்டும், சமூக விருத்திக்கு, நாட்டின் விருத்திக்கு கல்வியே கற்தூண்கள். அக்கற்தூண்களான மாணவர்கள் வேலைக்கு செல்லுதல், மது போதைக்கு அடிமையாதல் அகதி நிலை என்ற உணர்வு மாற சொந்த இடங்களுக்கு மக்கள் குடியேறவேண்டும், மக்களின் வாழ்விடம் அமைந்துள்ள சுயதொழில் செய்ய முடியாத நிலையில் வறுமையின் பஞ்சத்தை போக்கும் தொழில் பஞ்சமா பாதக செயலான வீட்டுக்கு வீடு கசிப்பு வடிப்பு நிலை மாற வேண்டும், எமது வாழ் விடத தின் அருகில் அரச காணி உண்டு. அதில் அரசு இராணுவத்தை இருத்தி எமது வாழ்விடத்தை விடுவிக்க வேண்டும், எமது போராட்டம் அரசுக்கு எதிரானதல்ல, எமது பூர்வீக வாழ்விடத்திற்கானது நல்லாட்சி அரசின் ஆட்சியில் எமது பூர்வீக இடம் கிடைக்காது என்ற ஏமாற்ற நிலை மாற வேண்டும்.

நல்லாட்சி அரசின் ஆட்சியில் மக்கள் பிச்சையெடுக்கும் நிலைமாற வேண்டுமென்ற 8 கோரிக்கைகள் குறித்த மகஜரில் உள்ளது. (2-281)

# சிறுபோக பயிர்ச்செய்கைக் கூட்டங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட புதுமுறிப்பு குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கைக் கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் புதுமுறிப்பு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோகப் பயிர்ச்செய்கைக் கூட்டமும் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பணிப்பாளர் ச.மோகனபவான் அறிவித்துள்ளார். (2-254)

# அபாயகரமான ஆஸ்துமா நோய்

## வைத்திய ஆலோசனையுடன் தகுந்த வாழ்க்கை முறையை கடைப்பிடிப்போம்

உயிராபத்தைஏற்படுத்தும் அபாயகரமான ஆஸ்துமா நோயினை கட்டுப்படுத்தி வாழ வைத்திய ஆலோசனையுடன் தகுந்த வாழ்க்கை முறையினை கடைப்பிடிக்கவேண்டும் என யாழ்.போதனா வைத்தியசாலையின் பொது வைத்தியநிபுணர் வைத்தியர் எஸ்.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வளர்ந்தவர்கள் முதல் சிறுவர்கள் வரை அனைத்து தரப்பினரிடையேயும் தாக்கத்தினை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஆஸ்துமாநோய் தொடர்பான ஆலோசனைகளை பெறுவதற்காக அவருடன் மேற்கொண்ட நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார். தொடர்ந்து அவருடன் மேற்கொண்ட நேர்காணலின் போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

**ஆஸ்துமா நோய் (தொயவு) கட்டுப்படுத்தக்கூடியதா? ஆஸ்துமா நோயின் பாதிப்பு எவ்வாறாக இருக்கும்?**

உலகில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆஸ்துமா நோயினால் அவதியுறுகிறார்கள். இது அபாயகரமான நோயாக இருந்த போதிலும் வைத்திய ஆலோசனைகளை பெற்று தகுந்த சிகிச்சைமுறைகளையும் வாழ்க்கை முறைகளையும் கடைப்பிடித்து வந்தால் கட்டுப்படுத்தி மகிழ்சியாக வாழ முடியும்.

ஆஸ்துமா நோய் வளர்ந்தவர்களில் நீண்டகால நோயாக வாழ்நாள் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்த நோயினால் ஏற்படும் தொழில் இழப்புமருத்துவச்செலவு,போன்ற பாதிப்புக்கள் கணக்கிலடங்காதவையாக இருந்து வருகிறது. ஆஸ்துமாநோயினால் அவதியுறும் நோயாளிகள் தற்கொலை வரைசெல்லும்துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகிறது. இது அபாயகரமானதும் மரணத்தையும் ஏற்படுத்தக்கூடியநோய் ஆகும்.

**ஆஸ்துமா நோயை ஏற்படுத்தும் காரணிகள் எவை?**

சுவாசக்குழாய்களில் அழற்சி ஏற்பட்டு சுவாசக்குழாய்கள் சுருங்குவதால் மூச்சுவிடுவது சிரமமாய் இருத்தலே இந்தநோயின் இயல்பாகும். இந்தநோய் பரம்பரையினால் ஏற்படுகிறது. பரம்பரையில் எக்ஸிமா (தோல் அழற்சி eczema) தும்மல், கண் கடித்தல்,போன்றநோய்கள் உள்ளவர்களில் ஆஸ்துமாஏற்படலாம்.

எக்ஸிமா நோயை குணப்படுத்தினால் ஆஸ்துமா நோய் ஏற்படும் என்ற கருத்து மக்களிடையே பரவலாக காணப்படுகிறது. இது தவறானதாகும். எக்ஸிமாவும், ஆஸ்துமாவும்ஒரே நோயாளியில் வெவ்வேறு காலங்களிலோ அல்லது ஒரேடியாகவோ ஏற்படலாம்.

ஆஸ்துமா நோயாளிகளில் வீட்டுத்தூசி, பூக்களின் மகரந்தங்கள்,விலங்குகளின் உரோமம், தோல்கழிவுகள், சிகரட் மற்றும் சமையல் புகை,பூஞ்சனத்தின் வித்திக்கள், பவுடர் (powder) வாசனை திரவியங்கள், வைரஸ் கிருமித் தொற்று என்பவை பாதிப்பை ஏற்படுத்தலாம்.

அத்துடன் உடற்பயிற்சி, விளையாட்டுக்கள், அதிகளவு உணர்ச்சி வயப்படுதல் போன்றவையும் சிலருக்கு ஆஸ்துமா கூடுதலாக ஏற்படுவதற்கு காரணமாகலாம்.

படுக்கையறைகளில் காணப்படும் கண்ணுக்குத்தெரியாத மிக நுண்ண்ணிய தெள்ளுக்கள் (house dust mite) ஆஸ்துமா நோய் கூடுவதற்கு முக்கிய காரணமாகும். இவற்றினது கழிவுப் பொருட்கள் சுவாசப் பாதையை தாக்கி அழற்சியை ஏற்படுத்துகின்றன. படுக்கை விரிப்புக்கள், மெத்தைகள்,தலையணிகள், என்பவற்றில் இவை காணப்படு கின்றன. இருட்டான காற்றோட்டம் இல்லாத ஈரலிப்பான இடங்களில் இவை பெருகுகின்றன.

**ஆஸ்துமா நோயாளிகள் நோயை கட்டுப்படுத்த கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் யாவை?**

1.வீட்டை குறிப்பாக படுக்கையறையை காற்றோட்டமான தாகவும் வெளிச்சமானதாகவும் வைத்திருப்பது (housedust mite) ஐ கட்டுப்படுத்த உதவும். பகலில் ஜன்னல்களை திறந்துவையுங்கள். படுக்கையறைகளில் அதிக பொருட்களை குறிப்பாக புத்தக அலுமாரிகளை வைக்கக்கூடாது.

படுக்கை விரிப்புக்களையும் தலையணி உறைகளையும் ஒரு கிழமைக்கு ஒருதடவை மிதமான வெந்நீரில் ஊறவைப்பதன் மூலம் (அண்ணளவாக 60°C) house dust mite ஐ கட்டுப்படுத்தலாம்.

இப்போது விசேடமான allergy proof தலையணை உறைகளையும் மெத்தை உறைகளையும் பயன்படுத்தலாம். இதற்காக பொலித்தீன் உறைகளையும் பயன்படுத்தலாம்.

2.பூனை, நாய் போன்ற விலங்குகளை வீட்டினுள் குறிப்பாக படுக்கையறைகளினுள் அனுமதிக்காதீர.

3.மென்மையான விளையாட்டு பொம்மைகள் (soft toys) தூசியை சேகரித்து வைப்பதனால் அவற்றை ஆஸ்துமா உள்ள சிறுபிள்ளைகளுக்கு கொடுக்காதீர்கள்.

4.வீட்டினுள் அநாவசியமாக நீர்தேங்கி ஈரலிப்பாக இருந்தால் அவற்றில் பங்கஸ் (fungus) வளர ஏதுவாகும்.அவற்றின் வித்திகள் ஆஸ்துமாநோயை கூட்டக்கூடியவை. எனவே நிலத்தில் நீர் தேங்கி நிற்க விடாதீர்கள், குளித்த பின் குளியலறை ஜன்னல் கதவுகளை திறந்து நீர் ஆவியாக வழி செய்யுங்கள். ஒழுகும் நீர் குழாய்களைதிருத்த வேண்டும்.

5. புகைப்பிடிப்பதை முற்றாக விடுங்கள். பெற்றோர் வீட்டில் புகைப்பிடித்தால் பிள்ளைகளுக்கு ஆஸ்துமாநோய் கூடுதலாக ஏற்படலாம்.

6.சமைப்பதற்கு விறகு அடுப்புக்களை விடகாஸ் அடுப்புக்களே சிறந்தவை.சமையல் புகை வீட்டினுள் வரவிடாதீர்கள். புகை போக்கி சமையல் அறையில் இருப்பது இன்றியமையாதது ஆகும்.


7.வீடுகளில் சுத்தம் செய்யப்படும் cleaners மற்றும் வீசும் தெளிப்பான்கள் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தலாம். எனவே ஆஸ்துமா நோயாளிகள் அவற்றை தவிர்ப்பது நல்லது.

8.மனஅழுத்தம் (stress) ஆஸ்துமாநோயை அதிகரிக்கலாம். மனஅழுத்தத்தை குறைக்க ஓய்வு,தியானம், பொழுது போக்குகள் என்பவற்றை கடைப்பிடியுங்கள்.

9.பாடசாலை ஆசிரியர்,அதிபர் ஆகியோருக்கும் நீங்கள் வேலை செய்யும் இடத்திலுள்ளவர்களுக்கும் நீங்கள் ஒரு ஆஸ்துமா நோயாளி என்பதை தெரிவி யுங்கள்.ஆஸ்துமாநோய் திடீரென கூடினால் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்,செல்ல வேண்டிய வைத்தியசாலை பற்றி முதலிலேயே தீர்மானித்து வையுங்கள்.

10.பாடசாலைகளில் பாவிக்கப்படும் வெண்கட்டி தூள் சிலருக்கு ஆஸ்துமாநோயை அதிகரிக்கலாம். எனவே கரும்பலகையில் இருந்து தூரமாக இருப்பதன் மூலம் பாதிப்பைத் தடுக்கலாம். நீங்கள் ஒரு ஆசிரியராக இருந்தால் கரும்பலகையை விட White board and marker ஐ பயன்படுத்தலாம்.

11. சிலருக்கு உடற்பயிற்சி விளையாட்டுக்களின் போது ஆஸ்துமா அதிகரிக்கலாம். ஆனால் அதற்காக நீங்கள் அவற்றைத் தவிர்த்து விட கூடாது.நீங்கள் வைத்தியரின் உதவியுடன் ஆஸ்துமா நோயை ஒன்றாக கட்டுப்படுத்துவதே சரியான வழி.




**ஆஸ்துமாநோயாளிகள சிகிச் சையின் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் என்ன?**

வைத்திய நிபுணர் ஒருவரின் சிபார்சின் மூலம் inhaler எனப்படும் உள்ளிளுப்பானை பயன்படுத்துவதே சிறந்த சிகிச்சை முறையாகும். இதைப் பற்றி பல தவறானகருத்துக்கள் மக்கள் மத்தியில் காணப்படுகின்றன. பக்கவிளைவுகள் ஏற்படலாம், பழக்கப்பட்டுப் போய் விம்,நிறுத்தவேமுடியாது போன்ற பல பிழையான கருத்துக்கள் நிலவுகின்றன.

உண்மையில்குளிசைகளை விட inhalers ஆல் பக்கவிளைவுகள் குறைவாகவே ஏற்படுகின்றன.

நேரடியாக சுவாசக் குழாயில் சென்றுசெயற்படுவதனால் சிறிய அளவு மருந்தே போதுமானது. Inhaler ஐ பயன்படுத்தியபின் வாயையும் தொண்டை யினையும் கழுவித்துப்பவேண்டும்.இது வாயினுள்ளும் தொண்டையினுள்ளும் பங்கஸ் தொற்று ஏற்படுவதை தடுக்கஉதவும்

Storaid (ஸ்டீரோய்ட்) கொண்ட inhalers ஆஸ்துமா வருவதை தடுக்கும் மருந்துகளாகும். இவை பொதுவாக மண்ணிறமான inhaler ஆகவிருக்கும். (உதாரணம் beclomethasone) இவற்றை உங்களுக்கு முட்டு இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன தொடர்ச்சியாகப்பயன்படுத்த வேண்டும்.

நீலநிற inhalers (உதாரணம் salbutamoL) முட்டு வநதபின்பயன்படுத்துவது. அதை வைத்தியரின் ஆலோசனைப் படி பல தடவை பயன்படுத்தலாம்.

prednisolone குளிசைகளை வைத்தியரின் ஆலோசனையின்றிப் பயன்படுத்த வேண்டாம். இதனால் நீரிழிவு, உயர் குருதியமுத்தம்,உடல் நிறை அதிகரித்தல் போன்ற பாதிப்புக்கள் எற்படலாம் என தெரிவித்தார்.

**நேர்காணல்- பொ.சோபிகா**

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—85

# தகதகக்கும் வெயிலும் உயிர்காக்கும் உத்தியும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

சுட்டெரிக்கும் சூரியனை இரவு பகலாக உணர்ந்து கொண்டிருக்கும் காலமிது. தாங்கவே முடியவில்லை என பலரும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர். நிழல் தேடி ஓடவைத்திருக்கின்றது அந்த எரிச்சல் வெயில். காலையிலும் மாலையிலும் மட்டுமே வெளியில் ஆசுவாசமாக செல்ல முடிகின்றது. நடுப்பகலில் சூரியக்கதிர்கள் உடலை துளைத்து ஊடுருத்து செல்வது போன்ற பிரமை. ஆனாலும் அதனை உணர முடிகின்றது.

அனல் காற்று அடிப்பது போன்ற உணர்வு. முகம் விரைவாக காய்ந்து விடுகின்றது. சூரிய ஒளிபடும் உடற் சூழலில் ஏற்பட்ட மாற்றங்களிவை. இந்த காலநிலையை முக்கிய காரணியாக முன்னிலைப் படுத்தியிருக்கின்றார்கள். சூரியன் இலங்கைக்கு மேலே வருவதுதான் காரணமெனவும் அது குறிப்பிட்ட காலப்பகுதிக்கு தொடர்ந்திருக்கும் எனவும் கூறப்பட்டிருக்கின்றது.

வெப்பநிலை அதிகரிப்பு என்பது இக்காலங்களில் வழக்கமான ஒன்று என்றாலும் சற்றும் எதிர்பார்க்காத நிலையில் மிகவும் அதிகரித்து காணப்படுகின்றது. வெப்பநிலையின் தாக்கம் மனிதரிலும் விலங்குகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக மனிதரில் சுவாசம் சார்ந்த பிரச்சினைகளும் தோல் சார்ந்த பிரச்சினைகளும். இந்த மாற்றம் பயிர்களின் விளைச்சலுக்கு குந்தகமாகவே இருக்கும். வளிமண்டல வெப்பநிலை கணிசமான அளவில் அதிகரித்திருப்பதால் இந்த மாற்றத்தினால் விளைச்சலில் அதிக மாற்றங்களை எதிர்பார்க்கலாம். ஆனால் குறிப்பாக பழ வகைகளில் அவற்றின் சுவையில் முன்னேற்றமடைவதற்கும் இனிப்புத் தன்மை அதிகமாகவும் வாய்ப்புக்களுண்டு. மாறாக சாறு உறிஞ்சும் பூச்சிபீடைகள் அதிகரிப்பதற்கும் அவற்றினால் சேதங்கள் அதிகரிக்கவும் வாய்ப்புக்களுண்டு. குறிப்பாக பனிப்பூச்சிமற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளான அழுக்கணவன், செதில்பூச்சி, மாவுப் பூச்சி மற்றும் முக்கோண மூட்டுப் பூச்சிகளின் எண்ணிக்கைகளின் எண்ணிக்கை அதிகளவில் பெருக வாய்ப்பிருக்கின்றது. அநேகமான பயிர்களில் இவற்றின் தாக்கம் எதிர்பார்த்ததை விட அதிகரித்துச் செல்லும்.

இதுவே பாரிய பிரச்சினையாக உருவெடுக்கும். பயிர்களை தனியாக பயிர்செய்யும் போது இந்த பிரச்சினைகள் அதிகமாகவே இருக்கும். பயிர்ச்செய்கைத் தொகுதிகளுக்குள் பயிர் செய்யும் போது இந்தப் பிரச்சினை குறைவாகவே இருக்கும்.

குறிப்பாக பல நிலைகளிலுள்ள பயிர்கள் தெரிவு செய்யப்படும் போது அவற்றிற்கிடையே காணப்படும் நுண்காலநிலை (Microclimate) வழக்கமான கால நிலையை விடவித்தியா சமாக இருக்கும். இதனால் பீடைப் பெருக்கம் ஒரு வித்திலை மற்றும் இரு வித்திலை தாவரங்களை மாற்றி மாற்றி ஊடு பயிராக, இணைப் பயிராக பயன்படுத்துவதனால் இப்பிரச்சினைக்கு ஓரளவிற்கு தீர்வு காண முடியும்.

பயிர்ச் செய்கையில் நட்டப்பட்டுப் போகாதிருக்க பயிர்களுக்கு தேவையான நீரைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

குறிப்பாக தென்னை போன்ற பல்லாண்டு தாவர

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 82

பாகங்களில் எரிவு. வேலையை ஆழக் கவனித்து செய்ய முடியாததொரு நிலை.

எதிலும் கவனஞ் செலுத்த முடியவில்லை. மூச்சு வேகமாக அடிக்கின்றது. தொண்டை கட்டிவிட்டிருக்கின்றது. பேசவே முடியவில்லை. மூச்சுக் குழாய்க்குள் தொற்று இலகுவாக ஏற்பட்டுவிட்டது. குளிர் தண்ணீரை அருந்தவேண்டும் போல உணர்வு.

ஆனால் தொடர்ந்து குளிரூட்டியில் வைத்துளடுக்கும் குளிர் தண்ணீரை தொடர்ந்து அருந்தினால் பல விளைவுகள் உண்டாகும் என அறிவிக்கப்பட்டதனை எடுத்த மாத்திரத்தில் உதாசீனம் செய்யவும் முடியவில்லை. தூசி துணிக்கைகளில் அவற்றை சுவாசிப்பதனால் ஏற்படும் விபரீதத்தையும் மருத்துவ உகைம் சொல்லியிருக்கின்றது. இதற்கும் மேலாக சரும வியாதிகள் அதிகரிக்கும் எனவும் அடித்துச் சொல்லியிருக்கின்றார்கள். பலர் இந்த நோய்களுக்குள் உள்வாங்கப்பட்டுமிருக்கின்றார்கள். எமது







ளும் அதிகரித்துள்ளன என செய்திகள் தெரிவிக்கின்றன. இதனைத் தவிர விவசாயத்தில் இந்த உயர்ந்த வெப்பநிலை தாவரங்களில் ஆவியுயிர்ப்பினைக் கூட்டுவதுடன் தாவரத்தின் அனுசேப நடவடிக்கைகளில் பாதிப்பையும் ஏற்படுத்தி விடும். அதனால் தாவரம் ஒருவகை நெருடலுக்குள் உள்வாங்கப்பட்டிருக்கும் எண்ணிக்கை கணிசமானளவு அதிகரிக்கும். இவற்றின் சாறு உறிஞ்சலினை பயிர்கள் தாக்குப் பிடிக்கமுடியாது தினறும் நிலையேற்படும். இரசாயன பீடைநாசினிகளில் தங்கியிருக்க வேண்டிய தேவை எழும். ஆனால் ஒரே மாதிரியான பீடை நாசினிகளை தொடர்ந்தும் பயன்படுத்த வேண்டாம்.

இவற்றை விட சிற்றுண் அதிலும் ஈரப்பதன் கூடியும் வெப்ப நிலை குறைவடைந்தும் காணப்படும். இந்த மாற்றம் பயிர்களில் பீடைகளின் எண்ணிக்கை நலிவடைந்தும் இப்பீடைகளை இயற்கையாகவே கட்டுப் படுத்தும் இரை கௌவிகள் மற்றும் ஒட்டுண்ணிகள் என்பனவற்றின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படும்.

ங்கள் பாதிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறு அதிகமாகவே உண்டு. இவற்றை பாதுகாக்க உயிர்நீர் எனப்படும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தலாம்.

வரட்சியிலிருந்து மக்களை அழிவின் பிடியிலிருந்து தப்புவதற்கு வாய்ப்பளிக்கவேண்டும். உயிர் நீரில் தென்னையின் அடிப்பாகத்தில் பாரிய மண் பானையை வைத்து அதனுள் நீரூற்றி தென்னைக்கு தேவையானளவு நீரை மட்டும் வழங்கிவிட்டு ஏனைய பயிர்களுக்கு வழங்கலாம். நீரை சிக்கனமாக பாவிப்பதற்கும் அதனை சரியான முறையில் திட்டமிட்டு தேவைக்காக பயன்படுத்தும் போதும் நீரின் தேவையை நாம் கணிசமான அளவிற்கு பேணமுடியும்.


பல்லாண்டு தாவரங்களை அதிலும் பயன்தரும் தாவரங்களை நாம் பாதுகாப்பதற்கு உயிர்நீர்முறையை பயன்படுத்தமுடியும்.

இந்த வரட்சியை தாக்குப் பிடித்து விட்டால் பின்னர் நாம் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் தேர்தலை புறக்கணிப்போம்

(இராமேஸ்வரம்)

**இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழக சட்டப்பேரவை தேர்தலை புறக்கணிக்கப்போவதாக மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**



இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் 96 பேரையும், பறிமுதல் செய்யப்பட்ட 89 விசைப்படகுகளையும் விடுவிக்கக்கோரி மீனவர்கள் காலவரையறையற்ற வேலை நறுத்ததை மேற்கொண்டுள்ளனர்.

மீனவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர்களது காவல் நீட்டிக்கப்பட்டுள்ள சம்பவம் அவர்களது உறவினர்களுக்கு இடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் விடுதலை விவகாரத்தில் மத்திய, மாநில அரசுகள் அலட்சியம் காட்டுவதாக குற்றம் சாட்டியுள்ள மீனவர்கள் சட்டப் பேரவை தேர்தலை புறக்கணிக்கப் போவதாக எச்சரித்துள்ளனர்.

தங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஏமாற்றி விட்டதாகவும் அவர்கள் சாடினர். சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடுவதாக தெரிவித்துள்ள சக மீனவர்கள் இதனை மத்திய, மாநில அரசுகளுக்கு உணர்த்தும் வகையில் இந்த போராட்டங்களில் ஈடுபட போவதாகவும் தெரிவித்தனர். (இ-5)

### தி.மு.க., பா.ஜ.க.கூட்டணியில் சேர

# பல கோடி ரூபாய் பேரம் உதறித்தள்ளிய விஜயகாந்த்



தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியில் சேர விஜயகாந்திடம் பல கோடி ரூபா பேரம் பேசியபோதும் அதையெல்லாம் வேண்டாம் என விஜயகாந்த் உதறித்தள்ளியுள்ளதாக வைகோ கூறியுள்ளார்.

ம.தி.மு.க. பொதுசெயலர் வைகோ மதுரை விமான நிலையத்தில் நேற்று நிருபர்களிடம் அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் பேசுகையில்,

தமிழகத்தில் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.ஆட்சி வேண்டாம் என மக்கள் முடிவு செய்து விட்டனர். இரண்டும் ஊழல் கறை படிந்த கட்சி. இந்த கட்சிகள் ஆட்சிக்கு வரக் கூடாது என நினைக்கின்றனர்.

சமூக வலைத்தளங்களில் எங்களுக்கு இளைஞர்கள் பெரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

நாங்கள் பலகட்ட பிரசார கூட்டங்கள் நடத்த அட்டவணை தயாரித்துள்ளோம்.

கூட்டணியில் சேர வருமாறு விஜயகாந்திற்கு தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் அழைப்பு விடுத்தன.

பல கோடி பணம் தருவதாக சொன்னார்கள். ராஜ்யசபா எம்.பி. மத்திய அமைச்சர் பதவி தருவதாக பேரம் பேசப்பட்டது.

ஆனால் அதனையெல்லாம் தூக்கி எறிந்து உண்மையாளனாக விஜயகாந்த் எங்கள் கூட்டணியில் சேர்நதுள்ளார். இதுவே விஜயகாந்த் ஊழலற்ற நிர்வாகத்தை தருவார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

நாங்கள் ஆட்சிக்கு வருவோம், வேலை வாய்ப்பை பெருக்குவோம், ஊழல் ஒழிப்போம், விவசாயிகள், மீனவர்களை காப்போம் என வைகோ தெரிவித்தார். (இ-5)

# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## பிரதமருக்கு ஜெயா கடிதம்

(சென்னை)



இலங்கை சிறையிலுள்ள 99 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழக முதல்வர்ஜெயலலிதா, பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். தமிழக மீனவர்களின் 83 மீன்பிடி படகுகளையும் விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவும் என கடிதத்தில் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

படகுகள் பழுதாவதற்கு முன் அவற்றை மீட்க வெளியுறவுத் துறை அமைச்சகம் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளார்.

மேலும் தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்றும் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)

# மக்கள் நலக்கூட்டணியை விமர்சிக்க மறந்த குஷ்பு

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த, தற்போது மக்கள் நலக்கூட்டணியில் ஐக்கியமாகியுள்ளார். இதனால் நாகர் கோவிலில் நடந்த காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் நடிகை குஷ்பு மக்கள் நலக்கூட்டணி பற்றி விமர்சித்து பேசுவார்? என தொண்டர்கள் எதிர்பார்த்தனர்.




ஆனால் பொதுக்கூட்டத்தில் பேசியபோதும், நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோதும் மக்கள் நல கூட்டணி பற்றி அவர் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. நிருபர்களிடம் கூறுகையில், மக்கள் நலக் கூட்டணி குறித்து கருத்து சொல்ல விரும்பவில்லை என தெரிவித்தார். (இ-5)

# சியாச்சினில் மீண்டும் பனிச்சரிவு இராணுவ வீரர் ஒருவர் மாயம்



காஷ்மீர் மாநிலம், லடாக் பகுதியில் வடக்கு பனிப்பாறை செக்டரில் சியாச்சின் சிகரம் உள்ளது. 19 ஆயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த பகுதி, இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையில் இமய மலை அருகே அமைந்துள்ளது. சியாச்சின் பகுதியை இரு நாடுகளும் சொந்தம் கொண்டாடி வருவதால தொடர்ந்து சர்ச்சை நிலவுகிறது.

இங்கு அடிக்கடி பனிச்சரிவு ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுவது தொடர்கதையாகி வருகிறது. பனிக்காலம் மற்றும் வெப்பநிலை மைனஸ் 69 டிகிரி செல்சியசுக்கு கீழே வரும் போது பனிச்சரிவும், நிலச்சரி வும் ஏற்படுகிறது. கடந்த 17 ஆம் திகதி காஷ்மீர் மாநிலம் லடாக் பிராந்தியத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது கார்கில் பகுதியில் பனிப் பாறைகள் சரிந்து விழுந்தன.

அப்போது அங்கு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ வர்ர் விஜயகுமார் பனிச்சரிவில் சிக்கி பலியானார். இவர் தமிழ் நாட்டை சேர்ந்தவர் ஆவார்.

இந்த சம்பவம் நடைபெற்ற ஒரு வாரத்திற்குள் சியாச்சினில் மீண்டும் பனிச்சரிவு ஏற்பட்டுள்ளது. லே பகுதியில் உள்ள துர்துக் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்த போது பனிச்சரிவு ஏற்பட்டது. இந்த பனிச்சரிவில் இரு வீரர்கள் சிக்கிய நிலையில் ஒரு இராணுவ வீரர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மாயமான மற்றொரு இராணுவ வீரரை தேடும் பணியில் மீட்பு குழுவினர் ஈடுபட்டுள்ளனர். (இ-5)

பாரதச் செய்தி


யாழ்.கந்தர்மடம் சிவகுருநாத குருபீடம் வேதாந்தமடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மடப்பள்ளி மண்டபத் திறப்பு விழா கடந்த 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குருபீடாதிபதி ஸ்ரீமத்வேத வித்தியாசாகர சுவாமிகள் தலைமையில் இடம் பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில்நந்தனன் மடப்பள்ளி மண்டபத்தினை திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சைவமகா சபையின் செயலாளர் மருத்துவர் ப.நந்தகுமார் வாழ்த்துரையினை வழங்கியிருந்தார்.

தொடர்ந்து நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சின்மயாமிஷன் யாழ்ப்பாணக் கிளை வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆகியோர் நல்லாசிகளை வழங்கியிருந்தனர்.

சிறப்பு ஆன்மீக சொற்பொழிவை சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் நிகழ்த்தியிருந்தார்.

யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளின் பஜனை நிகழ்வு இடம்பெற் றிருந்ததுடன் மண்டப திறப்பு விழா தொடர்பான சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டிருந்தது.

# அணு உலைகளை தகர்த்து நாசத்தை ஏற்படுத்த தீவிரவாதிகள் சதித்திட்டம்




(பிரஸல்ஸ்)

**பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் அணு உலைகளை தகர்த்து நாசத்தை ஏற்படுத்த தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியிருந்த அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.**

பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸ் விமான நிலையம், மெட்ரோ ரயில் நிலையம், ஆகிய இடங்களில் தறகொலை படை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 35 பேர் கொல்லப்பட்டனர். பிரஸல்ஸ்அணு உலைகளை தகர்ப்பதே தாக்குதலில் ஈடுபட்ட ஐ.எஸ். தீவிரவாதிகளின் மூன்று முக்கிய நோக்கமாக இருந்துள்ளது.

விமான நிலையத்தில் தாக்குதலை முடித்துவிட்டு உலைகளை தகர்க்க செல்ல திட்டமிட்டிருந்தனர்.

இந்நிலையில் தீவிரவாதிகளின் கூட்டாளி ஒருவன் முன் கூட்டியே பொலிஸில் சிக்கியதால் அணுஉலை தாக்குதல் திட்டத்தை அவர்கள் கைவிட்டதாக பெல்ஜியம் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. தாக்குதலுக்கு போப் ஆண்டவர் பிரான்சிஸ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பிரஸல்ஸ் நகரின் பல்வேறு இடங்களில் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி கூட்டங்கள் நடைபெற்றன. பிரஸல்ஸ்தாக்குதலின் போது காணாமற்போன தமிழர் ராகவேந்திரன் கணேசனை கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (இ-5)

## பெல்ஜியம் குண்டுவெடிப்பு தொடர்பாக 6 பேர் கைது



(பிரஸல்ஸ்)

பெல்ஜியம் நாட்டின் தலைநகரான பிரஸல்ஸ் நகரில் கடந்த 22ஆம்திகதிஜாவெணடம் சர்வதேச விமான நிலையத்திலும், மேல்பீக் சுரங்க ரயில் நிலையத்திலும் தீவிரவாதிகள் தொடர் குண்டு வெடிப்புகளை நடத்தி உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தினர்.

இந்த தாக்குதல்களில் பலியானவர்கள் எண்ணிக்கை 31 எனவும், காயம் அடைந்தோர் எண்ணிக்கை சுமார் 300 எனவும், அவர்களில் 61 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனவும் பெல்ஜியம் சுகாதார அமைச்சர் மாகி டி பிளாக் நேற்று முன்தினம் அறிவித்தார். இந்த தாக்குதலுக்கு உளவுத்துறையின் தோல்வயே காரணம்என்று கடுமையாக குற்றம் சாட்டப்பட்டதால், பெல்ஜியம் நாட்டின் உள்துறை மறறும் நீதி அமைச்சர், தாக்குதலை தடுக்க தவறியதற்கு பொறுப்பேற்று பதவி விலகுவதாக அறிவித்தார். ஆனால், இவரது பதவி விலகலை பெல்ஜிய பிரதமர் சார்லஸ் மைக்கேல் ஏற்க மறுத்து விட்டார்.

இந்த நிலையில், பிரஸல்ஸ் தாக்குதல் தொடர்பாக நாடு முழுவதும் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது. இதில் சந்தேக நபர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

## பிரஸல்ஸ் தாக்குதல் பற்றி எனக்கு எதுவும் தெரியாது

### சலாஹ் அப்தெல்சம் தெரிவிப்பு

(பிரஸெல்ஸ்)

பாரீஸ் தாக்குதலில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் சலாஹ் அப்தெல்சம் கடந்த வாரம் பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் கைது செய்யப்பட்டார்.

சலாஹ் அப்தெல்சம் கைது செய்யப்பட்டு 4 நாட்கள் ஆன நிலையில் கடந்த செவ்வாய்கிழமை பிரஸல்ஸ் விமான நிலையம் மற்றும் மெட்ரோ ரயிலில் வெடிகுண்டு தாக்குதல் நிகழ்த்தப்புட்டது.

இந்த வெடிகுண்டு தாக்குதலில் 35 பேர் உயிரிழந்தனர. நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்த வெடிகுண்டு தாக்குதல் சம்பவத்திற்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்நிலையில், பிரஸல்ஸ் தாக்குதல் குறித்து சிறையில் உள்ள சலாஹ் அப்தெல்சமுக்கு எதுவும் தெரியாது என்று அவரது சட்டத்தரணி கூறியுளளார்.

இது குறித்து நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே அவரது சட்டத்தரணி ஸ்வென் மேரி செயதியாளர்களிடம்பேசினார.

இந்த தாக்குதல் குறித்து அப்தெல்சமிடம் கேட்கப்பட்டது. அப்தெல்சம் தன்னுடைய எண்ணத்தை மாற்றிக கொண்டார். விசாரணைக்காக பிரான்ஸ் திரும்ப விருப்பமாக உள்ளார். அப்தெல்சம் பெல்ஜியம் பொலிஸாருடன் இணைந்து கொள்ள விரும்பவில்லை.


பிரஸல்ஸ் தீவிரவாத வெடி குண்டு தாக்குதலுக்கான திட்டங்கள் குறித்து அப்தெல்சமுக்கு எதுவும் தெரியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-5)




# அடங்க மறுக்கும் வடகொரியா

## திட எரிபொருள் ரொக்கெட் சோதனை மேற்கொண்டது





(சியோல்)

வடகொரியா நேற்று முனதினம்அதிநவீன தொழிலநுட்பத்துடன் திட எரி பொருளில் இயங்கும் ரொக்கெட்டை ஏவி சோதனை செய்தது. உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி, ஐதரசன் குண்டு மற்றும் ஏவுகணை சோதனைகளை, வட கொரியா நடத்தி வருகிறது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அந்நாட்டின் மீது, ஐ.நா., பொருளாதார தடை விதித்தது.இருப்பினும், வடகொரியா தொடர்ந்து, ஆயுத சோதனைகள் நடத்தி வருகிறது.

இதனால், கொரிய பிராந்தியத்தில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

அந்நாட்டில், பெரும்பாலும், ரொக்கெட் தொழில் நுட்பங்கள், திரவ நிலை சார்ந்தே இயங்குகின்றன. திட எரிபொருளால், சரியான பாதையில், மிக வேகமாக ரொக்கெட்டை இயக்க முடியும்.

இதன் மூலம், ஏவுகணை தொழில்நுட்பத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெறறியைபெற்றுள்ளதாக,வடகொரிய ஜனாதிபதிகிம்ஜாங் உன் பெருமையுடன் கூறியுள்ளார்.



பிரிட்டனில் முதல் முறையாக கொரில்லா ஒன்று அவசர அறுவைச் சிகிச்சை மூலம் வெற்றிகரமாக தன் குட்டி கொரில்லாவைப் பெற்றது. முன்னணி மருத்துவரால் இந்த அறுவைச் சிகிச்சை ரிஸ்டல் மிருகக்காட்சிசாலையில் செய்யப்பட்டது.

# முஸ்லிம் அகதிகளின் காலைக் கழுவிய போப்



ரோம் நகரில் அகதிகள் முகாம ஒன்றில், கத்தோலிக்க திருச்சபையின் ஈஸ்டர் பண்டிகைக் கொண்டாட்டங்களின் தொடக்கத்தைக் குறிக்கும் பிரார்த்தனை நிகழ்வு ஒன்றின்போது, போப் பிரான்ஸிஸ் முஸ்லம் மற்றும் பிற குடியேறிகளின் கால்களைக் கழுவியுள்ளார்.

கேஸ்டல்நுவோ டி போர்டோ என்ற இடத்தில் உள்ள தஞ்சம் கோரிகளின் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் முகாம் ஒன்றுக்கு அவர் விஜயம் செய்தபோது இது நடந்தது.

பாரிஸ் மற்றும் பிரஸல்ஸ் நகரங்களில் நடந்த தாக்குதல்களை அடுத்து எழுந்திருக்கும் கொந்தளிப்பான உணர்வுகள் நிலவும் சூழலில் இந்த விஜயம் இடம்பெற்றிருந்தது.

பிரார்த்தனை நிகழ்வின் போது அவர் ஆற்றிய உரையில், போப் பிரான்ஸிஸ் பிரஸல்ஸ் தாக்குதல்களை இரத்த வெறி பிடித்தவர்கள் செய்யும் போருக்கான சமிக்ஞை என்று வர்ணித்தார்.

குண்டுத் தாக்குதல் நடத்தியவர்களின் உலகப் பார்வையை தனது கூட்டத்தில் கூடியிருந்தோரின் மனப்பாங்குடன் மாறுபடுத்தி ஒப்பிட்டு அவர் பேசினார்.

"எம்மிடம் பல கலாசாரங்களும், மதங்களும் இருக்கின்றன ஆனால் நாம் எல்லோரும் சகோதரர்கள், அமைதியாக வாழவே விரும்புகிறோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# உலக நாடக தின விழா

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள், நிறுவக நடன, நாடகத் துறை நடத்தும் உலக நாடக தின விழா நாளை 27, நாளை மறுதினம் 28 ஆம் திகதிகளில் முற்பகல் 9.30 மணிமுதல் இரவு 8.00 மணிவரை நடைபெறவுள்ளது.

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சி.ஜெயசங்கர் தலைமை தாங்கவுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த.ஜெயசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

நடன, நாடகத்துறை, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் விரிவுரையாளர் அ.விமலராஜ் நிகழ்வு இணைப்பாளராகவும் கடமையாற்றவுள்ளார். (இ)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 | 100 | 70 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 100 | 60 | 70 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 | 120 | 120 | 140 | 100 |
| தக்காளி | 50 | 30 | 30 | 30 | 50 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 | 50 | 80 | 40 |
| கோவா | 50 | 40 | 50 | 50 | 50 | 80 | 40 |
| கரட் | 100 | 100 | 170 | 80-200 | 100 | 120 | 80 |
| பூசணி | 50 | 30 | 20 | 25 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 30 | 40 | 60 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 50 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 80 | 50 | 50 | 60 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 60 | 70 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 140 | 110 | 140 | 100 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 60 | 60 | 100 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | — | 80 | 70 | 120 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 70 | 80 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 150 | 100 | 100 | 100 | 140 | 160 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 70 | 80 | 60 | 100 | 70 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 100 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 450 | 300 | 400 | 800 | 400 | 600 | 800 |
| போஞ்சி | 120 | 200 | 100 | 120 | 140 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 70 | 60 | 50 | 50 | — | 80 | 70 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 15 | 40 | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 160 | 140 | 150 | 120 | 150 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 35-45 | 50 | 40 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 160 | 200 | 120 | 140 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | — | 100 | — | 160 | 70 | — | 80 |
| முள்ளங்கி | 40 | 40 | 50 | 50 | — | 60 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 15 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 50 | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தனர் 139

...இந்தியா- இலங்கை ஒப்பந்தப்படி விடுதலைப் புலிகள் தங்களின் ஆயுதங்களை இந்திய அமைதிப் படையிடம் ஒப்படைத்தனர். இதை ஏற்று விடுதலைப் புலிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்குவதாக இலங்கை அரசு அறிவித்தது.

பிரதமர் ராஜீவ்காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் கையெழுத்திட்ட ஒப்பந்தப்படி விடுதலைப் புலிகள் போரை நிறுத்தி விட்டுத் தங்களிடம் உள்ள ஆயுதங்களை ஒப்படைத்து விட வேண்டும்.

இந்த ஒப்பந்தத்தை ஏற்பதாகவும் ஆயுதங்களை ஒப்படைக்க சம்மதிப்பதாகவும் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அறிவித்தார்.

### ஒப்படைப்பு

இதன்படி விடுதலைப் புலிகள் 5-8-87 அன்று பிற்பகல் முதல் ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்கினர். இதற்கான நிகழ்ச்சி யாழ்ப்பாணம் அருகில் பலாலி என்ற இடத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடந்தது. இந்த இடத்தில் முக்கியமான விமானப்படை தளம் உள்ளது. அங்கு இந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கிரத்சிங், இலங்கை இராணுவ தளபதி சிரில். ரணதுங்க மற்றும் பல அதிகாரிகள் கூடியிருந்தனர்.

தமிழ்நாட்டில் இருந்தும் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் காலை விமானத்தில் சென்ற 90 நிருபர்களும் கொழும்பில் இருந்து வந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 100 நிருபர்களும் வந்திருந்தனர்.

### விடுதலைப்புலிகளின் துப்பாக்கி

இந்த நிகழ்ச்சிப் பிரபாகரன் வரவில்லை. தன் பிரதிநிதிகளாக 3 தளபதிகளை அனுப்பியிருந்தார்.

மாலை 4 மணிக்குப் புலிச் சின்னம் கொடி கட்டிய வேனும் அதைத் தொடர்ந்து மேலும் 4 வேன்களும் வந்தன.

அவற்றில் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் என்று எழுதப் பட்டு இருந்தன. வேன்களை விடுதலைப்புலிகள் ஓட்டி வந்தனர்.

அந்த வேன்களில் ஆயுதங்கள் வைக்கப்பட்டு இருந்தன.

அதைத் தொடர்ந்து ஆயுத ஒப்படைப்பு நிகழ்ச்சி தொடங்கியது.

அமைதிப்படையின் கமாண்டர் மேஜர் ஜெனரல் ஹரிகிரத்சிங் வரவேற்றுப் பேசினார். அவர் பேசுகையில் கூறியதாவது:-

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் படி, விடுதலைப் போராட்ட இயக்கங்களை தங்கள் ஆயுதங்களை எங்களிடம் (அமைதிப்படையிடம்) ஒப்படைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதையொட்டி இந்த விழா நடக்கிறது.

### ஜெயவர்த்தனவின் பிரதிநிதி

அந்த ஆயுதங்களை எங்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்காக இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன இலங்கை அரசின் இராணுவ இலாகா செயலாளர் அட்டிகலேவை இங்கு அனுப்பி உள்ளார்.

இன்று ஆயுதங்களை முழுமையாக ஒப்படைக்கவில்லை. இதனை ஒரு தொடக்க விழாவாகக் கருதுகிறோம். இனி விடுதலைப்போராட்ட இயக்கங்கள் தொடர்ந்து தங்கள் ஆயுதங்களை ஒப்படைப்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

### அடையாளமாக

அதைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் அரசியல் தலைவர் திலிப்யோகி, ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு அடையாளமாக மேஜை மீது ஒரு துப்பாக்கியை வைத்தார்.

அதை ஏற்றுக் கொள்வதற்கு அறிகுறியாக துப்பாக்கி மீது இலங்கை தளபதி சிரில் ரணதுங்க தன் கையை வைத்தார்.

அதன்பின்னர் விடுதலைப் புலிகள் 5 வேன்களில் கொண்டு வந்த ஆயுதங்களை அமைதிப்படையினர் ஏற்று பட்டியல் தயாரித்தார்கள்.

இயந்திரத் துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், எரியும் வெடிகுண்டு, வெடி குண்டுகள், கண்ணிவெடி உட்பட நவீன ஆயுதங்கள் இருந்தன. இதை பல நாடுகளிலும் தயாரிக்கப்பட்டவை என்றும் மொத்த மதிப்பு பல லட்சம் ரூபாய் பெறும் என்றும் அமைதிப்படை இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

### பொது மன்னிப்பு

பின்னர் இலங்கை இராணுவ இலாகா செயலாளர் டி.எஸ்.அட்டிகலே பேசுகையில் கூறியதாவது:-

யாழ்ப்பாணக் குடா நாட்டின் மக்களே! வருங்கால இலங்கைக்கு இன்று ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாள்.





இந்திய அமைதிப்படையிடம், விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டபோது எடுத்த படம்.

(தொடரும்)

# ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பின் இலக்கு நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கம்

(கொழும்பு)

**ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் இலக்கு நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இந்த ஆண்டு வெளிநாடுகளில் தாக்குதல் நடத்தும் பட்டியலில் இலங்கையின் வரைபடமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. சர்வதேச பாதுகாப்பு மற்றும் போர் தொடர்பில் ஆய்வு நடத்தும் அமெரிக்க நிறுவனமொன்று வெளியிட்ட புதிய வரைபடத்தில் இலங்கைக்கு ஆபத்து இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இதுபோன்ற ஓர் ஆவணம் வெளியிடப்பட்ட போது இலங்கையின் வரைபடம் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த ஆண்டில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டம் வகுத்துள்ள நாடுகள் மற்றும் உறுப்பினர்களை இணைத்துக் கொண்டுள்ள நாடுகளையும் உள்ளடக்கியே புதிய அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சிரியா, ஈராக், ஜோர்தான், இஸ்ரேல், லெபனான், சீனா, ரஷ்யா, அமெரிக்கா, இந்தியா, இலங்கை, சூடான், ஈரான், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகள் மீது தாக்குதல் நடத்தப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு முப்படையினரைக் கொணடு பாதுகாப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வுத் தகவல்களை திரட்டி வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கட்டுநாயக்க விமான நிலையம், கொழும்பு துறைமுகம், உலக வர்த்தக நிலையம், பிரதான மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளிட்டவை குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# அமைச்சர் எஸ்.பியின் தொலைந்துபோன மாணிக்க மோதிரம் கண்டுபிடிக்கப்பட்டது

(கொழும்பு)

அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் ஐந்து இலட்சம் பெறுமதியான மோதிரம் தொலைந்து பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

கண்டி லுனுகம என்ற இடத்தில் நிகழ்வு ஒன்றில் அமைச்சர் நேற்று முன்தினம் பங்கேற்றார்.

இதன் போது தமது மாணிக்கக்கல் பதித்த மோதிரத்தை காணவில்லை என்று அமைச்சர் கூறியதும் அந்த இடத்தில் பதற்றநிலை தோன்றியது.

இதனையடுத்து அனைத்து இடங்களிலும் தேடியபோதும் பின்னர் அமைச்சர் குறித்த நிகழ்வுக்கு வருவதற்கு முன்னர் உடுநுவர பிரதேச ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரின் வீட்டின் கழிப்பறையில் இருந்து



அது மீட்கப்பட்டது. (இ-5)

## 75 இலட்சம் ரூபா நாணயத்தாள்களுடன் இந்திய பிரஜை கைது

75 இலட்சம் ரூபா இலங்கை நாணயத்தாள்களுடன் இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று அதிகாலை 4.10 மணியளவில் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாய், சார்ஜாவிற்குச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த 44 வயதுடைய இந்திய பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (இ-5)

# அறிவித்தல் விடுத்தால் மட்டும் தான் யோஷித மன்றில் ஆஜராக வேண்டும்

(கொழும்பு)

லெப்டினன் யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு தாக்கல் செய்துள்ள வழக்கு விசாரணையில், சந்தேக நபர்கள் நீதிமன்றில் அறிவித்தல் விடுக்கப்பட்டால் மட்டுமே ஆஜராக வேண்டும் என்ற உத்தரவால் நேற்று முன்தினம் சிக்கல் நிலை ஏற்பட்டது.

சி.எஸ்.என். விவகாரம் மற்றும் போலி ஆவணங்களை தயாரித்தமை, திட்டமிட்டு நம்பிக்கை துரோகம் செய்தமை, திட்டமிட்ட மோசடி, சுங்க சட்டத்தை மீறியமை மற்றும் நிறுவன சட்டங்களை மீறியமை, அரசாங்க சொத்துக்களை தவறாக பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழும் யோஷித உள்ளிட்ட 10 சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கு கடுவலை நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது.



நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடுவலை பிரதான நீதவான் தம்மிக ஹேமபால முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்தது. இது தொடர்பில் கடந்த மார்ச் 10 ஆம் திகதி கடுவலை நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

எனினும் கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரின் பிணைக் கோரிக்கை மனு தொடர்பிலான விசாரணையில் அனைவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வாறு விடுதலை செய்யப்படும் போது நீதிமன்றம் அறிவித்தல் விடுத்தால் மட்டுமே மீண்டும் மன்றில் ஆஜராக வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந் நிலையில் கடந்த மார்ச் மாதம் 10 ஆம் திகதி கடுவலை நீதவான் தம்மிக ஹேமபால விடுத்த உத்தரவுக்கு அமைய நேற்று முன்தினம் சி.எஸ். என். விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைக்கு ஆஜராக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் மேலதிக விசாரணை அறிக்கையுடன் விசாரணைகளுக்கு தேவையான சில அனுமதிகளைப் பெற மன்றுக்கு வருகை தந்தனர்.

எனினும் சந்தேக நபர்கள் எவரும் வருகை தரவில்லை. அத்துடன் வழக்கும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. நேறறு முன்தினம் விசாரணை செய்யப்படும் வழக்குகளில் அந்த வழக்கு இல்லை என பின்னர் தெரியவரவே, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளும் ஏமாற்றத்துடன் மன்றிலிருந்து வெளியேறினர்.

இந் நிலையில் இது குறித்த வழக்குப் புத்தகத்தை பார்வையிட ஊடகவியலாளர்கள் நீதிமன்ற பதிவாளரிடம் சென்றனர். நேற்று முன்தினம் நீதிமன்ற பதிவாளர் விடுமுறையில் இருந்த நிலையில், மற்றொரு நீதிமன்ற பிரிவில் வழக்குப் புத்தகம் வைக்கப்பட்டிருந்தது. வழக்குப் புத்தகத்தை பார்வையிட அங்கிருந்த உத்தியோகத்தரிடம் அனுமதி கோரிய போது, நீதவான் வழக்குப் புத்தகத்தை யாருக்கும் காட்ட வேண்டாம் என அறிவித்துள்ளார் என அவர் கூறினார்.

இந் நிலையில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இடை மனுவொன்றூடாக அடுத்த வாரம் விசாரணைகளை மீள கோரலாம் என தெரிவிக்கப்பட்டது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வெவ்வேறு கோணங்கள்–வித்தியாசப் பார்வைகள்

ஒரு திசைகாட்டு கருவியை உரிய கோணத்தில் இருந்து பார்த்தால் தான் எது எது எந்தெந்த திசை என்கிற உண்மை தெரிய வரும்.

எந்தக் கோணத்தில் இருந்து காண வேண்டும் நம் நிலை சரிதானா? என்றெல்லாம் பாராமல் ஒரு திசைகாட்டும் கருவியை எட்டுப் பேர் சுற்றி நின்று பார்க்கும் நிலையே இன்று பலருடைய நிலை.

இவர்களுள் ஒருவரது நிலையே சரியானதாக இருக்கும். இதில் வேடிக்கை என்னவென்றால் அவரும் அதை உணர்ந்தவராக இருக்க மாட்டார்.

இன்னும் எளிமையாகச் சொல்ல வேண்டுமானால் யானையைத் தொட்டுப் பார்த்த ஐந்து குருடர்களின் கதையே இன்று பலருடைய நிலை.

எதிரெதிராக வந்து மோதிக் கொள்ளும் இருவர், நீ செய்தது தான் தவறு என்று ஒருவரை ஒருவர் மாற்றி மாற்றி குற்றம் சாட்டிக் கொண்டிருப்பார்கள்.

இந்த உதாரணம் நடைமுறை வாழ்க்கையிலும் பொருந்துவதாக இருக்கிறது. ஒவ்வொருவரும் தங்கள் கோணத்தில் இருந்து பார்க்கும் போதெல்லாம் தாங்கள் செய்வதே நூற்றுக்கு நூறு சரியென்று எண்ணுகிறார்கள். அதில் உள்ள தவறை உணராமல் தங்களது வாதத் திறமையால் தங்களை நியாய வாதிகளாகவும் ஆக்கிக் கொண்டு விடுகிறார்கள்.

அதோடு விடுகிறார்களா?

ஒவ்வொருவரும் தன் சொற்படி நடக்க வேண்டும் எனவும் விரும்புகிறார்கள்.

இத்தகைய மனப்பான்மை நிலவுவதால் தான் வாக்குவாதங்களும் சர்ச்சைகளும் பெருத்து வருகின்றன.ஒருவருடன் ஒருவர் ஒத்துப் போவது என்பது சாத்தியப்படாமல் போகிறது.

ஐந்து விரல்களும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இவற்றில் இருந்து இரு உண்மைகள் மிகத் தெளிவாகத் தெரிய வருகின்றன.

அதாவ்து,எல்லோரும் தம்முடைய கருத்துக்கு உட்பட வேண்டுமென எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.

இன்னொன்று,நம்முடைய செயலிலும் முடிவிலும் பார்வைக் கோணத்திலும் கூடக் (கண்பார்வையல்ல)கோளாறு இருக்கலாம் என்பது ஒவ்வொருவருடைய மனவளமும் மனநிலையும் அவரவர் வளர்க்கப்பட்ட விதத்தை ஒட்டியும் பரம்பரைத் தன்மையை ஒட்டியும் கல்வி அறிவு, உலக அறிவை ஒட்டியும் பக்குவப்படுகின்றன. அல்லது பண்படாமல் போகின்றன.

இந்நிலையில்,உங்கள் அன்புக்கு உட்பட்டவர்கள் என்றால் மட்டுமே அவர்களை உங்கள் வழிக்குக் கொண்டுவரும் முயற்சியில் இறங்க வேண்டும்.

முன் பின் தெரியாதவர் அல்லது அறிமுகம் இருந்தும் நம்முடைய அக்கறைக்கு அப்பாற்பட்டவர் ஆகியோரெல்லாம் உங்கள் வழியில் நடக்க வேண்டுமென்றோ உங்கள் கருத்தோடு உடன்பட வேண்டுமென்றோ எதிர்பார்த்து ஏமாந்து விரக்தி அடையாதீர்கள். அதேநேரத்தில் சுயநல நோக்கோடு ஒரு முடிவுக்கு வந்து அதை நியாயப்படுத்தும் முயற்சியிலும் இறங்க வேண்டாம்.

இவ் விதிகள் பின்பற்றப்பட்டால் வாழ்வில் பெரும்பகுதி கசப்புச் சம்பவங்கள் குறையும்.

வாழ்வு இனிக்கும்.

லேனா தமிழ்வாணன்



# சிறுவர் அரங்கம்

1393

# தூக்கிப் போடுங்கள்!



புகழ் பெற்ற குரு ஒருவர் சீடர்களுக்கு பாடம் சொல்லிக் கொண்டு இருந்தார்.

அப்போது சீடர்களின் தலைவனான மூத்த சீடன் குருவைப் பார்த்தான்.

"குருவே! நாங்கள் விழிப்புணர்வு பெறுவது எப்படி?" என்று கேட்டான்.

"உங்களை அறிவால் நிரப்பிக் கொள்ளுங்கள்!" என்றார்.

"அறிவால் நிரப்பிக் கொள்வது என்றால் எப்படி குருவே? புரியவில்லை.

சற்று விளக்கமாகச் சொல்லுங்கள்!" என்றான் சீடன்.

"உங்களை அறிவால் நிரப்பிக்கொள்வது என்றால் பல நூறு ஓட்டைகள் கொண்ட ஒரு சல்லடையில், நீரை நிரப்புவது போன்றதாகும்!" என்றார்.

"சல்லடையில் நீரை நிரப்புவதா? அதெப்படி முடியும் குருவே?" என்றான் சீடன்.

"முயன்று பாருங்கள் முடிகிறதா? இல்லையா? என்பதை நாளை என்னிடம் சொல்லுங்கள்!" என்றார்.

"சரி குருவே!"

சபை கலைந்தது.

சீடர்கள் ஒன்றுகூடி சல்லடையில் நீரை எப்படி நிரப்புவது என்பது பற்றி கலந்து பேசத் தொடங்கினர்.

"செய்துதான் பார்ப்போமே!" என்றான் சீடன்.

ஒரு பெரிய சல்லடை கொண்டு வரப்பட்டது.

ஒரு சீடன் அதில் நீரை ஊற்றினான்.

நீர் சல்லடை ஓட்டைகளின் வழியே வெளியேறியது.

"ஊஹூம்! இது சாத்தியமில்லை!"

மறுபடியும் யோசித்தனர்.

"ஒரு யோசனை!" என்றான் ஒரு சீடன்.

"என்ன?"

"சல்லடையில் ஐஸ்கட்டியை நிரப்பலாம்!"

"ஆஹா! அருமையான யோசனை. அது ஓட்டைகள் வழியே ஓடாது. அதுவும் திட நீர்தானே!"

"ஆமாம்! ரொம்ப சரி!"

சல்லடையில் ஐஸ் கட்டி நிரப்பப்பட்டது.

சிறிது நேரம்தான்.

ஐஸ்கட்டி உருகி, ஓட்டைகள் வழியே நீராக ஓடிவிட்டது.

சீடர்கள் சோர்ந்து போயினர்.

மறுநாள் குருவின் முன்னே தலை கவிழ்ந்து நின்றனர்.

"குருவே! சல்லடையில் நீரை நிரப்புவது சாத்தியமே இல்லை!" என்றனர்.

குரு அவர்களைக் கூர்ந்து பார்த்தார்.

"சல்லடையை எடுத்துக்கொண்டு என்னோடு வாருங்கள்!" என்று சொல்லி விட்டு நடந்தார் குரு.

சீடர்கள் அவர் பின்னே ஓடினர்.

ஆசிரமத் தோட்டத்தில் சீடர்கள் குளிக்கும் பெரிய நீர்த்தொட்டியில் போட்டார்.

சல்லடை நீருக்குள் மூழ்கியது.

குரு சீடர்களைப் பார்த்தார்.

"இப்போது சல்லடையில் நீர் நிரம்பியிருக்கிறது அல்லவா?" என்று கேட்டார் குரு.

"ஆமாம்!"

குரு சொன்னார்.

"விழிப்புணர்வு பெறுவது எப்படி என்று கேட்டீர்கள்.

அதைப் பெற அறிவு என்னும் கடலில் உங்களைத் தூக்கிப் போடுங்கள்...

அறிவு உங்களை விட்டு விலகி ஓடிவிடாது!" என்றார் குரு.

சீடர்களுக்குத் தெளிவு பிறந்தது.

## 03.2016 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1199 - இங்கிலாந்து மன்னன் முதலாம் ரிச்சார்ட் பிரான்சை முற்றுகையிடும்போது படுகாயமடைந்தான். 11 நாட்களின் பின்னர் இவன் இறந்தான்.
- 1431 - பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப்ஆர்க் மீதான முன் விசாரணைகள் ஆரம்பமானது.
- 1552 - குரு அமர்தாஸ் சீக்கியரின் மூன்றாவது மத குருவானார்.
- 1812 - வெனிசுவேலாவின் கரக்காஸ் நகர் நில நடுக்கத்தில் அழிந்தது.
- 1871 - இலங்கையில் முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது. 2.405.287 பேர் பதிவாகினர்.
- 1872 - கலிபோர்னியாவில் லோன் பைன் என்ற இடத்தில் 7.2 ரிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவு செய்யப்பட்டது.
- 1917 - முதலாம் உலகப் போர்: காசாப் பகுதியில் இடம்பெற்ற முதலாவது சமரில் பிரித்தானியப் படைகளின் முன்னேற்றம்- சுமார் 17,000 துருக்கியர்களால் தடுக்கப்பட்டது.
- 1934 - ஐக்கிய இராச்சியத்தில் வாகன ஓட்டுநர்களுக்கான பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: போலந்தில் அவுஷ்விட்ஸ் வதைமுகாமில் முதற்தடவையாக பெண்கள் சிறைக்கைதிகளாயினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானுடனான இவோ ஜீமா சண்டை முடிவுக்கு வந்ததாக ஐக்கிய அமெரிக்கா அறிவித்தது.
- 1953 - ஜொனாஸ் சால்க் தினது போலியோ தடுப்பூசியை அறிமுகப்படுத்தினார்.
- 1958 - ஐக்கிய அமெரிக்க இராணுவம் எக்ஸ்புளோரர் 3 விண்கலத்தை ஏவினர்.
- 1971 - கிழக்கு பாகிஸ்தான் பாகிஸ்தானிடமிருந்து விடுதலையை அறிவித்தது. வங்காள தேச விடுதலைப் போர் ஆரம்பமானது.
- 1979 - இஸ்ரேல்-எகிப்து அமைதி ஒப்பந்தம் வோஷி ங்டனில் கைச்சாத்தானது.
- 1997 - சுவர்க்கத்தின் வாயில் என்ற மதக் குழுவில் தற்கொலை செய்துகொண்ட 39 பேரின் உடல்கள் கலிபோர்னியாவில் கண்டெடுக்கப்பட்டன.
- 2006 - மியன்மாரின் புதிய தலைநகராக நாய்பிடோ என்ற புதிய நகரம் இராணுவ ஆட்சியாளர்களால் அறிவிக்கப்பட்டது.
- 2000 - விளாடிமீர் புடின் ரஷ்யாவின் ஜனாதிபதியாகத் தெரிவானார்.
- 2005 - தமிழீழ தேசிய தொலைக்காட்சி கிளிநொச்சியில் ஆரம்பமானது.
- 2006 - முதலாவது அறிவியல் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது.

### பிறப்புக்கள்

- 1874 - றொபேட் ஃபுறொஸ்ட் அமெரிக்கக் கவிஞர் (இ. 1963)
- 1913 - பால் ஏர்டோசு, அங்கேரிய கணிதவியலாளர் (இ. 1996)
- 1916 - கிறிஸ்டியன் ஆன்பின்சன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1995)
- 1938 - அந்தனி லெகெட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1940 - நான்சி பெலோசி, அமெரிக்க அரசியல்வாதி
- 1941 - ரிச்சர்ட் டாக்கின்ஸ், படிவளர்ச்சி உயிரியலாளர்
- 1951 - கார்ல் வைமன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்புக்கள்

- 1827 - லுடுவிக் ஃவான் பேத்தோவன், ஜேர்மனிய மேற்கத்திய செவ்விசை இயற்றுநர் (பி. 1770)
- 1892 - வால்ட் விட்மான், அமெரிக்கக் கவிஞர் (பி. 1819)

# மதுபானசாலை அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் அமைச்சர்கள் பட்டியலைக் கோருகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

**மதுபானசாலை அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நிதி அமைச்சர் ரவி கருணநாயக்கவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**



எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக கூட்டத்தில் இந்த அறிக்கையை சமர்ப்பிக்கு மாறு கோரியுள்ளார். நேற்று முன்தினம் ஜனாதிபதி இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் நூறு பேருக்கு மதுபான சாலை அனுமதிப்பத்திரங்கள உண்டு என வெளியான தகவல்களை அடுத்து இந்த அறிக்கையை கோரியுள்ளார்.


இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் மகிந்த சமரசிங்க அமைச்சரவைக் கூட்டத்தில் கேள்வி எழுப்பியிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் 100 பேருக்கு மதுபான சாலை அனுமதிப்பத்திரங்கள் காணப்படுவதாகவும், அவை எந்தக்காலத்தில் வழங்கப்பட்டன. அவற்றை யார் நடத்திச் செல்கின்றனர் என்பது பற்றிய விபரங்களை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமென அமைச்சர் சமரசிங்க கோரியுள்ளார்.

. நல்லாட்சி அரசாங்கம் மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களை வழங்கவில்லை எனவும் இது குறித்து ஐயமின்றி தகவல்களை தெரிநது கொள்ள அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி நிதி அமைச்சருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இந்த அறிக்கையை சமர்ப்பிப்பதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க இணங்கியுள்ளார். (இ-5)

# 2 ஜப்பானிய கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில்




ஜப்பானின் இரண்டு கடற்படை கப்பல்கள் இலங்கை வந்துள்ளன. கொழும்பு துறைமுகத்தில் இந்த இரண்டு கப்பல்களும் நேற்று முன்தினம் நங்கூரமிட்டன.

யுடாச்சி மற்றும் யுகாரி என்ற கப்பல்களே நல்லிணகக விஜயத்தின் அடிப்படையில் இலங்கைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பலில் பயணித்த வரகளுக்கு இலங்கை கடற்படையனர் வரவேற்பை அளித்தனர்.

இதன்போது இலங்கையின் மேற்கு பிராந்திய கடற்படை தளபதிக்கும் கப்பலின் தலைவருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

இதேவேளை அமெரிக்காவின் கடற்படை கப்பல் ஒன்று இன்று கொழும்பு துறைமுகத்துக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 673

Search for people, places and things · Nagendram · Home


தர்மசிலன்




ரகுபரன்





கரோலின்




ரதி




சிவசரகரன்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையின் இழந்துபோன தலைமுறை

பல்வேறு துன்பங்களுக்கு முகங்கொடுத்துள்ள தமிழ்ச் சமூகமானது, போருக்குப் பின்னான தற்போதைய சூழலில் இராணுவத்தினரின் பிரசன்னங்களையும் தலையீட்டையும் சகித்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இவ்வாறு பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் **daily times** நாளிதழில், இஸ்லாமாபாத்தைச் சேர்ந்த



சுதந்திர ஊடகவியலாளரான **Mubashir Noor** எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்திய பாரதி.

இலங்கையின் உள்நாட்டு யுத்தமானது ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுற்ற போதிலும் இன்றும் இந்த நாட்டைப் பிரிக்கின்ற சமூகப் பிரச்சினைகளைக் காணலாம். இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பல்வேறு யுத்தக் குற்றங்களை மேற்கொண்ட சிங்களப் பேரினவாத அரசு மீது இன்றும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் வெறுப்புடனேயே உள்ளனர்.

போரானது இரண்டு பத்தாண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்ததன் விளைவாக ஏற்பட்ட பல்வேறு வடுக்கள் மற்றும் உளப்பாதிப்புக்கள் போன்றன இன்றும் தமிழ் இளையோர்கள் மத்தியில் தாக்கத்தைச் செலுத்துகின்றன. இவர்கள் இலங்கையின் பாதிக்கப்பட்ட தலைமுறையினராக வாழ்கின்றனர்.

இலங்கையின் முன்னாள் படைவீரர்களை மலேசியாவிற்கு அழைத்து பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்துவது தொடர்பான மலேசியாவின் உள் விவகார அமைச்சின் திட்டத்தை எதிர்த்து மார்ச் 08, 2016 அன்று மலேசிய இந்திய காங்கிரசின் இளையோர் பணிப்பாளர் சிவராஜ் சந்திரன் தனது கண்டனத்தை வெளியிட்டிருந்தார். 'ஏனெனில் இத்திட்டமானது உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் உணர்வலைகளை மதிக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நீண்டகால யுத்தத்தின் போது தமிழ்ப் பொது மக்களைப் படுகொலை செய்த இலங்கைப் படையினரைத் தமிழ் மக்கள் மிகத் தீவிரமாக வெறுக்கின்றனர்' என சந்திரன் விளக்கினார்.

முறிவுற்ற இலங்கையை ஒன்றிணைத்துப் பணியாற்றுவேன் என்கின்ற தேர்தல் வாக்குறுதியை மதித்தே கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத தேர்வு செய்யப்பட்டார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தமானது உத்தியோகபூர்வமாக 1983 இல் ஆரம்பமாகியது. ஆனால் இந்தப் பிரச்சினைக்கான மூலவேர் மூன்றரை நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதாகும். கிட்டத்தட்ட கி.மு 1500 ஆண்டுகளில், வடக்கிலிருந்து ஆரிய ஆக்கிரமிப்பாளர்கள் இந்திய உபகண்டத்தின் ஊடாக திராவிடர்களை நோக்கிப் படையெடுத்தனர். இலங்கையில் வாழும் பௌத்த சிங்களவர்கள் ஆரியர்களின் வழித்தோன்றல்கள் எனவும் தமிழ் மக்கள் புராதன திராவிடர்களின் வழித்தோன்றல்கள் எனவும் கூறப்படுகின்றது. அன்றைய காலத்திலிருந்தே இவ்விரு சமூகத்தவர்களுக்கும் இடையில் முரண்பாடுகளும் முறிவுகளும் ஏற்படத் தொடங்கின. இது இலங்கை 1948 இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் மேலும் தீவிரம் பெற்றது.

இனங்களுக்கிடையில் பாரபட்சங்கள் நிலவிய போதே இது யுத்தமாக வெடித்தது. 1972 இல், சிங்கள அரசியல்வாதிகள் வரலாற்று ரீதியாக இலங்கைய கொண்டிருந்த சிலோன் என்கின்ற பெயரை மாற்றியதுடன் பௌத்த மதத்தை அரச மதமாகப் பிரகடனப்படுத்தினார்கள். இதுவே தமிழ் மக்கள் மத்தியில் ஆயுதப் போராட்டம் ஒன்று வெடிப்பதற்குக் காரணமாகியது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டிலிருந்த இடங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இலங்கையில் தொடரப்பட்ட யுத்தத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட நலிந்த மக்கள் சமூகத்தினராக இருந்தனர். விடுதலைப் புலிகள் அமைப்பும் இலங்கை அரசாங்கமும் இவர்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தினர். தமிழீழ விடுதலைப் புலிகளால் சிறுவர்கள் ஆட்சேர்க்கப்பட்டு போர்க்களத்தில் நிறுத்தப்பட்டனர். தமது கட்டுப்பாட்டிலிருந்த குடும்பங்களிலிருந்து ஒரு பிள்ளை என்கின்ற விகிதத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பால் படைக்கு ஆட்சேர்க்கப்பட்டனர். 1998 இல் கிளிநொச்சியில் இடம்பெற்ற தனியொரு யுத்தத்தில் 500 இற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த சிறுவர் போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

இன்றும்கூட இலங்கைத் தமிழ் இளையோர்கள் தமது உடல் உறுப்புக்களை இழந்து மனவடுக்களுடன் வாழ்வதைக் காணலாம். கடந்த இருண்ட யுகத்தின் போது தாம் பிறந்ததை நினைத்து இவர்கள் வருந்துகின்றனர். பிறிதொரு பிரிவினர் புகைப்பிடித்தல் மற்றும் தெருக்களில் செல்லும் பெண்களை கேலிசெய்தல் போன்ற கெட்ட பழக்க வழக்கங்களுக்கு ஆட்பட்டுள்ளனர் என்பதும் இங்கு வேதனையான விடயமாகும். போதைப் பொருட் பாவனையும் இலங்கையின் முன்னாள் போர் வலயத்தில் தற்போது அதிகரித்துள்ளது. இவ்வாறான பல்வேறு துன்பங்களுக்கு முகங்கொடுத்துள்ள தமிழ்ச் சமூகமானது, போருக்குப் பின்னான தற்போதைய சூழலில் இராணுவத்தினரின் பிரசன்னங்களையும் தலையீட்டையும் சகித்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர்.

தேர்தல் பரப்புரையின் போது, தனது முன்னாள் ஆட்சியாளர் மகிந்த ராஜ பக்ஷவின் தந்திரோபா யம் மிக்க அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் அமை தியை நிலை நாட்டுவேன் என சிறிசேன வாக்குறுதி வழங்கியிருந்தார். எனினும், மே 2015 இல் அமெரிக்காவின் ஒக்லாண்ட் நிறுவகத்தால் வெளியிடப் பட்ட அறிக்கையில் 'இலங்கையில் வேறுபட்ட தோற்றப்பாட்டின் கீழ் அமைதிப் போர் தற்போதும் தொடர்கின்றது' என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாது இலங்கை அரசாங்கமானது தொடர்ந்தும் தமிழ் மக்களின் சொந்த இடங்களில் அவர்களைக் குடியேற்றுவதில் தாமதத்தை ஏற்படுத்துவதாகவும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்த இலங்கை இராணுவத்தினர் அதில் சொகுசு விடுதிகள் மற்றும் சூதாட்ட விடுதிகளை அமைத்து இவற்றின் மூலம் வருமானம் ஈட்டிவருவதாகவும் அமெரிக்காவின் ஒக்லண்ட் நிறுவகத்தின் அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிறிசேனவின் தற்போதைய ஆட்சியில் பொருளாதாரமானது 7.4 வீதமாக அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்தும் ஐந்து பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடன்களால் மொத்தத் தேசிய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

காலம் கடக்கும் போது தமிழ் மக்களுக்கு உண்டான வடுக்கள் மாறினாலும் கூட, இலங்கையில் இடம்பெறும் இனத்துவ அரசியலானது தொடர்ந்தும் இடம்பெறும்.

இது தொடர்பில் சிறிசேன தனது வாக்குறுதிகளுக்கு அமைவாகச் செயற்படுவரேயானால் மட்டுமே இது முடிவிற்கு வரும். இல்லாவிட்டால் இலங்கை வாழ் தமிழ் இளையோர் தொடர்ந்தும் பல்வேறு பாதிப்புக்களுக்கு முகங்கொடுப்பதுடன், ஒரு நலிவடைந்த தரப்பாகவே வாழவேண்டியேற்படும்.

# இயேசுவின் உயிர்த்தெழல்



இயேசுவின் உயிர்த் தெழல் பெருநிகழ்ச்சி
அவர் நேசரின் வாழ்விலும் வருநிகழ்ச்சி
நாசமோ மோசமோ நமக்கில்லை
விசுவாசிகள் தமக்கு இறப்பில்லை

பெரிய வெள்ளியன்று இயேசுவின் சீடர்கள் ஒரு பயங்கரக் காட்சியைக் கண்டனர். தாம் மனமார நேசித்த தமது குருநாதர் தமக்கு விடுதலை வாங்கித் தருவார் என்று நம்பிக்கையையூட்டியவர் மிகவும் பரிதாபமாக இரண்டு கள்வர்கள் மத்தியில் சிலுவையில் தொங்கி மரணத்தைத் தழுவிக் கொண்டார். இது அவர்களுக்கு ஜீரணிக்க முடியாத சோகக் காட்சியாக விருந்தது. சிலர் தனியாகவும் சிலர் கூட்டமாகவும் புலம்பிக் கொண்டிருந்தனர்.

சீடர்கள் இயேசு பிரான் உயிரோடிருக்கையில் கூறியதனை நம்பவில்லை. இந்தத் தேவாலயத்தை இடியுங்கள் மூன்று நாளில் அதனைத் திரும்பக்கட்டு வேன் என்று கூறியிருந்தார்.

ஆனால் இயேசு பிரானின் எதிரிகள் அதனை மனதில் இருத்தியிருந்தனர். அவர் உயிர்த்தெழுந்து விட்டார்என்று கூறி அவரின் உடலை எடுத் துச் சென்று விட்டு உயிர்த்தெழுதல்பற்றியபோதனையை கூறத் தொடங்குவர் என்று எச்சரிக்கையாயிருந்தனர். இதனால் அவருடைய கல்லறைக்கு ரோமரின் பலத்த காவல் போடப்பட்டிருந்தது.

இயேசுவின் சீடர்கள் யூதர்களினால்வேட்டையாடப்பட்டனர்.அவர்கள் ஒளித்து ஒளித்து தலைமறைவாக வாழவேண்டிய சூழல் ஏற்பட்டது.

இயேசு பிரான் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். நாற்பது நாட்கள் பூலோகத்திலிருந்து மறைவதற்கு முன்புஅவர்களுக்குதிரும்பத் திரும்ப காட்சி கொடுத்து அவர்களைப் பலப்படுத்தி வந்தார்.

உயிர்த்தெழுந்த காட்சி, அஞ்சி அஞ்சி ஓடிய இயேசுவின் அடியார்கள்எதற்கும்அஞ்சாத சிங்கங்களாக மாற்றிவிட்டது.அவர்கள்அரசர்நடுங்க நீதி சொன்னார்கள். யூதருக்கு எதிராக துணிச்சலுடன் வாதிட்டனர். இயேசுவைப்போலஅற்புதங்களைச் செய்தனர் இயேசுவின் நற்செய்தியைக்கூற உலகெங்கும் பறந்து சென்றனர். பேதுரு ரோமாபுரிக்கும்தோமா இந்தியாவுக்கும்ஓடிச்சென்றனர்.

இயேசுவின்உயிர்த்தெழுதலுக்கு, சீடர்களின் துணிவு, மனோதிடம் என்பதுதான் முக்கியமான சான்று. நாணலை கற்பாறைகளாக்கின. அக்காட்சி இன்றும் அடியார்களுக்கு வைராக்கியத்தையும் தெளிவையும் தந்து கொண்டிருக்கின்றது. அந்த நம்பிக்கையோடு நமது பூலோக பயணத்தை தொடர்வோமாக.

கலாநிதி
எஸ்.ஜெபநேசன்
முன்னாள் பேராயர்,
தென்னிந்தியத்
திருச்சபை

# சிங்கள மக்களை கவனிப்பதில்லை

## மைத்திரி மீது பாயும் பலசேனா

(கொழும்பு) —

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது தமிழ் உறவினர்களை பார்க்க மாதம் ஒருமுறை யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டு வருகின்றார். வடக்கு மக்கள் மீதான நல்லாட்சி அரசாங்கத்தின் கவனிப்பும் அமோகமாகவுள்ளது.**



ஆனால் நாட்டில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்கள் தொடர்பில் அவர் சிறிதும் அக்கறை கொள்ளாதிருக்கின்றாரென பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம்கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா போகஸ்வெவ பகுதியில் சிங்கள குடியிருப்புகள் புதிதாக உருவாக்கப்பட்டன. இவை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் உருவாக்கப்பட்டவை. தற்போது இக்குடியிருப்பை சேர்ந்த மக்கள் உணவு, இருப்பிடம், தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாமையினால் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இம்மக்களுக்கு இதுவரையில் காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கப்படவில்லை. இவர்கள் உறுதிப்பத்திரங்கள் கோரி அரசாங்க அலுவலகங்களுக்கு செல்லும் போது தமிழ் மாகாண சபை உறுப்பினர்களின் அச்சுறுத்தலகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவை அரசியல் பிரச்சினைகள் அல்ல. மனிதாபிமானம் சார்ந்த பிரச்சினைகள் என ஆட்சியாளர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இப்போதும் யார் இனவாத போக்கில் செயற்பாடுகின்றார்கள் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளமால் இருப்பது வருந்தத்தக்கது.

தற்போது எமது நாட்டில் தமிழ் பிரிவினைவாத குழுக்கள் அதிகமாக உருவெடுக்கின்றன. கடந்த அரசாங்கம் அவர்களுக்கு அஞ்சாமல் சிங்கள மக்களுக்கு சேவை செய்தது. இராணுவத்தினரின் உதவியையும் பெற்றுக்கொடுத்தது.

ஆனால் தற்போது சிங்கள மக்கள் வவுனியா உள்ளிட்ட தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளிலிருந்து வெளியேறிச் செல்கின்றனர்.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதிக்கு பின்னர் இம் மக்களுக்கு எந்தவித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை. இவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. எனவே எதிர்காலத்திலாவது இவர்கள் மீது கவனம் செலுததுங்கள் என்று ஆட்சியாளர்களை வலியுறுத்துகின்றோம்.

வடக்கின் தமிழ் உறவுகளை சந்திக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாதம் ஒருமுறையாவது யாழ்ப்பாணம் செல்கின்றார். வடக்கின் தமிழ் மக்களை ஜனாதிபதி தான் சென்று பார்க்க வேண்டும் என்ற கட்டாய தேவை இல்லை. ஏனெனில் வடக்கின் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்தும் குரல் கொடுக்கின்றனர்.

அதேபோல் கிழக்கில் முஸ்லிம்களுக்கு குரல் கொடுப்பதற்கான அரசியல்வாதிகள் உள்ளனர். இவ்வாறிருக்க தெற்கின் சிங்கள அரசியல்வாதிகளும் தமிழர்களுக்கே குரல் கொடுக்கின்றனர்.

அவ்வாறாயின் சிங்கள மக்களை கவனிக்கப் போவது யார் என்பது கேள்விக்குறியான விடயம். அதனால் தமிழ்,முஸ்லிம் மக்கள் அரசியல் பிரதிநிதிகளை பார்த்தாவது சிங்கள அரசியல் தலைமைகள் மக்களுக்கு சேவை வழங்க முன்வர வேண்டும்.

மறுபுறம் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் வடக்கின் தமிழ் மக்களை மீள்குடியமர்த்துவதற்கான பிரதிநிதியாக மட்டுமே செயறபடுகின்றார்.

அவருக்கு மற்றைய இனத்தவர் தொடர்பில் அக்கறை இல்லை என்பதை அவரின் செயற்பாடுகள் ஊடாக காணமுடிகின்றது.

இவ்வாறிருக்க சிங்கள மக்கள் உதவி கோரும்போது ராஜபக்ஷக்களிடம் கேளுங்கள் என்பவர்கள் தமிழ் மக்கள் கேட்காத உதவிகளையும வடக்கிற்கு சென்று செய்து கொடுக்கின்றமை வேடிக்கையானது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பிரஸல்ஸ் தாக்குதல் எதிரொலி போலந்து அகதிகளை ஏற்க மறுப்பு



பிரஸல்ஸ் தாக்குதலை அடுத்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஒப்புதல் அளித்தபடி 7 ஆயிரம் அகதிகளுக்கு அடைக்கலம் வழங்க முடியாது என்று போலந்து பிரதமர்பேயாசைட்லோ மறுப்பு தெரிவித்துள்ளார்.

பெல்ஜியம்குண்டு வெடிப்புகளுக்கு பின்னர் கருத்து வெளியிட்டசைட்லோ, "போலந்துக்கு எந்தவொரு அகதியும் வர சாத்தியம் இல்லை" என்றார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடன ஏறபட்ட உடன்பாட்டுக்கு அமைய போலந்து இந்த ஆண்டில் 400 அகதிகளுக்கு அடைக்கலம் வழங்க வேண்டும்என்பதோடு எஞ்சியவர்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் போலந்தில் குடியமர்த்தப்பட வேண்டும்.

எனினும் அகதிகளை ஏறபதில் போலந்து தொடர்ந்து தயக்கம் காட்டிவந்தது. 28 ஐரோப்பிய ஒனறிய நாடுகளும் ஒரு இடைசதது 20 ஆயிரம் அகதிகளை பகிர்ந்து கொள்ளும் உடன்பாடு எட்டப் பட்டதாலேயே போலந்து 7 ஆயிரம் அகதிகளுக்கு அடைககலம்வழங்க வேண்டிஏற்பட்டது.

போலந்தில் அகதிகள் துஷ்பிரயோகத்திற்கு முகம் கொடுத்து வருவதாகவும் குற்றச்சாட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## திருட்டால் இந்நிலை

(கரணவாய்)

வடமராட்சி கப்பூதி பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை பூட்டப்பட்டுள்ளதால் அப் பகுதியில் வசிப்போர் நெல்லியடி நகரிற்கு சென்று பொருட்களை நுகரவேண்டி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளையில் அண்மையில் திருட்டுப் போயிருந்தது. இதனைத் தொடர்ந்து இக் கிளை பூட்டப்பட்டுள்ளது.

இதனால் அப் பகுதியில் மக்கள் வசிக்கும் 6 அரை கிலோ மீற்றர் தொலைவிலுள்ள நெல்லியடி நகருக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர். (இ-60)

# பிரதமரின் பிறந்த நாள் நிகழ்வின் போது...



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் 67 ஆவது பிறந்த தினத்தையொட்டி அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிறந்த நாள் நிகழ்வின் போது...


# தமிழ் சினிமா வரலாறு

127

## தெலுங்கில் 'அபூர்வ சிந்தாமணி' பாதி படம் தயாரான பின் கதாநாகன் நீக்கம்!

...அபூர்வ சிந்தாமணியின் மூன்று கேள்விகளுக்கு கதாநாயகன் விடை கண்டு பிடிப்பதே கதை. மூன்றாவது கேள்வி என்ன என்பதை கதாநாயகன் ஒரு அரசனிடம் கூறும் போது அவர் ஆத்திரத்துடன் கதாநாயகனை ஓங்கி அறைவார்.

தமிழ்ப் படத்தில் கதாநாயகன் பி.எஸ்.கோவிந்தன் அறையை வாங்கிக்கொண்டு டைரக்டர் சொன்னபடி நடித்தார். ஆனால் தெலுங்குப் பட கதாநாயகன் ஜக்கையா, அடி வாங்க மறுத்துவிட்டார். இப்படி அடி வாங்கும் காட்சியில் நடித்தால், ஆந்திராவில் என் இமேஜ் கெட்டுவிடும். அதற்குப் பிறகு என்னை யாரும் மதிக்க மாட்டார்கள். வேண்டுமானால் நான் வாங்கி அட்வான்ஸ் பணத்தை திருப்பிக் கொடுத்து விடுகிறேன். என்னை விட்டுவிடுங்கள் என்றார்.


பெற்ற மகனை விற்ற அன்னை

படம் பாதிக்கு மேல் தயாராகிவிட்டது. என்ன செய்வது என்று படத்தின் டைரக்டர்களான எஸ்.எஸ். லால்- எஸ்.டி.லால் இரட்டையர்கள் திகைத்தனர். இது பற்றி டி.ஆர்.சுந்தரத்தின் கருத்தை கேட்டறிய தீர்மானித்து, அப்போது சென்னையில் இருந்த அவருக்கு டெலி போன் செய்து, விடயத்தைத் தெரிவித்தனர்.

நான் ஒரு மணி நேரம் கழித்து உங்களுக்குப் போன் செய்கிறேன். அதுவரை படப்பிடிப்பை நிறுத்த வேண்டாம். ஜக்கையா இல்லாத காட்சிகளை படமாக்குங்கள் என்று பதில் அளித்தார் சுந்தரம்.

சொன்னது போலவே ஒரு மணிநேரம் கழித்து போன் செய்தார். ஜக்கையாவின் விருப்பப்படி அவரை சென்னைக்குத் திருப்பி அனுப்பி விடுங்கள். நான் புதிய கதாநாயகனோடு நாளை காலை வந்து சேருகிறேன் என்றார்.

அதன்படி மறுநாள் காலை புதிய கதாநாயகனாக நடிகர் காந்தாராவை அழைத்துக் கொண்டு சுந்தரம் சேலம் வந்து சேர்ந்தார்.

அந்த நேரத்தில் தெலுங்கில் காந்தாராவும் புகழ்பெற்ற நடிகர்.

காந்தாராவுக்காக புதிய உடைகள் தைக்கப்பட்டன. புதிய செட்டுக்கள் போடப்பட்டன.

ஜக்கையா நடித்த காட்சிகள் நீக்கப்பட்டு காந்தாராவை வைத்து மீண்டும் அக்காட்சிகளை படமாக்கினார், சுந்தரம். இதற்காக அவர் எடுத்துக்கொண்டது 15 நாட்கள்தான்!

தெலுங்கு அபூர்வ சிந்தாமணியும், தமிழ்ப் படத்தைப் போல் சூப்பர் ஹிட் படமாக அமைந்தது.

அதுமட்டுமல்ல, கன்னடத்திலும் டப் செய்யப்பட்டு கர்நாடகத்திலும் வெற்றிகரமாக ஓடியது,

### மலையாளத்தில் கலர்ப்படம்

மலையாளத்தில் முதல் பேசும் படத்தை (பாலன்) தயாரித்த டி.ஆர்.சுந்தரம், அந்த மொழியின் முதல் கலர் படத்தையும் தயாரிக்க முடிவு செய்தார்.

# கொம்பு சீவி விடப்பட்டுள்ள பொன்சேகா



இலங்கை அரசியலில் அண்மைக்காலமாக பொன்சேகாவின் உரையாடல் அதிகரித்திருக்கிறது. ஊடகங்களால் தவிர்க்க முடியாதளவு பொன்சேகாவின் பேச்சுக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் காணப்படுகின்றன. இழந்துபோன மதிப்பு மரியாதையை போராடி மீளப்பெற்றுக்கொண்டவர் என்பதையும். தாண்டி அவரது பெயர் எல்லாத் தரப்பிலும் அதிகம் பேசப்படுகிறது. அவரது பேச்சுக்களை கவனமாக அவதானித்தால், அவை பொதுமக்களின் சாதாரண பிரச்சினைகள் பற்றியவையாக இல்லாமல் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை குறிவைத்து தாக்குபவையாக இருப்பதை அதிகம் காணலாம். அதிலும் முக்கியமாக 2009 இல் முடிவடைந்த போர் தொடர்பாகவும் அதனை மையமாகக் கொண்ட சம்பவங்களையும் அதில் மகிந்த கூட்டணி இழைத்த பல்வேறு பொட்டுக்கேடுகளை போட்டுடைத்துக் காட்டும் சாட்சியமாகவும் அவை காணப்படுகின்றன.

இவற்றுக்கான காரணங்களையும் இதன் பின்னணிகளையும் சற்று ஆழமாக நோக்கினால் இலங்கை அரசியலில் நிழல்போல தொடரும் சில சம்பவங்களின் விளைவுகளாக இவை நடந்தேறிக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போரும் அதனால் இலங்கையால் அறிவிக்கப்பட்டு ஒற்றை தேசியவாதமும் சிங்கள மக்களை பொறுத்தவரை ஒரு போதை. அந்த போர் வெற்றி எனப்படுவது மகிந்தவினால் தான் சாத்தியமானது என்ற சிங்கள மக்களின் நினைவை இலகுவில் அழித்துவிட முடியாது. அந்த வெற்றி மமதை பல நூற்றாண்டு காலத்துக்கு நிலைத்திருக்கும் என்றுதான் மகிந்தவும் எதிர்பார்த்தார். ஆனால், மேற்குலகம் பின்னிய நுணுக்கமான இராஜதந்திர வலையில் அவர் முற்றாகவும் சிக்கி மூக்குடைபட்டுக் கொண்டார்.

மேற்கின் இந்த அரசியல் இராஜதந்திர கூட்டுவெற்றியினால் மகிந்த கூட்டணி ஆட்சிக்கட்டிலிலிருந்து அகற்றப்பட்டாலும் சிங்கள மக்களின் மனங்களில் அந்த சுத்திகரிப்பு முற்றாக நடைபெறவில்லை. அதை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினம் என்பது மேற்குலகுக்கும் தெரிந்தவிடயம்தான். ஆனால், உடனடி ஆட்சிமாற்றம் ஒன்றை ஏற்படுத்திவிடுவது என்பதை ஏக இலக்காகக் கொண்டு செயற்படவேண்டிய அவசர தேவை மேற்குலகுக்கு இருந்ததால் அதற்கப்பால் அவர்கள் இதுவிடயத்தில் அதிகம் செயற்றிறன் காண்பிக்கவில்லை.

ஆனால், இப்போது அந்த தேவை எழுந்திருப்பதையும் தாம் தொடர்ச்சியாக மௌனம் சாதித்தால் பகீரதப் பிரயத்தனங்களுக்கு மத்தியில் மைத்திரி தலைமையில் கொண்டுவந்த நல்லாட்சி செல்லாக்காசாகிவிடும் என்பதையும் மேற்கு உணரத் தொடங்கிவிட்டது.

இதற்கான காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்தால், புதிய உலக ஒழுங்கொன்றினை கட்டியெழுப்பி வருகின்ற சீனாவின் ஊடுருவலுக்கு முற்றாக வளைந்து கொடுத்த மகிந்தவின் ஆட்சியை கவிழ்த்து விடுவதற்கு சரத் பொன்சேகா ஊடாக மேற்குலகம் தீட்டிய திட்டங்கள் முதலில் தோல்வியடைந்து பின்னர் மைத்திரியின் ஊடாக அது வெற்றிபெற்று இன்று நல்லாட்சி கோசங்களின் ஊடாக ஒரு தலைகீழ் மாற்றத்தை இலங்கையில் ஏற்படுத்தியிருந்தாலும் மைத்திரி- ரணில் கூட்டு நிர்வாகம் மேற்குலகம் எதிர்பார்த்த செயல்திறனோடு நாட்டு மக்களின் நம்பிக்கையை வெல்லுமளவுக்கு எதையும் சாதிக்கவில்லை என்பதை மேற்குலகம் கவலையுடன் பார்க்க தொடங்கியிருக்கிறது.

நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்கான தீர்வோ, தமிழ்மக்கள் விடயத்தில் மேற்கொள்ள வேண்டிய உடனடி தீர்வு முயற்சிகளோ எதுவும் ஆரோக்கியமான பாதையில் பயணிப்பதாக தெரியவில்லை. பெரிதாக வெட்டிச் சாய்த்த எந்த சாதனைகளையும் செய்யாததால் இந்த கூட்டணி மீது மக்களுக்கும் பெரிதாக நம்பிக்கையிருப்பதாக தெரியவில்லை. எந்த திசையில் போவது என்று தெரியாமல் தேக்க நிலையில் நின்று குழம்பிப்போயுள்ள இந்த அரசாங்கம் எவ்வாறு தன்னை பாதுகாத்துக் கொள்வது என்பதும்கூட புரியாத புதிராகவே காணப்படுகிறது.

தன்முனைப்புடன் அடுத்த கட்டத்துக்கு காலடி எடுத்து வைப்பதற்கு வழி தெரியாமல் நிற்கும் இந்த அரசாங்கத்திற்கும் மகிந்த தலைமையிலான அணி தொடர்ச்சியாக சவாலாகவே இருந்து வருகிறது. ஒரே கட்சியிலிருந்து கொண்டு மகிந்த அணி கொடுக்கும் சவால்களை சமாளிக்கவும் முடியாமல் அதேவேளை வெளிப்படையாக எதிர்க்கவும் முடியாமல் மைத்திரி திணறிக் கொண்டிருக்க மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்கவோ இவர்களது குழாயடி சண்டைகள் மற்றும் உட்கட்சி குத்து வெட்டுக்களிலிருந்து மைத்திரியை மீட்டெடுத்து ஆட்சி இயந்திரத்தை நகர்த்த வேண்டிய கட்டாயத்தில் இன்னொரு திசையில் ஓடிக்கொண்டிருக்கிறார்.

இவையெல்லாம், ஆரோக்கியமான விடயங்களாக மேற்குலகின் பார்வைக்கு தெரியவில்லை. அதேநேரத்தில், இந்த குழப்பங்கள் மகிந்தவின் கரங்களை மேலும் வலுப்படுத்திவிடுமோ என்ற அச்சத்தைத்தான் அதிகம் ஏற்படுத்தியிருக்கின்றன.

(தொடரும்)

காலம் உண்மையைக் கண்டுபிடித்து உலகிற்கு வெளிப்படுத்தி விடும்.
- லத்தீன் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தீர்மானம் நிறைவேற்றும் அளவில் எங்கள் நிலைமை உள்ளது

65 ஆயிரம் வீட்டுத்திட்டம் தொடர்பில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் நடந்த வண்ணம் உள்ளன.

குறித்த வீடுகள் வடபுலத்து சூழமைவுக்கு பொருத்தமானது அல்ல என்பது பொதுவான கருத்து.

எனினும் 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தை அமுல்படுத்துவது என்பதில் மத்திய அரசு தீவிரமாக உள்ளது.

அதிலும் புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் வீட்டுத்திட்டத்தை அமுல்படுத்துவது என்பதில் உறுதியாக உள்ளார்.

ஒரு தமிழ் அமைச்சர் அதிலும் வடபுலத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் 65 ஆயிரம் வீட்டுத்திட்டதை அமுல்படுத்துவதில் கங்கணம் கட்டி நிற்கின்றார்.

அதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் குறித்த வீடுகள் எங்கள் மக்களின் வாழ்வியலுக்கு பொருத்தமற்றது என உறுதிப்படக் கூறியுள்ளார்.

ஆக, 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் தொடர்பில் மத்திய அரசு, மாகாண அரசுடன் கலந்து ஆலோசிக்கவில்லை. சம்பந்தப்பட்ட வீடுகள் தொடர்பில் முதலமைச்சருக்கோ மாகாண சபை உறுப்பினர்களுக்கோ தெளிவுபடுத்தவில்லை என்பது புரிகிறது.

இத்தகையதோர் நிலைமையானது மத்திய அரசு ஒன்றை நினைத்துவிட்டால் அதை மாகாணசபையின் அனுமதி, அங்கீகாரமின்றி அமுல்படுத்த முடியும் என்ற அதிகார தொனிப்பு தெரிகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமையவுள்ள வீட்டுத்திட்டம் தொடர்பில் மாகாண அரசுகளுக்கு தெரியப்படுத்துவது அவசியம்.

இதுதவிர அமைக்கப்படவுள்ள வீடுகளின் மூலப்பொருட்கள் வித்தியாசமானவை. வழமைபோல் கல், மண், ஓடு என்பவற்றால் அமைக்கப்படுகின்ற வீடாக இருந்தால் கூடப்பரவாயில்லை. வீடு கட்டிக்கொடுப்போம் என்று மத்திய அரசு நினைத்திருக்கலாம்.

ஆனால் அமைக்கப்படும் வீடுகளின் மூலப்பொருட்கள் வித்தியாசமானவை. இத்தகைய வீடுகள் வடபுலத்தில் முன்னமும் அமைக்கப்படவில்லை.

இந்நிலையில் வீட்டுத்திட்டம் தொடர்பில் வடக்கு மாகாண அரசுடன் கலந்தாலோசிப்பது, வடபுலத்தில் உள்ள புத்திஜீவிகளின் கருத்துக்களைப் பதிவு செய்வது என்பன கட்டாயமானதாகும்.

ஆனால்; அந்தச் செயற்பாடுகள் எவையும் நடக்கவில்லை. இதனால் மத்தியில் இருக்கும் தமிழ் அமைச்சரும், வடக்கு மாகாண முதலமைச்சரும் முரண்படுவதான தோற்றப்பாடு வெளிப்படுத்தப்படுகிறது.

அதாவது இரண்டு தமிழ் அமைச்சர்கள் இது விடயத்தில் முரண்பட்டுக் கொள்கின்றனர்.

எங்களுக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதுபோல் மத்திய அரசு நடந்து கொள்கிறது.

இங்குதான் தமிழர்கள் எந்த விடயத்திலும் ஒற்றுமைப்படமாட்டார்கள்; முரண்பட்டுக் கொள்வார்கள் என்ற கருத்து பதிவாகின்றது.

இது ஒருபுறமிருக்க, 65 ஆயிரம் வீட்டுத்திட்டம் வீடற்றவர்களுக்காக அமுலாகின்றதா? அல்லது அந்த வீட்டுத்திட்டத்தை அமைக்கவுள்ள நிறுவனத்துக்காக அமுலாகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது.

வீடற்றவர்களுக்காக வீடு அமைக்கப்படுவதாக இருந்தால் அவர்களுக்கு ஏற்றவாறு வீட்டை அமைப்பதே பொருத்தப்பாடாக இருக்கும்.

எது எப்படியாயினும் 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை வடக்கு மாகாணசபை நிறைவேற்றியமை ஆற்றாக்கொடுமையால் நடந்ததாகவே கருதவேண்டியுள்ளது.

எனவே, இனிமேலாவது மத்திய அரசு, மாகாண அரசுடன் சேர்ந்து இணங்கி ஒருமித்த கருத்துடன் வீட்டுத்திட்டத்தை அமைக்க முன்வரவேண்டும்.

யார் யார் முரண்பட்டாலும் அந்த முரண்பாட்டால் மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதே இங்கு கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும்.

# நாட்டிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த கல்வியை வழங்குவதே இலக்கு

## கெக்கிராவ மகாவித்தியாலயத்தில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

கெக்கிராவ மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று பிற்பகல் இடம்பெற்றதுடன் இதில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன பங்கேற்றார்.

கெக்கிராவ மத்திய மகா வித்தியாலயத்திற்கு அரச தலைவர் ஒருவர் விஜயம் செய்த முதலாவது சந்தர்ப்பமாக இது கருதப்படுவதுடன் அங்கு சென்ற ஜனாதிபதியை மாணவர்கள் மிக ஆரவாரத்துடன் வரவேற்று கல்லூரிக்கு அழைத்து சென்றனர்.

ஜனாதிபதிக்கு கல்லூரி மாணவர் படையணியினரால் விசேட அணி வகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது.

சீ.டப்ளியு.டப்ளியு.கன்னங்கரவின் இலவசக் கல்விக்கொள்கையின் கீழ் வடமத்திய மாகாணத்திற்கு உரித்தாகிய மத்திய மகா வித்தியாலயமாக கெக்கிராவ மத்திய கல்லூரி விளங்குகிறது.

ஒரு ஆசிரியருடனும் 31 மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில் இன்று மொத்தம் 2ஆயிரத்து 658 மாணவர்கள் கல்விகற்கினறனர்.

1993ஆம் ஆண்டு தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்ட கெக்கிராவ மத்திய கல்லூரி நாட்டிற்கு பயனுள்ள பிரஜைகள் பலரை உருவாககியுள்ளதுடன் நேற்று உயர்தர விஞ்ஞான, கணித, கலை, வர்த்தக துறைகளில் மாவட்டத்தின் முதற்தர சாதனைகள் பலவற்றை தனதாக்கிக் கொண்டுள்ளது. அவ்வாறே ஆண்டுதோறும் சுமார் நூறு மாணவர்கள் பல்கலைகழகத்திற்கு தகுதி பெறுகின்றனர்.

பரிசளிப்பு விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி, ஆரம்பக்கல்வி முதல் பல்கலைககழக கல்வி வரை நாட்டின் அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வியின் நன்மைகளை பெற்றுக்கொடுப்பதற்கு தற்போதைய அரசு பாடுபடுவதாக குறிப்பிட்டார்.

நாடுபூராகவுள்ளபாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து நாட்டின் அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த கல்வியை வழங்குவது அரசின் வேலைத்திட்டமாக உள்ளதென ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

தனது திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் மற்றும சான்றிதழ்களை இதன்போது ஜனாதிபதி வழங்கிவைத்தார்.

பல்கலைக்கழகத்திற்கு தகுதிபெற்ற மாணவர்களை பாராட்டி அவர்களுக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டது.

அவ்வாறே இசுறு சிறி பண்டார ஈறியகொல்ல எனும மாணவன் எழுதிய நொதெனுன சுவந்த சிறுகதை, ஏ.டப்.டி.வி.திவ்யாஞ்சலி மாணவி எழுதிய நியதெஸ் கவிதை தொகுப்பு ஆகியன ஜனாதிபதயிடம் ்கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் விஜயத்தை முன்னிட்டு கல்லூரியின் அதிபர் ஜனாதிபதிக்கு விசேட நினைவுப் பேழையினை வழங் கிவைத்தார்.

அவ்கன ரஜமகா விகாராதிபதி வண. சாஸ்திர வெள்ளி தம்மகித்தி நாயக்க தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர், கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், அமைச்சர்களான துமிந்த திசாநாயக்க, பி.ஹெரிசன், சந்திராணி பண்டார, வட மத்திய மாகாண ஆளுநர் பீ.பி.திசாநாயக்க, முதலமைச்சர் பேசல ஜயரட்ன, பாராளுமன்ற உறுப்பினர் சந்திம கமகே, ஜனாதிபதி யின் செயலாளர் பீ.பி.அபே கோன் ஆகியோரும் கல்லூரி அதிபர், ஆசிரியர் குழாம், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-12)

## புத்தாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய புத்தாண்டு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும்.

இந்நிகழ்வன்று நடக்கவிருக்கும் பல்திறன் போட்டிககான முன் தேர்வுகள் 10.04.2016 அன்று ஆலய மண்டபத்தில் நடைபெறும். திறமைகளை நடுவர்கள் முன்னிலையில் வெளிக்காட்டி தேர்வு செய்யப்படுபவர்கள் நிகழ்வன்று நடைபெறும் இறுதிச் சுற்றில் போட்டியிடலாம்.

1996 இற்கும் 2010 ஆம் ஆண்டுக்கும் இடையில் பிறந்த தென்மராட்சி கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்ட (கிராமசேவகர் பிரிவு ஜே/305) இருபாலாரும் பங்குபற்றலாம்.

நடுவர் முன்னிலையில் செயற்படுத்தக்கூடிய எல்லா திறமைகளும் ஏற்கப்படும்.

கவிதை வாசித்தல்- பாட்டுப்பாடல், நடனம், கட்டுரை எழுதுதல், ஓவியம் வரைதல்/ தீட்டுதல், பேச்சு, கைவேலை செய்தல், நிழற்படக் கலை- கலை வடிவங்கள் அமைத்தல், வாத்தியங்கள் மீட்டல், தைத்தல், வித்தைகள் புரிதல், நடித்தல், நகைச்சுவை நிகழ்வுகள் மற்றும் பல.

பங்குபற்ற விரும்புபவர்கள் வி.மயூரனுடன் (077 040 4234) தொடர்புகொண்டு பெயர்களை பதிவு செய்யுமாறு விழாக் குழுவினர் அறிவித்துள்ளனர். (இ)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் சங்கானை, பட்டினசபை வீதி, சம்மேளன காரியாலயத்தில்கடந்தஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இதன்போது நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது. இதில் க.புஸ்பராசா தலைவராகவும் செ.குமாரசிங்கம் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானப்படையினர் சிறப்பு பாதுகாப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்படும் விமானங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் புதிய விசேட திட்டம் ஒன்றை இலங்கை விமானப்படை நேற்று ஆரம்பித்துள்ளது.

விமானப்படையின் அணியொன்று இதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு நடைமுறைகளை நேற்று பார்வையிட்ட விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ககன் புலத் சிங்கள இது தொடர்பான உத்தரவை வழ ங்கியுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய முனையங்களில் விமானப் படையினரின் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், உள்வரும், வெளிச்செல்லும் பயணிகளும் விமானப் படையினரால் கண்காணிக்கப்படவுள்ளனர் என விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இங்கு 24 மணிநேரமும் விமானப்படையனரின் பாதுகாப்பு நடவடிக்கைகள்முன்னெடுககப்படவுள்ளன.

தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் இலங்கையை ஒரு நுழைவு வழியாகப் பயன்படுத்துவதாக தகவல்கள் கிடைத்ததையடுத்தே விமானப்படை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

35 தொடக்கம் 40 வரையான தமது நாட்டவர்கள் ஐ.எஸ் போன்ற தீவிரவாத அமைப்புகளில் இணைந்துள்ளதாக, மாலைதீவு அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது.

இதன் பின்னனியில் மாலைதீவு நாட்டவர்கள் வெளிநாடு செல்வதற்கு இலங்கையையே பெரும்பாலும் பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து **யாழ் பிரதேசத்தில்** மருதடி, அரசடி ஆசிரியர் வீதி, பெருங்குளம், பூதர்மடம், கோப்பாய் சந்தி, நாவலடி, இருபாலை, வட்டக்குளம், கட்டைப்பிராய, இலங்கைநாயகி, இராமலிங்கம், ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டு, கல்வியங்காடு, பாற்பண்ணை, முடமாவடி, கிளிகடை சந்தி, திருநெல்வேலி சந்தை ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** உணணாப்புலவு முல்லைத்தீவு நகரம், கள்ளப்பாடு, நாவற்காடு, கேபபாப்பிலவு, வற்றாப்பளை, முல்லைத்தீவு, விமானப்படை- I மற் றும் II, முல்லைத்தீவு 59 ஆவது படைப்பிரிவு (14 ESR-01 மற்றும் 14 ESR-02)SFHQ வற்றாப்பளை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக்கொடியவரை, வுஆஆ கல்லுடைக்கும்ஆலை ஆகிய பிரதேச ங்களில மின் தடைப்படும். (இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



எனது துணிவுடைய இளைஞர்களே, நீங்கள் அனைவரும் பெரும் பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். குட்டி நாய்களின் குரைப்பைக் கண்டு நடுஙகாதீர்கள். வானத்தில் முழங்கும் இடிக்கும் அஞ்சவேண்டாம்; நிமிர்ந்து நின்று வேலை செய்யுங்கள்.

உங்கள் நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகுக; ஒரு பாறையைப் போல் உறுதியாக நிற்பீர்களாக. உண்மையே எப்பொழுதும் வெல்கிறது. நாட்டினரின் இறுதிக் குழாய்களிலே ஒரு புதுவலிமையை ஊட்டும் புதியதொரு மின்சாரத்தீயையே. துணியுங்கள், துணியுங்கள் மனிதன் சாவது ஒருமுறையே. எனது சீடர்கள் கோழைகளாக இருக்கக்கூடாது. கோழைத் தனத்தை நான் வெறுக்கிறேன். மிக ஆழ்ந்த மன அமைதியைக் குலையாது போற்றுங்கள். அற்பர்கள் உங்களை எதிர்ப்பதை எள்ளளவும் பொருட்படுத்தாதீர்கள். கண்களும் காதுகளும் இரண்டே என்பதையும் ஆனால் வாய் ஒன்றே என்பதையும் கருத்தில் வையுங்கள். பெரும் பணிகள் யாவும் பலத்த இடையூறுகள் வாயிலாகவே கைகூடுகின்றன. ஆண்மையோடு முயலுங்கள். பெண்ணாசை, பொன்னாசை இவற்றிற்கு வசப்பட்ட அற்பர்களைப் பொருட்படுத்த வேண்டாம்.

# கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணம்

# விங்ஸ் அணியை வீழ்த்தி ஸ்ரான்லி 2வது சுற்றுக்கு தெரிவு



கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தி வரும் 30 பந்துபரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 5 ஆவது போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் ஸ்ரான்லி அணி,விங்ஸ் அணியை 63 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப் பெடு த்தாடிய ஸ்ரான்லி அணி 26.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 189 ஓட்டங்களை பெற்றது.

சுதர்ஸன்-36,மதன்-42, கஜதீபன்-14,விதுஸன்-31, கலைச்செல்வன்-23, ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் விங்ஸ் அணியை சார் ந்த சுரேன்-01,ஜெப்ஸன்-05,ஜெரி-01, ரெக்னோ-02 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விங்ஸ் அணி 21.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 126 ஓட்டங்களை பெற்றனர். யூட்-35,ஓநாசியஸ்-13, எட்வின்-21 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் ஸ்ரான்லி அணியை சார்ந்த விதுஸன்-02,துஸ்யந்தன்-02,பிரசன்னா-01, சுரேஸ்-01,கஜதீபன்-03 இலக்குகளை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு ஸ்ரான்லி அணி 6.52 புள்ளிகளையும் விங்ஸ் அணி 2.26 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சிவகுமரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக்கழகமும் மாலை 4.30மணிக்கு நடைபெறும் போட்டியில்அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகத்தைஎதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக்கழகம்மோதவுள்ளது . (க)

## உதைபந்தாட்ட லீக் அங்குரார்ப்பணம்

வடமராட்சிக் கிழக்கு உதைபந்தாட்ட லீக் ஆனது 11.03.2016 அன்று மருதங்கேணி பிரதேச செயலகத்தின் மகாநாட்டு மண்டபத்தில் பிர தேச செயலாளர் க.கனகேஸ்வரனால் உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன் தலைவராக த.நி. நிமல்ராஜ், செயலாளராக வே.பிரசாந்தன், பொருளாளராக ஜெய முகுந்தன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

உப செயலாளராக பு.செந்தூரன், பிரதித்தலைவர்களாக ரசிகரன், சுரேஸ்குமார், இலட்சுதன், சிவநேசன், சுஜித், சிவகர்ண்ணன், அல்வின்டயஸ் ஆகியோரும் இப்போசக ராக மருதங்கேணி பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.(க)

## திக்கம் காற்பந்தாட்ட தொடர் அடுத்த சுற்றில் வல்வை, நவசக்தி

திக்கம் காற்பந்தாட்டத் தொடரில் வல்வை விளையாட்டுக்கழகம் மற்றும் நவசக்தி விளையாட்டுக்கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறி யுள்ளன.

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டி குறித்த ்மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழகமும் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதின. ஆட்டத்தில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய வல்வை அணி 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்களுக்கு முன்னேறியது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானகலா விளையாட்டுக்கழகமும் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதின. ஆரமபம் முதல் இறுதிவரை பரபரப்பாகவும் விறுவிறு ப்பாகவும் இடம்பெற்ற ஆட்டத்தில் 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுப் போட்டிகளுக்கு முன்னேறியது. (க)

## நெல்லியடி மத்திய கல்லூரி இறுதியாட்டத்துக்கு தகுதி



வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 15வயது பிரிவினருக்கான காற்பந்தாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

மைக்கல் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்ட மொன்றில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மணற்காடு றோ.க. பாடசாலை அணி மோதியது.

ஆட்டத்தின் முதல் பாதியில் மணற்காடு றோ.க பாடசாலை அணிக்கு ஏகப்பட்ட வாய்ப்புக்கள் அமைந்த போதிலும் எந்தவொரு வாய்ப்புமே கோலாக மாற்றம் பெறவில்லை.

கோல்கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முடிவடைந்தது. முதல் பாதி இரண்டாம் பாதியில் இரு அணிகளும் இடைவிடாத போராட்டத்தை வெளிப்படுத்த சமநிலைத்தவிர்ப்பில் இறுதிக்குச் செல்லும் அணி தீர்மானமாகும் நிலைமை ஏற்பட்டது.

சமநிலைத் தவிர்ப்பில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (க)

## பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டம் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி சம்பியன்

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 15 வயது,17வயது இரு பிரிவிலும் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைசுவீகரித்துள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இறுதியாட்டங்கள் நடைபெற்றன.

15வயதினருக்கான இறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணியை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலய அணி மோதியது.

இதில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 25:19, 25:9, என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது மூன்றாமிடத்தை ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணி பெற்றது.

17வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி அணி மோதியது.

இதில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 25:17, 25:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. மூன்றாமிடத்தை அத்தியார் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது. (க)

## கரவெட்டி பிரதேச விளையாட்டு விழா

கரவெட்டி பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராக வருகை தந்து இவ் விளையாட்டுவிழாவினை சிறப்பிக்கவுள்ளார்.

எனவே பங்குபற்றும் அனைத்து விளையாட்டுக்கழக உறுப்பினர்களையும் விளையாட்டு ஆர்வலர்களையும் குறித்த நேரத்திற்கு தவறாது வருகை தந்து பிரதேச விளையாட்டு விழா சிறப்புற அமைய ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ

## கந்தையா சுப்பிரமணியம் ஞாபகார்த்த மென்பந்தாட்டம்

அமரர் கந்தையா சுப்பிரமணியத்தின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மென்பந்து சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும் போட் டியில் செங்கொடி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழகமும் காலை 9.30மணிக்கு நடைபெறும் போட்டியில் ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து எல்லாளன் A விளையாட்டுக்கழகமும்

முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சில்லஸ்ரார் விளையாட் டுக்க ழகத்தை எதிர்த்து தந்தை செல்வா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (க)

## ஜொலிஸ்ரார் சம்பியன்


நெடுங்கேணிபிரதேசசெயலக கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான காற்பந்தாட்டத்தில் நெடுங்கேணி வடக்கு ஜொலிஸ்ரார் அணி சம்பியனாகியுள்ளது.

நெடுங்கேணிபொதுவிளையாட்டு மைதானத்தில் அண்மையில் இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் நெடுங்கேணி வடக்கு ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து நெடுங்கேணி தெற்கு மத்தி விளையாட்டுக்கழக அணி மோதியது.

கோல் கணக்கு ஆரம்பமாகாமல் முடிவடைந்தது முதல் பாதி.இரண்டாம் பாதியின் 12 ஆவது நிமிடத்தில் ஜொலிஸ்ரார் அணி முதல் கோலைப் பதிவு செய்தது. அந்தக் கோலே ஆட்டத்தின் ஒரே கோலுமாக முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (க)

# கூட்டு எதிர்க் கட்சியினரின் செயற்பாடுகளால் நாட்டில் பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க சாடல்



(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சி என்று கூறும் அணியினர் இணைந்து ஆடி வரும் நாடகம் காரணமாக நாட்டில் பாரிய பிரச்சினை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்திற்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை நேற்று மேற்கொண்டிருந்த அமைச்சர் ஊடகங்களிடம் இதனை கூறியுள்ளார்.

சிறிய கட்சிகளை சேர்ந்தவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்து கட்சியை அழிக்கும் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ தற்போது ஜனாதிபதியாக இருந்தால், தற்போது செயற்படுவது போல், செயற்படும் கட்சியினர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டிருப்பர். சிலர் உயிருடன் இருந்திருக்கவும் மாட்டார்கள்.

நாட்டுக்கும் ஒரு கட்டுப்பாடு இருகக வேண்டும் என்பது போல் கட்சிக்கும் கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும். ஒழுக்கமும் கட்டுப்பாடு இல்லாத இடத்தில் நியாயமும் இருக்காது நல்லதும் நடக்காது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் இல்லாது போயுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியை நேசிப்பவர். கட்சியை பாதுகாக்க வேண்டுமாயின் ஒழுக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இல்லாவிட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அழிந்து போகும். பண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க, சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோர் உருவாக்கிக் கொடுத்த கட்சியை கீழ் மட்டத்திற்கு கொண்டு செல்ல முயற்சித்து வருகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், இதனை தடுத்து நிறுத்த முடியும். இரண்டு பிரதான கட்சிகளும் நாட்டில் இருக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு பிரதான கட்சிகள் நாட்டில் இல்லை என்றால், நாட்டில் ஜனநாயகம் இல்லாமல் போகும் எனவும் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். (செ-12)

# கடந்த அரசாங்க உறுப்பினர்களுடன் இந்த அரசுக்கு ஒப்பந்தம் உண்டு!

## விஜித ஹேரத் விசனம்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் சில உறுப்பினர்களுடன் இந்த அரசாங்கம் உடன்பாடுகளை வைத்துக் கொண்டுள்ளதாக ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவுடன் அரசாங்கம் இரகசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சஜின் வாஸ் குணவர்தனவிற்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. எனினும் அரசியல் இணக்கப்பாடுகளின் அடிப்படையில் சஜின் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அரசாங்கத்தினால் சஜினுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் அரசியல்வாதிகளுடன் இந்த அரசாங்கம் பேணி வரும் இரகசிய அரசியல் இணப்பாடுகள் குறித்து ஜே.வ.பி தொடர்ந்தும் குரல் கொடுக்கும்.

கடந்த அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்படும் வரையல்ஜே.விபிதனது போராட்டங்களை கைவிடாது.

ரகர்வீரர் வசிம்தாஜுடின் கொலை தொடர்பான சந்தேக நபர்கள் உள்ளிட்ட பலரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (செ-12)

## யானைக் குட்டிகள் மீட்பு

சட்டவிரோத அனுமதிப்பத்திரங்களுடன்வளர்க்கப்பட்ட இரண்டு யானைக் குட்டிகளை மீட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு அனுமதிப்பத்திரமின்றி வளர்க்கப்பட்ட 37 யானைகள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மீட்கப்பட்ட யானைகளில் 18 யானைகள் பின்னவல யானைகள் சரணாலயத்திலும், 12 யானைகள் உடவலவை யானைகள் சரணாலயத்திலும், மேலும்4 யானைகள் உடவலவ யானைக் காப்பகத்திற்கும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினருடன்இணைந்து சட்டவிரோதமாக வளர்க்கப்பட்ட யானைக் குட்டிகளை தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் வன ஜீவராசிகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (செ-12)

## விமல் வீரவன்ஸ...

ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டில் புத்திசாலியான மக்கள் இருப்பதால், பெரிய ஒப்பந்தங்களை போட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமல் வீரவன்ஸ சிறையில் இருக்க வேண்டியவர். நல்லாட்சி அரசின் சட்டம் இதுதானா! என அவர் இதன் போது கேள்வி எழுப்பியுள்ளார்.

சட்டம் அனைருக்கும் சமமாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக சட்டத்தை செயற்படுத்த வேண்டும் எனவும் இதன்போது தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ஸ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விமர்சித்த போதிலும் பிரதமர் ர்ணில் விக்ரமசிங்கவை எப்போதும் விமர்சிப்பதில்லை. இதற்கு காரணம் என்ன என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிபெற செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொது எதிரிக்கு எதிராக இவ்வாறு செயற்படவில்லை எனில் அடுத்த 20 வருடங்களுக்கு எதிர்க்கட்சியிலேயே இருக்க நேரிடும் எனவும் புத்ததாச குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## உதவி வழங்க...

யில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் உண்மையை அறிந்து கொள்ளவும், நீதி பெற்றுக்கொள்ளவும் நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாரிய மனித உரிமை மீறல்களை தடுப்பதற்கு இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் பாதிப்புக்களை எதிர் நோக்கிய தனிப்பட்ட நபர்கள் மற்றும் தரப்புக்கள் உண்மையை அறிந்து கொள்ள உரிமையுடையவர்கள் என அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## 177 ஏக்கர்...

கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த நிலப்பகுதியில், விதுர என்ற பாரிய கடற்படைத்தளம் அமைக்கப்பட்டிருந்தது.

நேற்று சம்பூரில் நடந்த காணிகள் விடுவிப்பு நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கிழக்கு மாகாண ஆளுனர், முதல்வர், அமைச்சர்கள், மற்றும் இலங்கை பாதுகாப்புச் செயலர், கடற்படைத்தளபதி உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். (செ-12)

## 120 பேரிடம்...

வினரால் 120 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதில் 23 பேர்புதிதாக விசாரணைகளுக்கு கலந்து கொண்டுள்ளனர். இங்கு பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் தமது உறவுகளை தொலைத்தவர்கள் வருகைதந்து முறைப்பாடுகளை பதிவு செய்தனர்.

ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம தலைமையில் இடம்பெற்ற விசாரணைகளில் மரணச்சான்றிதழ்களை பெறுமாறும் நட்டஈட்டைப்பெறுமாறு உறவுகளை கோரிய போதும் எமக்கு எமது உறவுகளே வேண்டும் நட்ட ஈடுவேண்டாமென உறுதியாக தெரிவித்தனர்.

அத்தோடு காணாமல் போனோரின் உறவினர்கள் வழமையான ஏக்கத்துடன் அழுது புலம்பியவாறு தமது முறைப்பாடுகளை பதிவு செய்தனர்.

இவ்வாறு நாம் 7 வருடமாக பதிவுபதிவென அலைகிறோம் எமது பிள்ளைகளை மீட்டுத்தராது பதிவுகளை மட்டும் மேற்கொள்கின்றோம்.

இன்னும் எவ்வளவு நாள்தான் நாம் இவ்வாறு வீதிகளில் அழுது புலம்புவதும் பதிவதுமென திரிவது? எம்மை அலைக்களிக்காது எமக்கு எமது உறவுகளை மீட்டுத்தருமாறு தாய் ஒருவர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழுவின் விசாரணைகள் நாளை மற்றும் நாளை மறுதினமும் அங்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-281)

## பல்லின மக்களுக்கும்...

அகில இலங்கை கம்பன் கழகம் கொழும்பில் நடத்தும் கம்பன் விழாவில் நேற்றைய இரண்டாம் நாள் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க மேலும் கூறுகையில்,

எங்கள் நாட்டில் எதிர்மறையான சிந்தனைகளே அதிகரித்துள்ளன. இவற்றால் பொதுமக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். இலங்கை பல்லின மக்கள் வாழுகின்ற ஒரு நாடு.

இங்கு அவரவர் தத்தம் இன, மத, மொழி சார்ந்து தமது பண்பாடு, கலாசாரங்களை பேணும் உரிமையைக் கொண்டவர்கள். இலங்கையின் அரச கரும மொழி சிங்களம் மட்டுமல்ல தமிழ் மொழியும் தான்.

இதனை அரசு முழுமையாக அமுல்படுத்த வேண்டும் தமிழ் பகுதிகளில் சிங்களப் பொலிஸார் சிங்களத்தில் முறைப்பாடுகளைப் பதிந்துவிட்டு தமிழ் மக்களிடம் கையெழுத்து பெறுகின்றனர்.

அந்த கையெழுத்தானது முறைபபாட்டை வாசித்து விளங்கிக் கொணடதற்கானது. சிங்களம் தெரியாத ஒரு தமிழர் அதை எப்படி வாசிக்க முடியும் அப்படியானால் கையெழுத்து பெறுவது நியாயமானதா? என்று நாம் சிந்திக்க வேண்டும்.

எமது நாட்டில் இருக்கக் கூடிய எதிர்கணியச் சிந்தனைகளை மாற்றுகின்ற ஆற்றல் இனமத மொழி கடந்து செயற்படும் அகில இலங்கை கம்பன் கழகத்திற்கும் அதன் அமைப்பாளர் கம்பவாரிதி ஜெயராஜ்ற்கும் உண்டு என்றார்.

நேற்றைய 2ஆம் நாள் நிகழ்வில் தலைமை உரையை பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## யுத்தம் பற்...

நல்லிணக்கத்தை நோக்கி முன் நகர வேண்டுமாயின் யுத்தம் பற்றிய பின்னணி மற்றும் அது குறித்த ஏதுக்களை அறிந்து கொள்ள வேணடியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச உண்மை அறியும் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உண்மையை கண்டறியும் பொறிமுறைமையை சீர்குலைப்பதற்கு சில அரசியல் தலைமைகள் முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னரும் யுத்தத்தின் போதும் சில அரசியல் தரப்புக்கள் மக்கள் மத்தியில் பிளவினை ஏற்படுத்தவே முயற்சித்து வருகின்றன.

யுத்தம் காரணமாக உறவுகளைப் பிரிந்தவர்கள் காணாமல் போனவர்கள் வடக்கு கிழக்கில் மட்டும் இல்லை அவர்கள் தெற்கிலும் இருக்கின்றார்கள்.

எனவே நாட்டில் இடம்பெற்ற இறுதியுத்தம் தொடர்பில் புதிய அரசாங்கம் உண்மையைக் கண்டறிவது தொடர்பிலான பொறிமுறையை சுயாதீனமாக உருவாக்க வேண்டும்.

கடந்த காலங்களில் வெறுமனே ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என சந்திரிகா தெரிவித்துள்ளார். (செ-12)

## 52 இலட்சம் ரூபாய் பெறு...

ழமை மாலை மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப்பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியதகவலை அடுத்து குறித்த கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

14 பொதிகளில் அடைக்கப்பட்ட கேரள கஞ்சாபொதிகளை கல்லாறு கடற்கரைப்பகுதியில் போதைப்பொருள் கடத்தல் காரர்கள் தூக்கி எறிந்துவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

மீட்கப்பட்ட கஞ்சாபொதிகள் 51 கிலோ 500 கிராம் எடைகொண்டது எனவும், சுமார் 52 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதிவாய்ந்தது எனவும் மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த கஞ்சா பொதிகள் மன்னார் சிரேஷ்ட பொலிஸ் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் எவரும் நேற்றிரவு வரை கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் மீட்கப்பட்டுள்ள கஞ்சா பொதிகள் தொடர்பில் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மன்னார் பொலிஸ் நிலையத்தின் மாவட்ட போதைப் பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரி உதவி பொலிஸ் பரிசோதகர் எச்.எம்.டபில்யு.ஹெரத் தெரிவித்துள்ளார். (செ-2,281)

## நாட்டில் நிலவும் கடும் வெப்...

இந்த நிலையில், கடுமையான வெப்ப நிலை உடல் உறுப்புக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவகையில் அமைந்துள்ளதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இருதயம், மூளை, சிறுநீரகம் உள்ளிட்ட பல்வேறு உடல் உறுபபுக்கள் பாதிக்கப்படுவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிகள் அதிக நேரம் வெய்யிலில் இருப்பதனை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணிகள் வெப்பத்தில் இருப்பதனால் கருக் கலையக்கூடிய ஆபத்து காணப்படுவதாக மகப்பேற்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகளவு நீரை பருகுவதன் மூலம் ஓரளவு இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என ஆலோசனை வழங்கியுள்ளனர். (செ-12)

# ECONOMICS HALL

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 2018**

கலை
வர்த்தகம்

காலை 9.00 மணி

**ஆரம்பம் : 02.04.2016**

**வர்த்தகப்பிரிவு நேரசூசியுடன்**

| | | |
|---|---|---|
| பொருளியல் | - உதயன் | 10-11 (சனி, ஞாயிறு) |
| கணக்கீடு | - AP.பகீரதன் | 11-12 (சனி, ஞாயிறு) |
| வணிகக்கல்வி | - யசோதரன் | 9-10 (சனி, ஞாயிறு) |

- பெற்றோரே நல்நாளிலே உங்கள் பிள்ளைகளின் உயர் கல்வியை எம்முடனே ஆரம்பியுங்கள்.
- வர்த்தகப்பிரிவு 2018 மாணவருக்கு 9.00 மணிக்கு தொடங்கும் வகுப்புக்கள் 12.00 மணிக்கு நிறைவு பெறும். இந்நேரம் தவிர பிள்ளைகள் உங்களது அரவணைப்பில் உள்ளனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- எம்முடன் இணைந்து உங்கள் பிள்ளைகளின் உயர்தர உயர்ந்த பெறுபேற்றை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- தொடர்புக்கு: சிரேஷ்ட ஆசான் உதயன்
**0778002376** நிர்வாக இயக்குனர்

(4006)



# வேலைவாய்ப்பு

கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆடைத் தொழிலகத்துக்கு (Garments) நன்கு தையல் அனுபவமுள்ள ஆண்கள் தேவை. நேர்முக தேர்வு எதிர்வரும் ஞாயிறு (27/03/2016) அன்று இடம்பெறும்.

இடம்: T.K Garments
No-53/2,
பழைய கச்சேரியடி,
கிளிநொச்சி.

**மேலதிக தொடர்புகளிற்கு:**
**உ.தீபன்**
**0777 -482050**

(4005)



**O/L DAY CLASS**

பிரிவு -1 ஆரம்பம்
28.03.2016
திங்கள் காலை 8.00 மணி

- யாழ் நகரின் No-1 கல்வி நிறுவனம்
- திங்கள் முதல் வெள்ளி வரை – வாரத்தில் 5 நாட்கள்
- ஒவ்வொரு பிரிவிலும் 60 மாணவர்கள்
- அலகுப் பரீட்சைகளும், மாதாந்தப் பரீட்சைகளும்

தொடர்புகளுக்கு
புதிய **நாவலர்** கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
TP - 0774598440

(C-4135)


## 8 கிலோ கஞ்சா...

கையில் 8 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கஞ்சா வைக்கொண்டு சென்றவர் தப்பியோடியுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா கடத்தப்படுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இராசபாதை வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார், மோட்டார் சைக்கிள் ஒன்றை மறித்துள்ளனர். பொலிஸாரைக் கண்டதும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் தான் வைத்திருந்த பொதியை கீழே எறிந்துவிட்டு மோட்டார் சைக்கிளைத் திருப்பிக்கொண்டு தப்பித்துச் சென்றுள்ளார்.

பொலிஸார், பொதியை எடுத்துச் சோதனை செய்த போது, அதில் 8 கிலோகிராம் கஞ்சா இருந்துள்ளது. தப்பிச் சென்றவரின் மோட்டார் சைக்கிள் இலக்கத்தைக் குறித்து எடுத்துக் கொண்டுள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு தப்பி சென்றநபர் அப்பகுதியை சேர்ந்தவராக இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அண்மைக்காலங்களாக யாழ்.மாவட்டத்தில் கஞ்சா மற்றும் ஹெரோயின் போன்ற போதைப்பொருட்கள் அதிகம் கடத்தப்பட்டு அக்கடத்தல்கள் பொலிஸாரினால பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸார் இவை தொடர்பில் நடவடிக்கை எடுத்து வருகின்ற போதிலும், கடத்தல்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-4)


புத்திசாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு

**ஞானோதய அக்கடமி** சங்கத்தானை, சாவகச்சேரி

**A/L 2018**

| கலை | வர்த்தகம் | தொழில்நுட்பம் | கணிதம் | உயிரியல் |
|---|---|---|---|---|

**ஆரம்பம் : 26-03-2016 - சனி - 8.00 மணி**

- யாழ் மாவட்ட பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை
- இம்முறை தொழில்நுட்பப் பிரிவில் செயன்முறை வழிகாட்டல்களுடன் துறைசார் நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்கள் குழாம்
- A/L Day Class வகுப்புக்களும் சிறப்பாக நடைபெறுகின்றது

- நிர்வாகம்

(3995)



**இரசாயனவியல்**

மெல்லக் கற்கும்
மாணவர்களுக்கான விசேட
குழுநிலை வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| A/L - 2016 | திங்கள், புத, வெள் | 6.00 காலை |
| | சனி,ஞாயிறு | 5.00 பி.ப |
| A/L - 2017 | சனி, ஞாயிறு, | 6.00 காலை |
| | செவ்,வியா | 5.00 பி.ப |
| A/L - 2018 | திங்கள், புத, வெள் | 5.30 பி.ப |

அறிவாலயம்
பல்கலைக்கழகம் முன்பாக
தொடர்புகளுக்கு : 0778449739

(4015)



இன்று ஆரம்பம்...

**NAC மானிப்பாய்**

**A/L - 2018**
பிரிவு-II
வர்த்தகப்பிரிவு

ECO - ஜெயக்குமார்
ACC - வின்சன்
BUSI - பிரதீபன்

**Contact - 0766483837**

(4015)


## காணாமல் போன...

அந்த தாயிடம் ஆனைக்குழு அதிகாரிகள், நீங்கள் உங்களுடைய மகன் உயிரோடு இருப்பாரென நம்புகிறீர்களா? என வினவினர்.

இதற்கு எனது மகன்உயிரோடுதான இருக்கிறார் என அந்தத் தாய் உறுதியாக தெரிவித்தார்.

உங்கள்மகனை நாங்கள் தொடர்ந்து தேடுவோம். அதுவரை உங்களுக்கு ஏதாவது உதவிகள் கொடுப்பனவுகள் செய்ய வேண்டுமா என வினவியதற்கு இல்லை நான்கொடுப்பனவை விரும்பவில்லை எனக்கு பிள்ளை தான் வேண்டுமெனவும் தாய் தெரிவித்தார்.

பிள்ளை இருந்தால் உங்களுடன் தொடர்பை ஏற்படுத்தியிருப்பார் என கூறியதற்கு, இல்லை அப்பிடியென்றில்லை இப்ப எங்களுடன் தொடர்பு கொள்ளமுடியாத நிலையில் கூட அவரை வைத்திருக்கலாம் எனக்கு எந்த கொடுப்பனவும் தேவையில்லை. இரண்டு பிள்ளைகளை ஏற்கனவே பறிகொடுத்துவிட்டேன்எனவே இந்த பிள்ளையை எப்பிடியாவது கண்டு பிடித்து என்னிடம் ஒப்படைக்குமாறு வேண்டுவதாக அந்த தாய் கண்ணீருடன் தெரிவித்துள்ளார். (செ-281)


# மரண அறிவித்தல்

## திருமதி பார்வதி வைரவநாதன்



நகுலேஸ்வரா வீதி கீரிமலையைப் பிறப்பிடமாகவும் லண்டன் South hall வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி வைரவநாதன் 14-03-2016 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் வைரவநாதன் (முன்னாள் உரிமையாளர் - திருப்பதி றெக்ஸ் நவீன சந்தை யாழ்ப்பாணம், உரிமையாளர்- பிரகலாத்பவன் சைவ உணவகம் கீரிமலை) அவர்களின் அன்பு மனைவியும், பிரகலாதன் (கண்ணன் -கனடா), அருண்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை மற்றும் சுப்ரமணியம், இராசமலர், காலஞ்சென்ற பேபி மற்றும் வைரவநாதன், திருநாவுக்கரசு(திருணன்), நவரட்ணம்(நவம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் செல்லமுத்து இராசம்மா, காலஞ்சென்ற அன்னபாக்கியம் மற்றும் இராஜரட்ணம், பாக்கியலட்சுமி, யோகேஸ்வரி காலஞ்சென்ற கந்தேஸ்வரி, சின்னத்தம்பி மற்றும் சுசிலாதேவி(சுசிலா), சரோஜினிதேவி(சறோ) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரிகைகள் 27.03.2016 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வைரவநாதன் (கணவர்)
கண்ணன் , அருண் - மகன்மார்

நகுலேஸ்வரா வீதி,
கீரிமலை.

(C-4136)



# மரண அறிவித்தல்

## அமரர் கணபதிப்பிள்ளை இராமநாதன்



இந்துக்கல்லூரி வீதி, வடலியடைப்பு பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் பென்சில்வேனியா அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராமநாதன் அவர்கள் கடந்த 14.03.2016 அன்று அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகாதேவன் (பராசக்தி விலாஷ் அனுராதபுரம்), கந்தசாமி, லோகநாதன் (கனடா) ஆகியோரின் சகோதரனும் யசோதரதேவி, பவானி, வாணிஸ்ரீ ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீதேவி, ஸ்ரீமோகன், கீர்த்தனா ஆகியோரின் சித்தப்பாவும் தர்மிகாவின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27.03.2016 ஞாயிற்றுக் கிழமை நண்பகல் வடலியடைப்பு, பண்டத்தரிப்பில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்துக்கல்லூரி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
சகோதரன்
க.கந்தசாமி

(C-4002)



**ஊழியர்கள் தேவை**

எமது நிறுவனத்திற்கு பெண் ஊழியர்கள் தேவை. சுயவிபரக் கோவையுடன் 31.03.2016ற்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும்

பிரகாஷ் எலக்ரோனிக்ஸ்
C6, நவீன சந்தை,
பருத்தித்துறை.
தொலைபேசி
0217900223
0773222837


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.